# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

டிசம்பர் - 2016
பருவம் 3 புனல் 27

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20

# பெண்களை இழிவுபடுத்தும் சாஸ்திரங்களைக் கொளுத்துவோம்!



காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
எரிதழல்
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
சேயூர் செந்தில்குமார்

சட்ட ஆலோசனைக்குழு:
வழக்கறிஞர் கிருட்டிணக்குமார்
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரம் & விற்பனைத் தொடர்பு:
சி. விஜயன் 94881 79109
ஜீவாநகர் குமார் 99944 77013
கடத்தூர் காந்தி 99428 76665

ஆன்லைன் சந்தா – நன்கொடை:
பெரியகுளம் குமரேசன் 99943 65133

ஆண்டுக்கட்டணத் தொடர்பு:
திருப்பூர் வேணி 77084 58086

வடிவமைப்பு:
முகில் மீடியா 97873 20044

அச்சு:
க்ரியேட்டிவ் க்ராஃபிக்ஸ், சென்னை

உரிமை, வெளியீடு, ஆசிரியர்:
சி.விஜயராகவன் 99762 56821

பொறுப்பாசிரியர்:
சி. இராவணன் 97868 89325

# இந்துமத அழிப்புக் கடமையில் முழுவீச்சில் திராவிடர் இயக்கங்கள்



திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆகிய மூன்று திராவிடர் இயக்கங்களும் நடத்திய, நடத்த உள்ள மாநாடுகள், ஜாதி, மத அழிப்பில் அக்கறை கொண்ட அனைவருக்கும் பெரும் நம்பிக்கையைக் கொடுத்துள்ளன.

திருவாரூரில் திராவிடர் கழகம் கடந்த 17.12.2016 அன்று திராவிடர் மகளிர் எழுச்சி மாநாட்டை நடத்தியுள்ளது. அந்த மாநாட்டில் பெண் விடுதலைக்குத் தடையாக உள்ள மனுசாஸ்திரத்தைக் கொளுத்தும் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தோழர் வீரமணி அவர்களது உரையில்,

நம் நாட்டு சாத்திரங்களும், இதிகாசங்களும், வேதங்களும் பெண்களை ஒரு மானுடக் கூறாகவே பார்ப்பதில்லை. அடிமையாக மட்டுமல்ல; இழிவான பிறவிகளாக, கேவலமாகப் பேசுகின்றன. என் கையில் இருப்பது அசல் மனுதர்மம். அதன் ஒன்பதாவது அத்தியாயம் 14–ஆம் சுலோகம் என்ன சொல்லுகிறது?

“மாதர் ஆடவரிடத்தில் அழகையும், பருவத்தையும் விரும்பாமலே ஆண் தன்மையை மாத்திரமும் முக்கியமானதாக எண்ணி அவர்களைப் புணருகிறார்கள்.’’

**15 ஆம் சுலோகம் என்ன கூறுகிறது?**

“மாதர்கள் கற்பு நிலையின்மையும், நிலையா மனமும் நண்பின்மையும் இயற்கையாக யுடையவராதலால் கணவனால் காக்கப்பட்டிருப்பினும் அவர்களை விரோதிக்கிறார்கள்.’’

**16 ஆம் சுலோகம் அதைவிட மோசம்.**

“மாதர்களுக்கு இந்த சுபாவம் பிரமன் சிருட்டித்த போதே யுண்டானது என்றறிந்து ஆடவர்கள் அவர்கள் கேடுறாமல் நடப்பதற்காக மேலான முயற்சி செய்ய வேண்டியது’’

*என்கிறது மனு. இன்னும் எத்தனையோ இருக்கின்றன. இதிகாசங்களும், உபநிஷத்துகளும், வேதங்களும் இந்த வகையில்தான் எழுதப் பட்டுள்ளன.*

*திருவாரூரில் நடக்கும் இந்த எழுச்சிமிக்க திராவிடர் மகளிர் மாநாட்டில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிடுகிறேன்.*

*அன்னை மணியம்மையார் பிறந்த நாளான வரும் மார்ச் 10 ஆம் தேதியன்று பெண்களை இழிவுபடுத்தும் இத்தகைய நூல்களைக் கொளுத்துவோம்! “இந்தப் போராட்டத்துக்குப் பெண்களே எங்கும் தலைமை தாங்குவார்கள்” என்று அறிவித்துள்ளார்.*

*அதேபோல திராவிடர் விடுதலைக் கழகம் வரும் டிசம்பர் 24 ல் வேத மரபு மறுப்பு மாநாட்டை நடத்த உள்ளது. ஏற்கனவே 2012 ல் இதே டிசம்பர் 24 ல் மனுசாஸ்திர எரிப்பு மாநாட்டையும், 2013 ஏப்ரல் 14 ல் மனுசாஸ்திர எரிப்புப் போராட்டத்தையும் வெற்றிகரமாக நடத்திய அமைப்புதான் திராவிடர் விடுதலைக் கழகம். 2013 க்குப் பிறகு மீண்டும் இந்து மதத்தின் அஸ்திவாரமாக உள்ள வேத, சாஸ்திரங்கள் உண்டாக்கிய மரபுகளுக்கு எதிராகக் களமிறங்கு கிறது.*

*வள்ளலாரையும் பெரியாரையும் ஒரே நேர்கோட்டில் வைத்து அறிவிக்கப்பட்ட அந்தத் தலைப்பில் நமக்கு மாறுபட்ட கருத்து உண்டு. இருப்பினும், மாநாட்டின் அடிப்படை நோக்கம், மிகவும் பாராட்டத்தக்கது. வரவேற்றுப் பின்பற்றத்தக்கது. 2013 ல் நடத்தியதைப் போலவே, மீண்டும் திராவிடர் விடுதலைக் கழகம் வேத, சாஸ்திரங்களை எரிப்பது போன்ற ஒரு மாபெரும் போராட்டத்தை அறிவித்தால், இன்றைய சமுதாய, அரசியல் சூழலுக்கு அது மிகவும் அவசியமான வரலாற்றுக் கடமையாக அமையும்.*

*தந்தை பெரியார் திராவிடர் கழகம் வரும் டிசம்பர் 24, 25 தேதிகளில் திராவிடர் இயக்கக் கொள்கைப் பிரகடன நூற்றாண்டு நிறைவுவிழாவை மாநாடாக அறிவித்துள்ளது. திராவிடர் 100 என்ற தலைப்பில், தோழர் பெரியாரின் எழுத்து, பேச்சுக்களை 100 சிறு நூல்களாகத் தொகுத்து வெளியிடுகிறது. மிகவும் மகிழ்ச்சியான, அவசியமான செயல்பாடுகள் இவை. சென்னையில் 2016 லும் இராவணலீலாவை நடத்தி, வரலாற்றில் தடம்பதித்த தந்தை பெரியார் திராவிடர் கழகம் இந்து மத அடிப்படைகளைத் தகர்க்கும் வகையில் வேத, சாஸ்திரங்களுக்கு எதிரான ஒரு போராட்டத்தை அறிவித்து நடத்தினால், தமிழ்நாட்டில் வேர்பிடிக்கத் துடிக்கும் காவிகளுக்கு விதைப்பிலேயே வெந்நீர் ஊற்றுவது போன்ற காரியமாகப் பயன்கொடுக்கும்.*

*இதுபோன்ற போராட்டங்களை குறுகிய காலத்திற்குள் அறிவித்து செய்துவிடாமல், ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகாலம் இடைவெளி கொடுத்து, அந்த இடைவெளிக்காலம் முழுக்க வேத, சாஸ்திர, சம்பிரதாயங்களுக்கு எதிராக மாபெரும் பரபபுரைகளை நடத்தி, அதன் பிறகு நடத்தினால் மிகவும் சிறப்பாக இருக்கும்.*

*இவைபோன்ற இந்து அடிப்படைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு அனுமதியே கிடைக்கா விட்டாலும் பரவாயில்லை. போராட்டமே நடத்தப்படவில்லையானாலும் பரவாயில்லை. வேத எரிப்பு, சாஸ்திர எரிப்பு என்ற சொற்களும், வேத எதிர்ப்புக் கருத்துக்களும் வெகு மக்களைச் சென்று சேரவேண்டும். வேத எதிர்ப்புக் கருத்துக்கள் சமூக வலைத்தளங்களிலும், தொலைக்காட்சி விவாதங்களிலும், அச்சு ஊடகங்களிலும் ஒரு விவாதப் பொருளாக மாற வேண்டும். அதற்கு ஒரு வாய்ப்பாக இந்தப் போராட்ட அறிவிப்புகள் பயன்பட்டால்கூட அது திராவிடர் இயக்கங்களுக்கு பெரும் வெற்றியாக அமையும்.*

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தோழர் கோவை. இராமக்கிருட்டிணன் ஆகியோருக்கு காட்டாறு இவற்றை ஓர் வேண்டுகோளாக விடுக்கிறது.

திராவிடர் கழகம் அறிவித்துள்ள மனுசாஸ்திர எரிப்புப் போராட்டத்தில் காட்டாறு குழு தோழர்கள் முழுமையாகப் பங்கேற்பார்கள். தி.வி.க, த.பெ.தி.க அமைப்புகளும் இவை போன்ற போராட்டங்களை அறிவித்தால் அவற்றிலும் காட்டாறு தோழர்கள் முழுமையாகப் பங்கேற் பார்கள். அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இந்து அடிப்படைவாதக் கும்பலை விரட்ட எண்ணும் அனைத்து அரசியல் கட்சிகளும், தலித் அமைப்புகளும், பொதுவுடைமை இயக்கங்களும், தமிழ்த்தேசிய அமைப்புகளும் இவை போன்ற போராட்டங்களிலும், பரப்புரைகளிலும் பங்கேற்க வேண்டும். ஆதரிக்க வேண்டும்.

தாராபுரம் பூங்கொடி




# அடிமைப்படுத்தும் விளம்பரங்கள்

ஒரு நாள் வீட்டில் உட்கார்ந்து டிவியில் படம் பார்த்துக் கொண்டிருந்தேன். விளம்பர இடைவேளையில் ஒரு ஆணுறை விளம்பரம் வந்தது. அதில் மூன்று பெண்கள், ஒருவர் காவல் அதிகாரியாகவும், மற்றொருவர் அவர் கீழ் பணிபுரிபவராகவும், இவர்கள் இருவரும் சேர்ந்து மூன்றாவது பெண்ணை சோதனை செய்வது போல் ஒரு காட்சி.

அந்தக் காட்சியில் அதிகாரியாக வரும் பெண், தன் கீழ் பணிபுரிவரைச் சோதனை செய்யச் சொல்கிறார். அவரும் சோதனை செய்துவிட்டு, அந்தப் பெண்ணின் கால் சட்டையிலிருந்து ஒரு ஆணுறைப் பாக்கெட்டை எடுக்கிறார். அதைப் பார்த்த அந்த அதிகாரி, இதை ஏன் நீ வைத்திருக்கிறாய் இது ஆண்கள் பயன்படுத்தும் பொருளாச்சே என்று கேட்பார். அதற்கு அந்தப் பெண் இருவரும் சேர்ந்தே தானே பயன்படுத்துவோம் (But we used together) என்று சொல்ல, அந்த அதிகாரியும் சிரித்துவிட்டு அனுப்பிவிடுவார். இதுமாதிரிப் பெண்களை கேவலப்படுத்த பெண்களையே பயன்படுத்தும் அவல நிலையை என்ன சொல்லி போக்குவது.

மேற்கண்ட விளம்பரத்தில் வரும் பொருள் (ஆணுறை) ஒரு ஆண் பயன்படுத்துவது. அதைப் படமெடுக்க முழுக்கப் பெண்களையே பயன் படுத்தியிருப்பது, பெண்களை சுயமரியாதை இல்லாத ஒரு பண்டமாக (Commodity) சித்தரிக்கும் ஒரு கேடு கெட்ட விளம்பரக் கலாச்சாரம் தான். மேலும் ஆண்களுக்கு தேவைப் படும் ஒரு பொருளுக்கு ஆண்களே இல்லாமல் விளம்பரம் எடுப்பதைப் போல், பெண்களின் மிக முக்கிய தேவையான நாப்கின் விளம்பரத்தில் எந்த ஒரு ஆணாவது நடித்து விளம்பரம் வந்ததுண்டா? குறைந்த பட்சம் மனைவிக்கு கணவன் நாப்கின் வாங்குவது போல் விளம்பரங்கள் வந்ததுண்டா? இனி வரும் காலங்களிலாவது அப்படி எடுப்பார்களா? என்பது சந்தேகம் தான்.

இந்த வாசனைத் திரவியங்கள் விளம்பரமிருக்கே, அது படுகேவலம். அதுவும் ஆண்களின் வாசனைத் திரவிய விளம்பரத்திற்குப் பெண்கள் தான் அதிகமாக அரைகுறை ஆடைகளுடன் வருகிறார்கள். வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்திய ஆண்களின் படுக்கையறையை இரண்டு அல்லது மூன்று பெண்கள் பகிர்வது போல் தான் காட்சி வருகிறது.

இவர்கள் எடுக்கும் இரண்டு நிமிட விளம்பரக் காட்சிகளில் ஒட்டு மொத்தப் பெண்களின் கேரக்டரையும் சின்னாபின்னப்படுத்தி விடுகிறார்கள். இப்படிப் பெண்களின் உடலைக் காட்சிப் பொருளாகக் காட்டும் விளம்பரங்கள் ஒரு பக்கமிருக்க, பெண்களை மனரீதியாக காயப்படுத்தும் விளம்பரங்களும் உள்ளன, அதையும் ஒரு பார்வை பார்த்துவிடுவோம்..

பெண்களுக்கான முக அழகுக் கிரிம் விளம்பரங்களில் கருப்பாக இருக்கிற பெண்களுக்கு, நல்ல வேலை கிடைக்காது. நல்ல கணவன் கிடைக்க மாட்டான். இந்த ஒன்னுக்குமாகாதா க்ரிமை போடுங்க ஏழே நாட்களில் சிகப்பு அழகு கூடும். அப்புறம் உங்களையே உங்கள் குடும்பத்துக்கு அடையாளம் தெரியாது. அப்படி, இப்படின்னு சொல்லி, கருப்பா இருக்கிற பெண்கள் மத்தியில் ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

மேலும் இந்த கிரிமை பயன்படுத்திய அந்தப் பெண்ணைப் பார்த்து “வாவ்” அப்படின்னு சொல்லிட்டு ஒருத்தன் வாயத் துறப்பான் பாருங்க, ஏதோ ஆண்கள் கவர்ந்திழுப்பதாற்காகத்தான் பெண்கள் கிரிம் பயன்படுத்துகிறார்கள் என்று ஒரு பிம்பத்தை இந்த மாதிரியான் விளம்பரங்கள் உருவாக்குகின்றன. சரி, கிரீம் பயன்படுத்தியப் பெண்ணைப் பார்த்து ஆண்கள் “வாவ்” என்று சொல்வது ஒருபுறமிருக்க, மற்றொருபுறம் அழகுக் கிரீம் பயன்படுத்திய ஆண்களைப் பார்த்து, பெண்கள் ஓடிப்போய் கட்டிப்பிடிக்கும் விளம்பரங்கள் தான் அதிகம். அதில் கூட ஆண்களை கண்ணியவான்களாகவும், பெண்களை ஏதோ கட்டிபிடிக்க அலைகிறவர்கள் போலவும் காட்சிப்படுத்துகிறார்கள்.

ஒரு விளம்பரத்தில், தந்தை தன் பையனிடம் பாப்பாவுக்கு Snuggy மாட்டிவிடச் சொல்வார். அதற்கு அந்தப் பையன் ‘நோ’ என்று சொல்லிவிடுவான் (அந்தத் தந்தையும் சும்மா தான் இருப்பார்) உடனடியாக அந்தப் பொடியனின் தாய் “அவனை வேண்டாம்” என்று சொல்லிவிட்டு, தானே தன் மகளுக்கு மாட்டிவிடுவார். பெண் டாக்டராக இருந்தாலும், சாமானியராக இருந்தாலும், தரையைத் துடைக்கும் விளம்பரத்தில் ஒரு பெண் தான் வருகிறார். பாத்ரூம் கிளீன் பண்ற விளம்பரத்தில் எந்த்வொரு ஆணும் இதுவரை நடித்து அவார்டு வாங்கியதில்லை.

துணி துவைக்கிற விளம்பரத்திலும் பெண்களுக்குத் தான் சேலஞ்சும் அவார்டும். இதை விட ஒரு விளம்பரத்தில் ஒரு பொண்ணு சொல்லும், இந்த வீட்டோட முழுப் பவரும் என்னோட கையில் தான் என்று சொல்வார். அதற்கு இன்னொரு பெண் 'அப்ப்டியா? என்று கேட்டு வாயைப் பிளந்து, எப்படி என்று கேட்க, ஏன்னா என் கையில் பவர் சோப் இருக்கு என்பார். நம்க்குத் தான் உடம்பு சிலிர்க்க ஆரம்பித்து விடும்.

ஆண்கள் அணியும் உள்ளாடை விளம்பரத்தில் ஒரு பொண்னு, ஆணை கட்டிப் பிடித்துக் கொண்டு கம்பீரமான ஆண்களின் இலக்கணம் பூமக்ஸ் பனியன், ஜட்டிகள் என்று சொல்லும். இந்த வார்த்தையை உள்ளாடையை அணிந்திருக்கும் அந்த ஆணை வைத்தே சொல்லிருக்கலாம். பெண்களுக்கான உடை விளம்பரங்கள் பெரும் பாலும் பெண்களைக் கொண்டே எடுக்கப்படுகிறது. சாக்லேட் விளம்பரத்தில் பக்கத்து வீட்டிற்க்கு அம்மா, பையன் குடி வருவார்கள். அந்தப் பையனைப் பார்த்து மாடியிலிருக்கும் ஒரு பெண் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பதாக காட்சி வரும். உடனே அப்பெண்னின் அப்பா, மகளைப் பார்வையாலே முறைத்து விட்டு, அந்தப் பையனின் அம்மாவைப் பார்த்து ஜொள் விடுவார். அப்ப சாக்லேட் திங்க ஆசையான்னு விளம்பரம் முடியும்.

பெண்ணுக்கான புரட்சி பேசுன இந்த நாட்டில் தான் நகைக் கடைக்காரனெல்லாம் புரட்சி பண்ண ஆரம்பிச்சிட்டான். அதக்கூட அவன் தங்கம், அவன் உரிமைன்னு விட்டுறலாம். காலங்காலமா இருக்கிற வரதட்சணைக் கொடுமை, பெண் சமுதாயத்தை மட்டுமல்ல, பெண்களின் குடும்பத்தையும் சேர்த்தே சீரழிக்கிறது, அட இந்த நகைக் கடைக் காரனெல்லாம் சேர்ந்து *Reverse Osmosis Process* மாதிரி பெண்களை வைத்தே, வரதட்சணை வாங்குவது நல்ல விசயம் தான் என்றும் சொல்ல வைக்கிறார்கள்.

இன்னொன்றில் பெண்ணைப் பெத்துட்டீங்கள, இப்பவே நகைகள் சேர்க்க ஆரம்பிச்சிருங்க என்று ஒரு விளம்பரம். தலைக்குப் போடும் சாம்பு விளம்பரத்தில் வரும் பெண் தனக்கு நீளமான கூந்தல் இருப்பதால், ஏர்கோஸ்டஸ், பாடகி, மற்றும் கல்லூரி மாணவி என்று மூன்று விதமான கேரக்டரில் வருகிறார். முடி அதிகமாக இருந்தால் வாழ்க்கை முறையை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம் என்று அந்தப் பெண் சொல்வார்.

படிப்பதற்கு மூளை தான் தேவை முடி இல்லை. சோப் விளம்பரத்தில் தனக்கு சோரியாஸிஸ் வியாதி இருப்பதாக ஒரு பெண் சொல்கிறார். ஏன் ஆண்களுக்கு சோரியாஸிஸ் நோய் வராதா? துவைக்கிறது, பாத்திரம் கழுவுறது, பாத்ரூம் கழுவுறது, குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் விடுவது, சமையல் பண்ணுவது, இப்படி பெண்ணடிமைத் தனமான வேலைகளில் (விளம்பரங்களில்) நமது பெண்கள் ஈடுபடுவது, வேலைவாய்ப்பு, வசதி என்று எடுத்துக் கொண்டாலும், இது ஒட்டுமொத்தப் பெண் சமுதாயத்தின் சுயமரியாதைக்குக் கேடான விசய மாகத்தான் நாம் கருதவேண்டியிருக்கிறது.

மேற்கண்ட விளம்பரங்களில் எல்லாம் இனி ஆண்களைத் தான் நடிக்கவைக்க வேண்டும். பெண்கள் தங்கள் சுயமரியாதைக்கும், ஒழுக்கத்திற்க்கும் கேடு ஏற்படாத வண்ணம், வருங்காலங்களில் பெண்கள் மீதான நன் மதிப்பு ஏற்படுமாறு உள்ள துறைகளில் கால்பதிக்க வேண்டும்.

> "பெண்கள் மதிப்பற்றுப் போவதற்கும், அவர்கள் வெறும் போகப்பொருள் தான் என்று ஆண்கள் கருதி நடப்பதற்கும் முக்கிய காரணமே பெண்கள் ஆபாசமாய்த் தங்களைச் சிங்காரித்துக் கொள்வதேயாகும்."

- தோழர் பெரியார்.

அழகு என்பது வெளித்தோற்றத்தில் இல்லை. இந்தச் சமூக நலனுக்காக வாழும் வாழ்க்கையில் தான் இருக்கிறது என்ற யதார்த்த உண்மை எத்தனைப் பேருக்குத் தெரியும். அதற்காக அழகு விசயத்தில் பெண்கள் மெனக்கெடத் தேவையில்லையா? என்றும் கேட்கலாம். அழகியல் விசயத்தில் தங்கள் சுயமரியாதை பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும், இதற்கான அளவுகோல் அவரவர் கைகளில் தான் உள்ளது.

> "ஆதியில் பெண்களுக்கு நகைகள் உண்டாக்கப்பட்டதன் கருத்தே பெண்களை அடிமையாக்கவும், அடக்கிப் பயன்படுத்தி வைக்கவும் செய்த தந்திரமேயாகும். காது, மூக்கு முதலிய நுட்பமான இடங்களில், ஓட்டைகளைப் போட்டு அவைகளில் உலோகங்களை மாட்டி வைத்ததானது. மாடுகளுக்கு மூக்கணாங்கயிறு போட்டால் அது எப்படி இழுத்துக் கொண்டு ஓடாமல், எதிர்க்காமல் இருக்கப் பயன் படுகிறதோ அதுபோல் பெண்கள் காதில் மூக்கில் ஓட்டைகளைப் போட்டு ஆணிகள் திருகியிருப்பதால் ஆண்கள் பெண்களைப் பார்த்து கை ஓங்கினால் எதிர்த்து அடிக்க வராமல் எங்கு காது போய் விடுகிறதோ மூக்கறுந்து போய் விடுகிறதோ என்று தலை குனிந்து முதுகை அடிக்கத் தயாராக இருப்பதற்காக அது உதவுகிறது. அன்றியும் நகைகளை மாட்டிவிட்டால் மாடுகளுக்குத் தொழுக்கட்டை கட்டியமாதிரி வீட்டை விட்டு எங்கும் தனியே போக மாட்டார்கள், நகை போய்விடும் என்று வீட்டோடு கிடப்பார்கள்."

- தோழர் பெரியார்





அதி அசுரன்

# ஜல்லிக்கட்டு தேசிய அவமானம்

2008 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் ஜல்லிக்கட்டுக்குத் தடைவிதித்தது. 2008 முதல் 2016 டிசம்பர் வரை உயர்நீதமன்றம், உச்சநீதி மன்றங்களில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும், எதிராகவும் வாதங்கள் நடைபெற்றுவருகின்றன.

இந்துமத அமைப்புகளும், அனைத்து பிற்படுத்தப்பட்ட ஜாதிக்கட்சிகளும், தமிழ்த்தேசிய அமைப்புகளும், ஈழவிடுதலை ஆதரவு இயக்கங்களும், தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஜல்லிக்கட்டை ஆதரிக்கின்றன. அவர்களின் வாதங்களுக்கு கடந்த 2014, 2015 ஜனவரி காட்டாறு ஏடுகளில் விளக்கமான பதில்களை எழுதியுள்ளோம்.

சி.பி.எம்.எல் ( மக்கள் விடுதலை) போன்ற சில புரட்சிகர மார்க்சிய - லெனினிய பொதுவுடைமை இயக்கங்களும், அரசியல் களத்தில் இயங்கும் சி.பி.எம், சி.பி.ஐ போன்ற கட்சிகளும் ஜல்லிக்கட்டைத் தொடர்ந்து ஆதரிக்கின்றன என்பதுதான் நம்மால் ஏற்றுக்கொள்ள இயலாத செய்தியாக உள்ளன.

ஜல்லிக்கட்டுக்கான தடையை நீக்க சட்டம் இயற்றவேண்டும். பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஜல்லிக்கட்டு, மாடுபிடி, ரேக்ளாரேஸ் ஆர்வலர்கள் சார்பில் மதுரை அவனியாபுரம் மந்தை திடலில் 27.11.2016 ஞாயிறன்று ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அந்த நிகழ்வில், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்-கலைஞர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் சு.வெங்கடேசன் அவர்கள் பேசும்போது,

> “ஜல்லிக்கட்டு என்பது காளையை அடையாளப் படுத்துவதற்காக அல்ல; வீரர்களை அடையாளப் படுத்துவதற்காகத்தான். உழைக்கும் விவசாய மக்களின் அடையாள மாக ஜல்லிக்கட்டு விளங்குகிறது...
>
> ...ஜல்லிக்கட்டு விளையாட்டைத் தடுக்க நினைப்பது இந்துத்துவா கும்பலின் அப்பட்டமான அரசியல். ஜல்லிக்கட்டைப் பாதுகாப்போடு நடத்துவதற்கு ஆலோசனை கூற வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த வேண்டும். இதனைச் செய்யாமல் தமிழர்களின், விவசாயிகளின் பாரம்பரிய விளையாட்டை நிறுத்துவது எப்படி சரியாகும்.” – (1)

என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகமெல்லாம் பொதுவுடைமைஇயக்கங்கள் செயல்படும்முறை, அந்தந்த நாடுகளில் உள்ள அடித்தட்டு மக்களுக்கு ஆதரவான போக்காகவே உள்ளன. இந்தியாவில் உள்ள பொதுவுடைமை இயக்கங்கள் மட்டும் தொடர்ந்து பார்ப்பனப் போக்காகவே இயங்குகின்றன என்பதை திராவிடர் கழகத்தின் விடுதலை ஏடு பலமுறை சான்றுகளுடன் விளக்கியுள்ளது. அந்தக் கருத்துக்கு கூடுதலாக வலுசேர்ப்பதே மேற்கண்ட த.மு.எ.ச பொதுச் செயலாளரின் உரை.

‘ஜல்லிக்கட்டு’ அல்லது ‘ஏறுதழுவல்’ என்பது, தமிழர்களின் பண்பாட்டு அடையாளம் என்றும், தமிழர்களின் வீரத்தின் அடையாளம் என்றும், தமிழ்நாட்டு விவசாயிகளின் பாரம்பரியம் என்றும் பல காலமாக நமக்குத் திணிக்கப்பட்ட கருத்தை எவரும் ஆய்ந்து பார்ப்பதே இல்லை. விலங்குகளை அடக்குவது தமிழர்களிடம் மட்டும் இல்லை. உலகம் முழுவதும் பலநூற்றாண்டுகளாகத் திகழ்ந்த பண்பாடுதான்.

அந்தந்த நாடுகளில் வாழ்ந்த மிருகங்களின் அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளன. ஒரே விலங்கை அடக்கி விளையாடும் விளையாட்டுக்களில் நாட்டுக்கு நாடு விதிமுறைகள் மற்றும் வடிவங்களில் சில வேறுபாடுகள் உள்ளன. ஆனால் விலங்குகளோடு மோதி, அவற்றை அடக்குவது அல்லது அழிப்பது என்பது உலகில் இன்று வாழும் அனைத்துவகை மனித இனத்திற்கும் பொதுவான பண்பாடுதான்.

குறிப்பாக, காளையுடன் மோதி அடக்குவது, எருதுடன் மோதி அடக்குவது இரண்டுமே உலகம் முழுக்க இருந்த பண்பாடுதான். இன்று வளர்ந்த நாடுகளாகத் திகழும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஃப்ரான்ஸ், ஜெர்மன் போன்ற பல நாடுகளிலும் காளைச்சண்டையும், எருதுச்சண்டையும் பாரம்பரியப் பண்பாடுகளாக இருந்தன.

### ஸ்பெயினில் தடை

தமிழர்களின் ஏறுதழுவல் சங்க காலத்திலிருந்தே, சிந்துச்சமவெளி காலத்திலிருந்தே நடந்தது என்று ஜல்லிக்கட்டு ஆதரவாளர்கள் கூறுகின்றனர். அதே அளவுப் பாரம்பரியம் கொண்டது தான் ஸ்பெயின் நாட்டின் எருதுச்சண்டை.

ஸ்பெயின் நாட்டிலுள்ள சுயாட்சிபெற்ற மாநிலமான 'கேடலோனியா' வில் கேட்டலான் பாராளுமன்றத்தில் கடந்த 28.07.2010 அன்று பலநூற்றாண்டுப் பாரம்பரியம் கொண்ட எருதுச் சண்டைக்குத் தடைவிதிக்கக் கோரும் முன்வரைவு விவாதத்திற்கு விடப்பட்டு வெற்றிபெற்றது.(2)

2016 ல் அந்த நாட்டில் உள்ள எருதுச்சண்டை ஆர்வலர்களின் பலமிக்க லாபி வென்றது. "பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்ற அடிப்படையில் ஸ்பெயினின் உச்சநீதிமன்றம் 05. 10 2016 ல் மீண்டும் எருதுச் சண்டையை அனுமதித்தது. இந்த நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்தும், எருதுச் சண்டைக்கு நிரந்தரத் தடை கோரியும் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஸ்பெயினின் முக்கியப் பகுதியான 'வாலன்சியா' நகரில் bous embolats என்ற 'எருது அடக்குதல்' பலநூற்றாண்டாக நடந்துவரும் பாரம்பரிய விளையாட்டு. அங்குள்ள 'பண்பட்ட மக்களால்' அந்தப் பண்பாடு தடைசெய்யப்பட்டு விட்டது.(3)

ஸ்பெயினின் Province of Valladolid மாகாணத்தில் உள்ள Tordesillas நகரில் Toro de la Vega festival என்ற ஒரு விழா பாரம்பரியமாக நடைபெற்று வருகிறது. அவ்விழாவில் மய்ய நிகழ்வு 'Bull spearing' என்று கூறப்படும் 'எருது குத்தும்' விழா ஆகும். இவ்விழாவில், தனது வீரப்பண்பாட்டைக் காப்பாற்ற விரும்பும் ஒருவர், ஒரு குதிரையின்மீது அமர்ந்து கொண்டு, குத்தீட்டியுடன், எந்த ஆயுதமும் இல்லாத ஒரு காட்டெருமையுடன் போரிட்டு அதைக் கொல்வார். இது ஒரு பாரம்பரிய விளையாட்டு.

இந்த விளையாட்டை ஸ்பெயின் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் பலமாக இயங்கும் PACMA என்ற அமைப்பு கடுமையாக எதிர்த்தது. இந்த விளைளயாட்டு நடைபெறும் Castile and León மாகாணத்திலேயே மிகப்பெரும் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தியது. அதன் விளைவாக கடந்த 2016 மே மாதத்தில் இந்த 'எருது குத்தும் விழா' தடைசெய்யப் பட்டுள்ளது.(4)

### எருதுச்சமர்: 'தேசிய அவமானம்'

ஸ்பெயினின் பல பகுதிகளில் நடைபெற்ற இவைபோன்ற ஏறுதழுவல்களை எதிர்த்துக் கடுமையாகப் போராடும் 'பேக்மா' அமைப்பினர், தெரிவித்துள்ள கருத்துக்களை மனிதநாகரீக வளர்ச்சியில் அக்கறை கொண்டோர் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். 11.09.2016 ல் 'மாட்ரிட்' நகரில் நடைபெற்ற எருதுச்சமர் எதிர்ப்புப் பேரணியில்,

"ஸ்பெயினில் எருதுச்சண்டையை அனுமதித்தால், நாங்கள் ஸ்பானியர்களாக இருக்க மாட்டோம்", எருதுச்சண்டை காட்டு மிராண்டித் தனத்தின் பள்ளிக்கூடமாக இருக்கிறது", எருதுச் சண்டை - ஒரு தேசிய அவமானம்" என்பன போன்ற பல முழக்கங்களை எழுப்பினர். இதே கருத்துக்களை செய்தியாளர்களிடமும் தெரிவித்தனர்.(5)

### எருதுச்சமர்களை எதிர்த்த போப்

1566 ஜனவரி 8 முதல் கிறித்துவமதத் தலைமையான'போப்' ஆக இருந்தவர் Pope Saint Pius V ஆவார். அவர் 1567 லேயே, எருதுச்சமர்களுக்கு எதிராக, எருமைகள் மற்றும் பிற விலங்கினங்களின் நலனுக்காக, ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். போப்பாக இருப்பவர் கள் அவ்வப்போது பிறப்பிக்கும் உத்தரவுகள் மற்றும் அறிவிப்புகள் பொதுவாக Papal Bulla எனப்படும். அந்த உத்தரவுகள்தான் உலகமெங்கிலும் உள்ள கிறித்துவர் களை வழிநடத்தும்.

அப்படி இந்த Pope Saint Pius V அவர்கள் எருதுச் சமர்களுக்கு எதிராக அறிவித்தவை Super prohibitione agitationis Taurorum & Ferarum ("An injunction forbidding bullfights and similar sports with wild animals"), "De Salute Gregis Dominici", "On the welfare of the Lord's flock" என்ற பெயரில் தொகுக்கப்பட்டு நூலாக உள்ளது. அந்தத் தொகுப்பு இலண்டன் யேல் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் அரிய நூல்கள் பிரிவில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளது. ஆம், 1567 லிலிருந்தே இவை போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு எதிர்ப்புகள் தொடங்கிவிட்டன.(6)

போப்பின் உத்தரவைக் குறிப்பிட்டு கூறியதன் காரணம் என்னவென்றால், உலகையே கட்டுப் படுத்தும் வல்லமை பெற்ற 'போப்' கட்டளையிட்டுத் தடுக்க வேண்டிய அளவுக்கு இந்த 'பாரம்பரியம்', 'பண்பாடு' உலகம் முழுவதும் பரவி இருந்துள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே யாகும்.

திண்டுக்கல் மாவட்டம் வெள்ளோடு, கொசவபட்டி மற்றும் மதுரை மாவட்டத்தின் சில கிராமங்களில் ஜல்லிக்கட்டு நடத்தவேண்டும் என்று போராடிவரும் கிறிஸ்தவ வன்னியர் சங்கங்கள் 'போப்' பின் உத்தரவு பற்றி அறிந்ததாகத் தெரிய வில்லை. கிறிஸ்தவர்களாக மதம் மாறினாலும் இந்துமதச் சடங்குகளே இன்னும் வன்னியர்களை வதைக்கிறது என்பதைத்தான் இவை உறுதிப் படுத்துகின்றன.

### தடைசெய்த நாடுகள்

உருகுவே நாட்டில் 1776 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட எருதுச்சமர் 1912 பிப்ரவரியில் உருகுவே அரசால் தடைசெய்யப் பட்டது. அர்ஜன்டைனாவில் 25.07. 1891 முதல் LAW 2786 என்ற சட்டத்தின்படி எருதுச் சமர்கள் தடைசெய்ப்பட்டு விட்டன. மெக்ஸிக் -கோவில் 1890 முதல் தடைசெய்யப்பட்டு விட்டன.(7)

ஃப்ரான்ஸ் நாட்டில் உள்ள 90 சதவிகிதப் பகுதிகளில் 1851 லேயே எருதுச்சமர்கள் தடை செய்யப்பட்டு விட்டன. தெற்கு ஃப்ரான்ஸில் 2011 ல் யுனெஸ்கோ வால், 'ஃப்ரான்ஸின் மதிப்புமிக்க பாரம்பரிய அடையாளமாக' இந்த எருதுச்சமர் அறிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் அங்கு மட்டும் 2015 வரை எருதுச்சமர் நடந்தது. ப்ரான்ஸில்

இயங்கும் The Radically Committee Anti-Corrida (CRAC) என்ற அமைப்பு இந்தப் பாரம்பரிய அடையாளத்தைத் தொடர்ச்சியாக எதிர்த்துப் போராடி, 01.06.2015ல் பாரீஸ் நீதிமன்றத்தின் வழியாகத் தடைஆணையைப் பெற்றுவிட்டது.

கனடா, டென்மார்க், இத்தாலி, நெதர்லாந்து, நியூசிலாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் எருதுச்சமர்கள் பாரம்பரிய விழாவாக பல நூற்றாண்டுகள் நடைபெற்றன. தொடர்ச்சியான எதிர்ப்போராட்டங்களினால் பல்வேறு காலக் கட்டங்களில் அவை தடை செய்யப்பட்டுவிட்டன.

போர்ச்சுகல், கொலம்பியா, வெனிசுலா, பெரு, ஈக்வடார், ஸ்பெயின், தெற்கு டெக்ஸாஸ், அமெரிக்கா கலிஃபோர்னியாவில் போர்த்து-கீசியர்களின் பகுதி ஆகியவற்றில் மட்டும் இன்னும் ஏறுதழுவலைப் போன்ற விழாக்கள் நடைபெற்று வந்தாலும் அவற்றுக்கு உலக அளவில் கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. விரைவில் அங்கும் தடைகள் உருவாகும்.(8)

### க்யூபா வில் தடை செய்யப்பட்ட எருதுச்சண்டை

1959 ஜனவரி முதல் நாளில் க்யூபா விடுதலை பெற்றது. தோழர் ஃபிடல் காஸ்ட்ரோவின் ஜூலை 26 இயக்கத்தின் ஆயுதப்புரட்சியால் கியூபாவில் பொதுவுடைமை அரசாங்கம் நிறுவப்பட்டது. 1901 ஆம் ஆண்டு முதல் க்யூபாவில் எருதுச்சமர் தடை செய்யப்பட்டது. பிறகு புரட்சிக்குப் பிறகு மீண்டும் நடைபெற்றது. சில ஆண்டுகளிலேயே தடைசெய்யப் பட்டு இன்றுவரை க்யூபாவில் எருதுச்சமர் நடப்பதில்லை. அந்த நாடு பொதுவுடைமை நாடுதான். இங்குள்ள பொதுவுடைமைக் கட்சித் தலைமைகள் இதைக் கவனிக்க வேண்டும்.(9)

காளைகள், எருதுகள், சேவல்களை மட்டும் மனிதன் அடக்கி விளையாடவில்லை. நாய், நரி, கரடி, வாத்து, குரங்கு, எலி என பலவகை உயிரினங் களையும் அடக்கி ஆண்டிருக்கிறான். அழித்திருக் கிறான். அவற்றைப் பாரம்பரிய விழாக்களாகக் கொண்டாடியும் இருக்கிறான். கொண்டாடிக் கொண்டும் இருக்கிறான். ஒவ்வொரு நாட்டிலும் அதன் தட்ப வெப்ப, உணவு உற்பத்திச் சூழலுக்கு ஏற்ப, அவற்றில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. அவற்றை விவரித்தால் கட்டுரை மிகவும் நீளும். தேவைப்பட்டால் பிறகு எழுதலாம். இந்தியாவில் உள்ள பொதுவுடைமை இயக்கங்களுக்காக, சீனாவின் பண்பாடு ஒன்றைப் பற்றி மட்டும் பார்ப்போம்.

### சீனாவில் நாய் – பூனை உணவு விழாக்குத்தடை

சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள Guangxi province ல் Yulin நகரில் Yulin Dog and Cat Meat Festival என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான நாய், பூனைகளை ஒரே இடத்தில் வெட்டிக் கொன்று உண்ணும் விழா நடைபெற்று வருகிறது. 600 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த விழா நடைபெற்று வருவதாக சீனாவின் பாரம்பரியப் பண்பாட்டுக் காவலர்கள் கூறிவருகின்றனர்.

இந்தப் பண்பாட்டைத் தடைசெய்ய வேண்டும் என்று சீனாவில் உள்ள விலங்குநல அமைப்புகள் 2014 ல் சமூகவலைத்தளங்களின் வழியாகப் போராட்டங்களைத் தொடங்கினர். Change.org என்ற இணையதளத்தில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட எதிர்ப்புக் கையெழுத்துக்களைப் பெற்றனர். Humane Society International (HSI), PETA போன்ற அமைப்புகள் ட்விட்டரில் என்ற #StopYulin2015 ஹேஷ் டேக்கை உருவாக்கினர். அது 25 இலட்சத்திற்கும் அதிகமான ட்விட்டுகளை அடைந்தது. யூட்யூபில் 13 இலட்சம் ஹிட்களைப் பெற்றனர்.

நாய்-பூனை உணவு விழாக்களை ஆதரித்தும் பெரும் பேரணிகள் நடத்தப்பட்டன. கடந்த 2014 ஜூன் மாதத்தில் 50,000 க்கும் அதிகமான மக்கள் திரண்டு, "நாய்-பூனைக்கறி உண்பது எமது பாரம்பரியம். அது எந்தச் சட்டப்படியும் தவறும் கிடையாது" என்று முழங்கினர்.

பண்பாட்டுக்காவலர்களின் எதிர்ப்பையும் மீறி, சீனாவிலுள்ள பொதுவுடைமைக்கட்சி அரசாங்கம் நாய் - பூனை உணவு விழாக்களுக்குத் தடைவிதிக்கும் முன்வரைவை National People's Congress ல் விவாதத்திற்கு வைத்துள்ளனர். Zheng Xiaohe ( NPC Deputy) இந்த முன்வரைவை வெளி யிட்டுள்ளார். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தப் பாரம்பரியப் பண்பாட்டுக்கு உறுதியாகத் தடைவரும் எனவும் அறிவித்துள்ளார்.(10)

சீனாவின் பொதுவுடமைக் கட்சி அரசு, ஒட்டுமொத்த மனிதகுல மேம்பாட்டுக்கு உரிய நிலைப் பாட்டை எடுக்கிறது. க்யூபாவின் பொது வுடைமைக் கட்சி அரசும் மனித இனத்தைப் பின்னோக்கி இழுக்கும் பண்பாடுகளுக்குத் தடை விதிக்கிறது. இந்தியாவில் உள்ள பொதுவுடைமை இயக்கங்கள் மட்டும் மதவெறி அமைப்புகள் - பிற்படுத்தப்பட்ட ஜாதிவெறி அமைப்புகளின் குரலை அப்படியே எதிரொலிக்கின்றன.

### அகில இந்திய அளவில் ஜல்லிக்கட்டு, ரேக்ளா ரேஸ் பண்பாடு

மேலே கூறுப்பட்டவைகூட எருதுகள் தொடர்பானவை. காளைகள் தொடர்பாகவும் கூறிவிடலாம். கர்நாடகாவின் கடலோர மாவட்டங்கள், கோவா, ஆகிய பகுதிகளில் காளைகளை அடக்கும் ஜல்லிக்கட்டு போன்ற பண்பாட்டு விழாக்கள் நடைபெற்று வந்தன. சிவகங்கைப் பகுதியில் நடைபெறும் மாட்டுவண்டிப் பந்தயம், ரேக்ளா ரேஸ் போல பஞ்சாப் மாநிலத்திலும் நடந்துவந்தன. அவை அனைத்துமே உச்சநீதிமன்றத்தால் தடைசெய்யப்பட்டுள்ளன.(11)

இவற்றின்படி, 'ஏறுதழுவுதல்' அல்லது 'ஜல்லிக்கட்டு' விளையாட்டுக்கள் தமிழர்களுக்கு மட்டுமான அடையாளம், தமிழர்களுக்கு மட்டும் உரிய பாரம்பரியம் என்று நினைத்துக் கொண்டி ருப்பதே தவறு என்பது உறுதியாகிறது.

### சேவல் சண்டையும் உலகப் பொதுப் பண்பாடே

சேவல் சண்டையும்கூட தமிழர்களின் அடையாளம், தமிழர்களின் பண்பாடு என்று கூறிக்கொள்வது முழுமையான உண்மை அல்ல. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரேசில், பாகிஸ்தான், ஈராக், மெக்ஸிகோ, இந்தோனேசியா, பெரு, தாய்லாந்து, க்யூபா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், ப்ரான்ஸ், வியட்நாம், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பாரம்பரிய விளையாட்டாகவே பல நூற்றாண்டுகள் நடைபெற்று வந்துள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலகட்டத்தில் அவை தடைசெய்யப் பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, 1835 ல் இங்கிலாந்தில் சேவல்சண்டை தடைசெய்யப்பட்டது. 1895 ல் ஸ்காட்லாந்தில் தடைசெய்யப்பட்டது. க்யூபாவில் 1968 ல் தடைசெய்யப்பட்டு 1980 ல் மீண்டும் அனுமதிக் கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் 1976 ல் தடைசெய்யப்பட்டது. அமெரிக்காவில் வாஷிடன் டி.சி யில் உள்ள லூயிஸியானா என்ற ஊரில் பலகாலமாக நடைபெற்று வந்த சேவல் சண்டை 2007 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. பாகிஸ்தான் 2015 ல் சேவல் சண்டையைத் தடைசெய்தது.

இந்தியாவில், தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா மாநிலங்களில் பல கிராமங்களிலும் பொங்கல் காலத்தில், மிகப்பெரும் அளவில் சேவல் சண்டை நடைபெறுகிறது. ஆந்திராவில் மிகப்பெரும் தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகள் இச்சேவல் சண்டையில் முதலீடு செய்துள்ளனர். ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் மட்டும் ஆண்டுக்கு சுமார் 1500 கோடி பணம் புரளும் பாரம்பரியப் பண்பாட்டுக்கு உரியது இந்தச் சேவல்சண்டை. கடந்த 2015 ஜனவரியில் 12 ஆம் நாள் உச்சநீதிமன்றம் சேவல்சண்டையையும் தடைசெய்தது.(12)

### ஜல்லிக்கட்டுக்குத் தடைவிதித்த அசோகர்

விலங்குகளை அடக்கி பழக்கும் அல்லது அழித்துப் பழகும் பண்பாடு உலகம் முழுதும் இருந்தவைதான். அவை தோன்றிய காலத்திலிருந்தே அவற்றுக்கு எதிரான போராட்டங்களும் உலகம் முழுவதும் நடந்து வருகின்றன. கி.மு 270 லேயே அசோகர் இந்தியப் பகுதி முழுவதும் ஏறுதழுவலைத் தடைசெய்திருந்தார். இறைச்சிக்காக மாடு வளர்ப் பதைத் தொழிலாக அங்கீகரித்த அசோகர், ஏறு தழுவலைத் தடைசெய்திருந்தார் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

“தமிழர்களுக்கு மட்டும் உள்ள பிரச்சனை இது. ஒட்டு மொத்த இந்தியாவும் தமிழர்களுக்கு எதிராக இருக்கிறது. உலகம் முழுவதும் தமிழ்நாட்டில் நடக்கும் ஜல்லிக்கட்டை மட்டும் எதிர்க்கிறார்கள். ஜல்லிக் கட்டும், சேவல்சண்டையும் தான் நமது, நமக்கு மட்டுமான பண்பாடு” என்று எண்ணிக்கொண்டு, அல்லது இந்த எண்ணத்தை அடித்தட்டு மக்களிடம் விதைத்துக்கொண்டு இருப்பவர்கள் இந்தச் சமுதாயத்தை வளரவிடமாட்டார்கள் என்பது உறுதி.

இந்தப்பூமி மனிதனுக்கு மட்டுமல்ல; எல்லா வகையான உயிர்களுக்கும் உரிமையுடையது என்ற எண்ணங்கொண்ட மனித மன வள மேம்பாட்டுச் சிந்தனையாளர்கள் உலகம் முழுதும் இவை போன்ற காட்டுமிராண்டிக் காலப் பண்பாடுகளுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். பெரும்பாலான முன்னேறிய நாடுகளில் வெற்றியும் பெற்று வருகின்றனர். வளர்ந்த நாடுகளில் காலத்துக்கேற்ற படி, தேவைக்கு ஏற்றபடி விளையாட்டுக்களும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களும் மாறி வருகின்றன.

நாமோ இந்தப் பழக்க வழக்கங்களுக்கு நாம் மட்டுமே உரிமையாளர்கள் என்பது போலவும், அவற்றைக் கட்டிக்காப்பாற்றியே தீருவோம் என்றும் பேசிக்கொண்டிருப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு, தமிழர்களையும் ஏமாற்றும் செயலாகும். எந்தப் பண்பாடாக இருந்தாலும் அவற்றால் மக்களுக்கு நன்மை இருக்கவேண்டும். மக்களின் முன்னேற்றத்திற்கு அவை பயன்படவேண்டும். ஆனால், அவற்றை நாம் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்தால் அவை எப்படி நமக்குப் பயன்படும்?

### நாகர்களின் வீரப்பண்பாடு

வடகிழக்கு மாநிலங்களான, நாகாலாந்து, மேகாலயா, மிசோரம், மணிப்பூர், திரிபுரா ஆகிய மாநிலங்களில் நாகா இனத்தவர் சாழ்கின்றனர். நாகா இனத்தில் மொத்தம் 16 பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் தனிப்பட்ட சடங்குகள், உணவுப் பழக்கங்கள் உள்ளன. பாரம்பரிய உடை, மொழி, மதம் ஆகியவைதான் அவர்களை இணைக்கின்றன.

> திரிபுரா தவிர்த்த மற்ற பகுதிகளில் வசிக்கும் நாகா இனத்தவர் எப்போதுமே இதர இனத்தவரின் மீது படையெடுத்து அடிமை களைக் கவர்ந்துவந்தனர். தங்களுடைய இனத்தைச் சேர்ந்த பெண்களை மணந்து கொள்வதற்குப் பல பகுதிகளுக்கும் சென்று இதர இன மக்களோடு சண்டையிட்டு அவர்களின் தலையை வெட்டி எடுத்து வருவது வழக்கத்தில் இருந்தது. அதில் அதிக எண்ணிக்கையில் தலைகளைக் கொய்து வருபவருக்கே பெண்கள் மாலை சூட்டு வார்கள். 19-ம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில்தான் இந்தக் கொலைகார வீர விளையாட்டு முடிவுக்கு வந்தது.(13)

நாகா இனத்தின் வீரத்தைக் நிரூபிக்கவும், நாகா இன இளைஞன் திருமணம் செய்யவும் அடிப்படைத் தகுதி என்னவென்றால், மாற்று இனத்தவரின் தலையை அதிகமாக வெட்டிக்கொண்டு வர வேண்டும் என்பதுதான். சங்க காலத்தில் தமிழ் நாட்டில், காளையை அடக்குபவனுக்கே மணம் என்ற பண்பாடு இருந்ததைப்போல, நாகர்களும் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தைக் கடை பிடித்தனர். இப்போது இல்லை. தடைசெய்யப் பட்டுவிட்டது.

அந்தப் பண்பாட்டை மீண்டும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று நாகர்கள் போராடினால் அதை நாகரீக எண்ணங்கொண்ட எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

– தொடர்ச்சி 25 ஆம் பக்கம்

பல்லடம் தீபா,
நாராயணமூர்த்தி,
திருப்பூர் வேணி

# ஜாதிமறுப்பு மறுமணம் லிவிங் டுகெதர் தனிக்குடித்தனம் பூர்வீகச் சொத்தில் பெண்களுக்கு உரிமை



## சாதித்துக் காட்டிய இணையர்: தனலட்சுமி – விஜயராகவன்

என்னுடைய பெயர் தனலட்சுமி.நான் கோவை மாவட்டத்தில் பிறந்தேன். என்னுடைய அப்பா இராமசாமி, அம்மா பாப்பாத்தி எங்கள் வீட்டுக்கு நான் ஒரே பெண் நான் பத்தாம் வகுப்பு வரை படித்தேன். 1971-ல் படிப்பை முடித்தேன்.அதே வருடத்தில் எனக்கு திருமணம் நடந்தது.

**உங்களுடைய திருமண வாழ்க்கையைப் பற்றி சொல்லுங்கள்?**

*என்னுடைய திருமண வாழ்க்கை நல்லபடியாக அமையவில்லை. குடும்பத்தில் பிரச்சனை காரணமாக அடிக்கடி நான் எங்கள் வீட்டுக்கு வருவதும், அங்கேயே கொஞ்சநாள் இருப்பதும் பிறகு என்னுடைய கணவர் வீட்டுக்குப் போவதுமாக இருந்தேன். 1974-ல் அவர் இறந்துவிட்டார். அவர் இறக்கும் போது நான் மூன்றுமாத கர்ப்பிணியாக இருந்தேன். அதன் பிறகு நான் என்னுடைய அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன்.அங்கேயேதான் இருந்தேன்.*

**தோழர் விஜயராகவனின் அறிமுகம் உங்களுக்கு எப்போது கிடைத்தது?**

*1988-ல் நான் பொள்ளாச்சியில் செவிலியர் பயிற்சிக்கு மு.ழ.-ல் 3 மாத பயிற்சி எடுத்தேன். அதற்குப் பிறகு எனக்கு சித்தா பிரிவில் வேலை கிடைத்துவிட்டது. நான் appainment order-ரை எடுத்துக்கொண்டு போகும்போது அவரும் நகராட்சி மருத்துவமனையில் வேலை செய்து கொண்டு இருந்தார்.எனக்கு அறிமுகம் இல்லாத இடத்தில் யாரிடம் சென்று அணுகுவது என்று தெரியவில்லை. அப்பொழுது அவர்தான் எனக்கு உதவி செய்தார்.*

*நான் வேலையில் இருக்கும்போது எனக்கு மனரீதியான பிரச்சனைகள்,தொல்லைகள் அதிகமாக இருந்தது. எனவே நான் வேலையை விட்டுவிடலாம் என்று நினைத்தேன். அலுவலகத் திற்கு வெளியில் நின்று அழுது கொண்டு இருந்தேன். அப்போது தோழர் விஜயராகவன் வந்து இங்கு நின்று எதற்காக அழுது கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் இந்த வேலையை வேண்டாம் என்று எழுதிக்கொடுக்க நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன்.*

*அதற்கு அவர் நீங்கள் வேலைக்கு வந்து ஒரு வாரத்தில் வேலையை விடுவதற்கு காரணம் என்ன என்று கேட்டார். இங்கு என்னால் வேலை செய்ய முடியவில்லை நிறைய பிரச்சனைகள் இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் எங்கே வேலைக்கு போனாலும் இந்த மாதிரியான பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். நீங்கள் இதை எல்லாம் பொருட்படுத்தாமல் மன உறுதியோடும், தைரியமாகவும் வேலை செய்யுங்கள் என்று சொன்னார்.*

**தோழர் விஜயராகவன் உங்களை வாழ்க்கைத்துணையாக ஏற்றுக் கொள்கிறேன் என்று எப்போது உங்களிடம் சொன்னார்?**

*எனக்கு அவரைப் பிடிக்கும். ரொம்பவும் கண்ணியமாகவும், பண்புடையவராகவும் என்னிடம் பழகினார். எனக்கு நிறைய உதவிகளைச் செய்தார். அவர் என்னிடம் வந்து வெளிப்படையாக எதுவும் சொல்லவில்லை. என்னுடைய வீட்டு முகவரியை மட்டும் கேட்டார். வீட்டிற்க்கு வந்து என்னுடைய அப்பா, அம்மாவிடம் உங்களுடைய பெண்ணை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்று சொன்னார்.*

*ஆனால் அப்பொழுது அவர்கள் எந்த ஒரு பதிலும் சொல்லவில்லை. 6 மாதம் கழித்துத்தான் என்னுடைய பெற்றோர் சம்மதம் சொன்னார்கள். அப்போது என்னுடைய*

மகன் வந்து அம்மா நீ என்னை விட்டுட்டு போய்விடுவியா? என்று கேட்டுக்கொண்டு அழுதான். நான் திருமணம் செய்து கொண்டாலும் உன்னைவிட்டு எங்கேயும் போகமாட்டேன் என்று சொன்னேன். அவனும் புரிந்துகொண்டான். அதன் பின்பு நாங்கள் இருவரும் பொள்ளாச்சி நகரத்தில் எங்கள் வாழ்க்கையைத் தொடங்கினோம்.

**நீங்கள் இருவரும் இணைந்து வாழலாம் என்று முடிவு எடுத்துக் கொண்டதை உங்கள் குடும்பம் ஏற்றுக்கொண்டது. தோழர் விஜயராகவனின் குடும்பம் எப்படி எடுத்துக் கொண்டார்கள்?**

விஜயராகவனின் அப்பா, அம்மா இருவரும் வந்து ரொம்பவும் கோவமாக பேசினார்கள். என்னிடம் உனக்கு அரசு வேலையே இல்லாமல் செய்துவிடுவேன். உன்னைக் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். என்னுடைய மகனை ஏமாற்றித் திருமணம் செய்துக்கொண்டாய் என்று பேசினார்கள். வழக்கமாகவே பெற்றோர்களின் கோபம் சரியானது தான். ஆனால் அவர்கள் திட்டியதைப் பெரிதாக நினைக்கவில்லை. 2 வருடங்கள் கழித்து என்னுடைய நடைமுறை வாழ்க்கையைக் கண்டு என்னுடைய மாமியார் நல்ல தோழியாகப் பழகினார். பின்பு தோழர் விஜயராகவனின் வீட்டுக்கு போவோம். அவர்களும் எங்கள் வீட்டிற்கு வருவார்கள்.

**இன்றைய சமுதாயத்தில் திருமணம் முடிந்தபிறகு கூட்டுக்குடும்பத்தில் வாழ்வதற்கு மாற்றாக. 'தனிக்குடித்தனம்' என்று தனியாக வாழ்வது பெரும்பாலும் இயல்பாகி வருகிறது. 90 களில் தனிக்குடித்தனம் போக விரும்பும் பெண்கள் வில்லிகளாகத்தான் சித்தரிக்கப்பட்டார்கள். நீங்கள் அதை எப்படிக் கையாண்டீர்கள்?**

ஆமாம். எந்த ஒரு கஷ்டமாக இருந்தாலும் நாம் இருவருடனே போகட்டும். நாம் தனியாக வாழ்வதுதான் சரியானதாக இருக்கும். கூட்டுக்குடும்பத்தில் இணைந்து வாழ்ந்தால் நிறைய சங்கடங்கள் வரும். உங்களுடைய தாய், தந்தைக்குக் கஷ்டப்படும் காலகட்டங்களில் நாம் அவர்களுக்கு உதவிசெய்து துணையாக இருப்போம் என்ற ஒப்பந்தத்தை நான் சொன்னேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டார். அதன்பிறகு நாங்கள் எங்களுடைய வாழ்க்கையைத் தொடங்கினோம்.

**நீங்கள் இருவரும் இணையர்களாக வாழும்போது இந்தச் சமூகம் உங்களை எப்படிப் பார்த்தது? அதுமட்டுமின்றி அவர் ஒரு கடவுள் மறுப்பாளர். நீங்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர் இதில் ஏதும் பிரச்சனை இருந்ததா?**

என்னுடைய வாழ்க்கை பொள்ளாச்சியில் தொடங்கியதால் என்னுடைய உறவினர் வீடுகளுக்கு அதிகமாகப் போகவில்லை. இருப்பினும் யாராவது ஏதாவது விசேஷங்களில் என்னைப் பார்த்து திருமணம் செய்துகொண்டாயா? என்று கேட்டால் ஆமாம் செய்து கொண்டேன். நான் பொள்ளாச்சியில் இருக்கிறேன் என்று கூறிவிடுவேன். என்னுடைய உறவினர்கள் மத்தியில் எனக்குப் பெரிய எதிர்ப்பு ஒன்றும் இல்லை.

சாதி ஒழிப்பு,கடவுள் மறுப்பு பிரச்சாரங்களுக்கு அவர் போவார். அதை நான் எப்போதும் தடுத்தது இல்லை. அதேபோல் நானும் கோவில்களுக்கு போவேன். அதையும் அவர் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார். எந்த ஒரு விஷயத்தையும் என்னிடம் திணித்தது கிடையாது. ஆனால் நானே இப்பொழுது புரிந்துகொண்டு நிறைய கூட்டங்களுக்குப் போகிறேன். பெரியாரின் கொள்கையை ஏற்றுக்கொண்டு நானும் அவருடன் இணைந்து செயல்படுகிறேன்."காட்டாறு" மாத இதழில் இருவரும் இணைந்து பணியாற்றுகிறோம்.

## தோழர் விஜயராகவன்

நான் கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தேன். எனக்கு 3 தம்பிகள், இரண்டு தங்கைகள்.

**பெரியாரியல் கொள்கையில் ஈடுபாடு ஏற்படக்காரணம் என்ன?**

நான் 1972-ல் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிவிட்டு நான் வரும்போது பொதுக் கூட்டம் அதிகம் நடக்கும் இடமான திருவள்ளுவர் திடல் என்னும் இடத்தில் திராவிடர் கழகக் கூட்டம் நடந்தது. பெங்களூர் விசாலாட்சி அம்மையார் மேடையில் பேசிக்கொண்டு இருந்தார். அவர் கருப்புநிறப் புடவையைக் கட்டி இருந்தார். மேடையில் ஒரே ஒரு பெரியவர் மட்டும் இருந்தார். அப்போது எனக்கு ஒரு துண்டறிக்கை கிடைத்தது. அந்தத் துண்டறிக்கையில் பெரியாரின் வாசகங்கள் இடம் பெற்றிருந்தது.

> "இந்தத் திராவிட சமுதாயத்தில் சாதி ஒழிய வேண்டும் என்றால் திராவிட இயக்க இளைஞர்களே நீங்கள் சாதிமறுப்புத் திருமணத்தையே செய்யுங்கள் அப்படி இல்லையென்றால் திருமணமே செய்து கொள்ளாதீர்கள்''

என்ற வாசகமும், பக்தர்களிடம் 100 கேள்விகள் என்ற ஒரு புத்தகமும் கிடைத்தது. அதைப் படித்தேன். பள்ளியில் நான் படிக்கும்போது சாதி ஒடுக்குமுறைக்கு ஆளானேன். இதனால் எனக்கு பெரியாரின் சாதிஒழிப்புப் பிரச்சாரங்கள் சரியானதாக இருக்கும் என்று இயக்கத்தில் இணைந்து செயல்பட்டேன்.

1972-ல் இருந்து 1982 - வரை முழுநேரப்பணியாளராக தோழர் இராமகிருஷ்ணனுடன் இணைந்து செயல்பட்டேன். 1982-ல் அரசு வேலை கிடைத்தது. நன்னடத்தை காரணமாக ஒரு வருடம் மட்டும் அமைதியாக இருந்தேன். பின்பு மீண்டும் பகுத்தறிவாளர் கழகம் என்ற இயக்கத்தில் இணைந்து பணியாற்றினேன். இன்று வரை சாதி ஒழிப்புக் கொள்கையில் மாறாமல் பண்பாட்டுத் தளத்திலும் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறேன்.

**தோழர் தனலட்சுமி-யின் அறிமுகம் எப்போது கிடைத்தது?**

1990-ல் பணி இடமாற்றம் காரணமாக பொள்ளாச்சியின் நகராட்சிக்கு உட்பட்ட

மருத்துவமனைக்கு வருகிறேன். பெண் செவிலியர் உதவியாளராக தனலட்சுமியும் பணிநியமன ஆணையோடு வந்தார்கள். அப்போதுதான் முதன்முதலில் அறிமுகம் ஆனேன். பணி சம்பந்தமான எல்லா உதவிகளையும் செய்தேன். அதன்பிறகு தனலட்சுமி பணியில் இருக்கும்போது (கணவனை இழந்த பெண்) என்றதால் நிறைய பாலியல் ரீதியான தொந்தரவுகள் இருந்தது அதை நான் வெளியில் இருந்து தடுத்தேன்.

தன்னம்பிக்கையும், தைரியமும் ஏற்படும் வகையில் அவர்களிடம் பேசினேன். உதவிகளைச் செய்தேன். மனிதாபிமான அடிப்படையில் தான் உதவிகளைச் செய்தேனே தவிர அவர்களை திருமணம் செய்ய வேண்டும் என்ற எந்த எண்ணமும் எனக்கு அப்போதைக்குக் கிடையாது.

**உங்களுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று உங்கள் வீட்டில் பேச்சு வார்த்தை நடந்ததா?**

என்னுடைய திருமணத்தைப்பற்றி எங்களுடைய வீட்டில் பேசும்போது நான் சொன்னது நான் திருமணம் செய்தால் கணவனை இழந்த பெண்ணைத்தான் திருமணம் செய்வேன். இல்லையென்றால் சாதி மறுப்புத் திருமணம்தான் செய்வேன். இந்த இரண்டுமே இல்லையென்றால் நான் திருமணமே செய்யாமல் உங்களுக்கு உதவியாக கடைசி வரைக்கும் இருந்துவிடுகிறேன் என்று சொன்னேன்.

நான் இப்படிச் சொன்னவுடன் 2 வருடம் அமைதியாக இருந்தார்கள். அந்த 2 வருட இடைவெளியில்தான் நான் தனலட்சுமியை சந்தித்தேன். என்னுடைய தங்கை வந்து என்னிடம் உங்களுக்கு பெண் பார்த்து இருக்கிறோம். நீங்கள் ஒரு முடிவைச் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று கட்டாயப் படுத்தினார். அப்போது நான் யோசித்தேன் நாம் ஏன் முதலில் தேர்ந்து எடுத்த முடிவிலிருந்து மாறாமல் இருக்கக்கூடாது என்று நினைத்து தனலட்சுமியை நாம் ஏன் வாழ்க்கைத் துணையாக ஏற்கக்கூடாது என்று முடிவு செய்தேன்.

பின்பு தனலட்சுமியிடம் வீட்டு முகவரியை மட்டும் கேட்டுக்கொண்டு அவர்களுடைய வீட்டிற்குப் போய் தனலட்சுமியின் அப்பா, அம்மாவிடம் பேசினேன். என்னைப்பற்றியும், எனது குடும்பத்தைப் பற்றியும் பேசினேன். தனலட்சுமி வேலை செய்யுமிடத்தில் நிறைய பிரச்சனைகள் இருக்கிறது. அதை எல்லாம் நான் வெளியில் இருந்து தடுத்துக்கொண்டு இருக்கிறேன். இதை அதிக நாட்கள் வெளியில் இருந்து நான் செய்ய முடியாது. எனவே நான் உங்களுடைய பெண்ணை வாழ்க்கை துணையாக ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் சம்மதித்தால் மட்டுமே என்று சொன்னேன். பின்பு அவர்களும் யோசித்தார்கள். 6 மாதங்களுக்குப் பிறகு அவர்கள் முடிவைச் சொன்னார்கள். பின்பு நாங்கள் இருவரும் 1993-ல் பொள்ளாச்சியில் தனியாக வீடு எடுத்து வசித்து வந்தோம்.

> “ நகராட்சியில் ஒரு கவுன்சிலர் பதவியில்கூட இல்லாத பெரியார்தான் இந்திய அரசியல் சட்டத்தையே முதன்முதலில் திருத்த வைத்தார்.

**உங்கள் திருமணம் எந்த முறையில் நடந்தது?**

பெரியாரியலை ஏற்றுக்கொண்ட நான் விதவை மறுப்பு அல்லது ஜாதி மறுப்புத் திருமணம்தான் செய்வேன் என்று உறுதியாக இருந்ததால், எங்கள் குடும்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட திருமண முயற்சிகளைத் தவிர்த்தேன். தோழர் தனலட்சுமி கணவனை இழந்து 10 வயதுக் குழந்தையோடு இருப்பதால் ஜாதி மறுப்பிலும் வருவதால், அவர்களையே திருமணம் செய்து கொள்ளலாம் என முடிவு செய்தேன்.

1990-ல் இருந்து லிவிங் டுகெதர் - ஆகச் சேர்ந்து வாழ ஆரம்பித்தோம். இந்துச் சமுதாயத்தில் திருமண முறைகள் என்று நடைமுறையில் உள்ள எந்த முறையையும் நாங்கள் கடைபிடிக்கவில்லை. கம்பேனியன் வாழ்க்கையைத்தான் தொடங்கினோம். அதற்கென தனியாக, வேறு எந்த அறிவிப்பும் செய்து கொள்ளவில்லை. பிற்காலத்தில் எங்கள் குடும்பத்தில் ஏற்றுக்கொண்டார்கள்.

**நீங்கள் இருவரும் சேர்ந்து வாழலாம் என்று முடிவு செய்த பின்பு ஏதாவது ஒப்பந்தம் செய்து கொண்டீர்களா?**

ஆமாம். தனலட்சுமியின் குடும்பம் ஏழ்மையான குடும்பம். அதனால் நீ சம்பாதிக்கும் வருமானம் அனைத்தையும் உன்னுடைய குடும்பத்திற்கே நீ செலவு செய்யலாம். ஆண் பிள்ளையைப் போல அந்தக் குடும்பத்தை நீ வழிநடத்தலாம். இதில் எனக்கு எந்த ஒரு பிரச்சனையும் இல்லை. நாம் இருவரும் சேர்ந்து வாழ்வதற்குத் தேவையான எல்லாச் செலவுகளையும் நானே செய்து கொள்கிறேன் என்று சொன்னேன். இப்பவரைக்கும் நான் அப்படித்தான் இருக்கிறேன். சம்பளத்தைப் பற்றி எந்த ஒரு கணக்கும் கேட்டது கிடையாது.

இன்னொரு ஒப்பந்தம் என்னவென்றால் நாங்கள் இருவரும் இணையும்போது பையன் 6-ஆம் வகுப்பு படிக்கிறான். நல்ல விவரம் தெரிகிற வயது இனி நமக்கு குழந்தைகள் வேண்டாம். இந்த ஒரு பையன் மட்டும் போதும் என்று சொன்னேன். இந்த இரண்டு நிபந்தனைகளை தனலட்சுமி-யிடம் சொன்னேன்.

**நீங்கள் இருவரும் இணைந்து வாழ்வதற்கு உங்கள் குடும்பத்தார் ஏற்றுக்கொண்டார்களா?**

ஆரம்பத்தில் ரொம்பவும் கோபமாக இருந்தாங்க. 2 வருடம் கழித்து எங்களை ஏற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு நாங்களும் எங்களுடைய வீட்டிற்கு போவோம். அவர்களும் எங்களுடைய வீட்டிற்கு வருவார்கள்.என்னுடைய அப்பா உடல்நிலை சரியில்லாத காலகட்டத்தில் என்னுடைய அப்பாவை தனலட்சுமி ரொம்பவும் நன்றாக பார்த்துக் கொண்டார்கள்.ஒரு மருமகளாக இல்லாமல் மகளைப் போல பார்த்துக்கொண்டார்.

**இந்து மதத்தினரை வழிநடத்துவது மனுசாஸ்திரம். அது இந்துப்பெண்களுக்கு தந்தை வழிச்சொத்தில் அல்லது பூர்வீகச் சொத்தில் உரிமையைக் கொடுக்கவில்லை, மறுக்கிறது. பெண்விடுதலைக்குப் போராடுபவர்களின் முக்கியமான செயல், பெண்களுக்குத் தந்தைவழிச் சொத்தில் உள்ள உரிமையை உறுதிப்படுத்துவது ஆகும். அதுதான் மனுசாஸ்திரத்திற்கு எதிரான நடவடிக்கையும் ஆகும். பெரியாரியலை வாழ்வியலாக ஏற்றுக்கொண்ட நீங்கள் சொத்துவிசயத்தில் எப்படி நடந்துகொண்டீர்கள்?**

*எங்களுக்கு நகரத்தில் மெயின் ரோட்டுப் பகுதியில் ஒரே ஒரு வீடு மட்டும் இருந்தது. என்னுடைய அப்பாவிற்கு 2 மனைவிகள். நான் எனக்குப் பிறகு 3 தம்பிகள், 2 தங்கைகள். என்னுடைய அப்பா நோய்வாய்ப்பட்ட காலங்களில் 1996-ல் உயில் எழுதி வைத்திருந்தார். அந்த உயிலில் என்னுடைய பெயரும் தம்பிகளின் பெயரும் இருந்தது. சகோதரிகளின் பெயர்கள் இல்லை.*

*நான் குடும்பத்தில் மூத்த மகன். பெரியாரியலை அறிந்தவன். அதனால் நான் என்னுடைய சகோதரிகளுக்கும் சொத்தில் பங்கு தரவேண்டும் என்று விவாதம் செய்தேன். அப்பா 1998-ல் இறந்துவிட்டார். அதன்பிறகு எங்களுடைய வீடு 2012-ல் விற்கப்படுகிறது. பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம் 1989-ல் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் திருமணம் செய்த அனைத்துப் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உள்ளது என்று சட்டமே சொல்கிறது என்று என்னுடைய பெரும் போராட்டத்திற்குப் பிறகு என்னுடைய சகோதரிகளுக்கும் சொத்தில் சரிபகுதி தரலாம் என்று தம்பிகள் ஒப்புக்கொண்டார்கள்.*

*ஆனாலும் என்னுடைய சித்திக்கு பங்கு கிடையாது என்று என்னுடைய தம்பிகளும் முதல் சகோதரியும் தர மறுத்தார்கள். நானும் என்னுடைய 2-வது சகோதரியும் சேர்ந்து சித்திக்கும் ஒரு பங்குதர வேண்டும் என்று சொன்னோம். எங்களுடைய வீடு 2012-ல் விற்கப்படுகிறது.அதில் ஒரு பங்கை பிரித்து எங்களுடைய சித்திக்கு பணமாகக் கொடுத்தோம். அதை நானே எடுத்துக் கொண்டுபோய் சித்தியின் வங்கிக் கணக்கில் சேமிப்புச் செய்தேன். அதில் வரும் வட்டியை மாத மாதம் வாங்கிகொள்ளுமாறும் செய்தேன்.*

*அது மட்டுமில்லாமல் ஒரு வீடு வாடகைக்கு விட்டுள்ளோம். அந்த வீட்டு வாடகையையும் மாத மாதம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். சொத்து பிரித்து என்னுடைய தம்பி, தங்கைகள், சித்தி இவர்களுக்கே கொடுத்துவிட்டேன். அதில் இருந்து எந்த ஒரு பங்கும் நான் வாங்கிக்கொள்ளவில்லை. என்னுடைய வருமானமே எனக்குப் போதுமானதாக இருந்தது.*

**உங்களுக்காக நீங்கள் சொத்து ஏதும் சேமித்து வைத்திருக்கிறீர்களா?**

*ஆரம்பத்தில் கொஞ்சம் இடம் வாங்கிப் போட்டு இருந்தேன். குடும்பச் சூழல் காரணமாக இடத்தை விற்றேன். ஆனால் எங்களுடைய மகன் குடும்பத்திற்குத் தேவையான வற்றை இன்றுவரை பூர்த்திசெய்து கொண்டு இருக்கிறோம். எங்கள் இருவருக்கும் என்று சொந்த வீடு ஏதும் வாங்கவில்லை. நாங்கள் இருவரும் வாடகை வீட்டில்தான் வசித்து வருகிறோம். எங்கள் இருவருக்கென்று சொத்து எதுவும் சேர்க்கவில்லை.*

**2012-ல் தலித் அல்லாத கூட்டு இயக்கம் ஒன்று கூடியது அவர்களின் முக்கியமான கோரிக்கையில் ஒன்று பெண்களுக்கு சொத்துரிமை தரக்கூடாது என்று சொல்கிறார்கள் அதை எப்படி பார்க்கிறீர்கள்?**

*என்ன முற்போக்குச் சிந்தனை பேசினாலும் சுய சாதி பற்றுள்ளவரும், சுய மதத்தைப் பெரிதாக நினைப்பவர்களும் எந்த உரிமையையும் யாருக்கும் தரமாட்டார்கள். பெண் குழந்தைகளுக்கு பிறந்ததில் இருந்து சடங்கு, சம்பிரதாயங்கள், படிப்பு, திருமணம், பிரசவச்செலவு இவை எல்லாம் செய்து சரியாகப் போய்விட்டது என்கிறார்கள். ஆனால் ஆண்பிள்ளை வீணான செலவுகளைச் செய்து சொத்தை அழிக்கிறான். அவனுக்கு மட்டும் மீதியுள்ள சொத்தை எழுதி வைப்பதுபோல் பெண்களுக்கும் சம்மாக சொத்தை எழுதி வைக்கவேண்டும்.*

*புதியதமிழகம் தோழர் கிருஷ்ணசாமி அவர்களே, "நாங்க பள்ளர்கள் அல்ல மள்ளர்கள் எங்களுக்கு இடஒதுக்கீடு வேண்டாம்" என்று சொல்லும் அளவிற்குப் போனார்கள். கிருஷ்ணசாமி மற்றும் பிற்படுத்தப்பட்ட சுயசாதிப் பற்றுள்ள தலைவர்களும், சுயமதப் பற்றின் காரணமாகப் பேசுகின்ற வார்த்தைகளும், வைக்கிற கோரிக்கைகளையும் தலித் அல்லாத கூட்டு இயக்கத்தைச் சார்ந்தவர்களின் அந்தச் சமூகப் பெண்களே இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நான் சவால் விடுகிறேன் நீங்கள் வேண்டுமானால் ஒரு வாக்கெடுப்பு எடுங்கள், இதில் பெரியார் தான் வெற்றி பெறுவார்.*

**பெரியார் சொன்னதுபோல் பெண்களுக்கு சட்டப்படி சொத்துரிமை கிடைத்துவிட்டது. ஆனால் முழுமையாக பெண்விடுதலை இன்னமும் கிடைக்கவில்லை ஏன்?**

*இந்த கேள்விக்கான பதில் பெரியார் எழுதிய விடுதலை ஏட்டில் உள்ளது(18.03.1947). பொதுவாக நம் பெண்கள் சமுதாயத்தில் தலைகீழான புரட்சி ஏற்பட்டாலே ஒழிய நாம் வேறு துறைகளில் எவ்விதமான பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்தாலும் எந்தப் பயனும் ஏற்படாது.*

*பெண்கள் உண்மையான மனிதப்பிறவிகளாக நடமாட வேண்டுமானால் மூன்று காரியங்கள் உடனே செய்யபடவேண்டும். முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்கள் வெளியேற்ற வேண்டும். இரண்டாவது நகை, புடவை, அலங்காரப்பேயை அவர்களிடமிருந்து விரட்ட வேண்டும். மூன்றாவது இப்போதுள்ள திருமணச் சிக்கல்களைத் துண்டுத்துண்டாக நறுக்கிவிட வேண்டும். இந்த மூன்றும் பெண்கள் வாழ்வில் சிந்தனைப் போக்கில் மாற்றங்கள் உருவாக்கக் கூடியவை என்ற கருத்தில்தான் பெரியார் அவ்வாறு கூறினார்.*

பெரியார் சுயமரியாதை இயக்கத்தில் எத்தனையோ பெண்களை உருவாக்கினார். சுதந்திரமாகச் செயல்பட வைத்தார். ஆனால் இப்போதுள்ள இயக்கங்களிடம் பண்பாட்டு மாற்றத்திற்கான வேலைப்பாடுகள் குறைவாக இருக்கிறது. அதிகப்படுத்தினால் நன்றாக இருக்கும்.

**பெரியாரியலை வாழ்வியலாகக் கொண்டு வாழ்பவர்களுக்கு நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

பெரியாரிலைச் சார்ந்து வாழ்பவர்கள் பெரியாரின் கொள்கைகளைச் சமூகத்தில் கொண்டுவரவேண்டும் என்று நினைக்கிற இணையர்கள் தன்னுடைய பெண்குழந்தைகளை பெரியார் காண விரும்பிய முற்போக்கான சிந்தனையில் வளர்க்க வேண்டும். பெண்ணுக்கு முழுமையான கல்வியையும், வேலைவாய்ப்பையும் சரிசமமாக பிரித்துக் கொடுத்தால் அவர்களுடைய எதிர்காலத்தை அவர்கள் நிர்ணயம் பண்ணிக் கொள்வார்கள். இதைப் பல இடங்களில் பெரியார் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்.

மிகமுக்கியமாக, தங்களது ஆண்குழந்தைகளுக்குப் பாலின சமத்துவத்தைப் பயிற்றுவிக்க வேண்டும். பெரிய போராளிகள், புரட்சியாளர்கள், சிந்தனையாளர்கள், களப்பணியாளர்கள் வீட்டு ஆண் பிள்ளைகள் இன்னும் ஒரு சராசரி ஆணாகவே வளர்கிறார்கள். தனக்குத் தானே ஒரு காபி போட்டுக்கொள்ளவோ, தனது உடைகளைத் தானே துவைத்துக் கொள்ளவோ ஆண் பிள்ளைகள் பழக்கப்படுத்தப்படவில்லை. பெண்களை ஒரு சக உயிராக மதிக்கக் கற்றுத்தரப் படுவதில்லை. பிறகு எப்படி சமுதாயத்தில் மாற்றம் வரும்?

பெண்ணுக்கு திருமணம் என்பதை அந்தப் பெண்ணே முடிவு செய்துவிட்டு நம்மிடம் சொல்லும் நிலையை உருவாக்கித்தரவேண்டும். பெண்களை முடிவெடுக்கப் பழக்கவேண்டும். படிப்பு முடிந்தது இனி திருமணம் செய்து வைக்கலாம் என்று பெற்றோர்கள் முடிவு செய்து பிள்ளைகளிடம் சொல்லும் நிலை இருக்கக்கூடாது. இது பகுத்தறிவாளர் குடும்பங்களுக்குள் வரவேண்டும்.

பெரியார் சொல்வது மக்கள் கருத்தை திரட்டிக்கொண்டு நாம் முன்னே நடந்தால் மத, சடங்கு, சட்டங்கள் இவையெல்லாம் என் பின்னால் நெட்டிக்கொண்டு வரும். நகராட்சியில் ஒரு கவுன்சிலர் பதவியில்கூட இல்லாத பெரியார்தான் இந்திய அரசியல் சட்டத்தையே முதன்முதலில் திருத்த வைத்தார். தீவிரவாத இயக்கங்கள்கூட இதைச் செய்யவில்லை. இனிவரும் காலங்களில், பெரியாரின் கொள்கைகளை முதலில் பெரியார் இயக்கங்களில் உள்ள குடும்பங்களாவது வாழ்வியலாகப் பின்பற்றத் தொடங்கினால், இந்தச் சமூகம் கண்டிப்பாக மாறும். அதற்கான முயற்சியைத்தான் காட்டாறு குழு செய்துகொண்டு இருக்கிறது.

# சாதி கூழ்[ல்] உலகு

வசந்தப்பிரியன்



வெளுப்பவன் வெளுக்க
சிரைப்பவன் சிரைக்க

செருப்புத் தைக்க
மலத்தை அள்ள

பறையடிக்க
பண்ணை வேலை செய்ய

ஆடு மாடு மேய்க்கக்கூட
அவன் சாதி பிரிக்க

“நாங்க ஆண்ட பரம்பரை” ன்னு
அரைகுறைகள் கூவும் சுத்தம்

வெதச்ச வெள்ளாமை முடிக்க
செக்குமாடாச் சுமக்க

உழைச்ச தேகமெல்லாம்
ஓடாத்தேஞ்சிருக்க

உலை வைக்க இன்னும்
ரேசன் அரிசி

எல்லா நம்ம தலைவிதின்னு
நமக்கு நாமே உபதேசம்

சாதிக்கொரு தொழில்
தொழிலுக்கொரு சாதி என்ற
சங்கதி புரியாமல்

பாரம் குறைய
பெருமாள் தரிசனம்
தட்சணையும் காணிக்கையும்
அர்ச்சனைக்கு அளக்க

நோகாமல் நிறைகிறது
“எல்லாந்தெரிஞ்ச ஏகாம்பரத்தின்” வயிறு.

பழ.பிரபு, ஊற்றங்கரை



# மாமிசம் சாப்பிடுவதே அதிக ஜீவகாருண்யம்

– பெரியார்

..."இயற்கையின் தத்துவம் எப்படி இருந்தாலும் உற்பத்திப் பொருள்கள், ஜீவன்கள் எல்லாம் மனிதனுடைய உணவுக்குத்தான் பயன்படுகின்றன. மனிதன் ஒருவனைத்தவிர அநேகமாக எல்லா ஜீவராசிகளும் உணவுக்குத்தான் பயன்படுகின்றன. ஒன்றை ஒன்று தின்று வாழ்கின்றன."

..."மனிதனுக்கு கிரமமான உணவு மாமிசம் தான். அதை விட்டுவிட்டுப் பழக்க வழக்கத்தை உத்தேசித்துச் சும்மா அதனை ஒதுக்குகின்றார்கள். இதனால் மக்கள் பலவீனர்களாகத்தான் ஆகின்றார்கள். மக்கள் விவசாயப்பண்ணை வைத்துக் கொண்டு தானியங்களை உற்பத்தி பண்ணுவது போல மாட்டுப் பண்ணைகள் வைத்து, நல்ல வண்ணம் வளர்த்துப் பெருக்க வேண்டும். பசுவைப் பாலுக்கு வைத்துக் கொண்டு காளை மாடுகளை உணவுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்."

..."நாமும் காய்கறி அரிசி உணவைக் குறைத்துக் கொண்டு மாட்டு மாமிச உணவைத் தாராளமாகச் சாப்பிட வேண்டும். மலிவு விலையில் கிடைக்கப் பெரிய பெரிய மாட்டுப்பண்ணைகள் ஏற்படுத்த வேண்டும். மாடு தின்பது பாவம் அல்ல. அப்படியே பாவம் என்றாலும் கோழி தின்பதில் எவ்வளவு பாவமோ அவ்வளவு பாவம் தான் மாடு தின்றாலும் ஆகும். நமது சாமிக்கே மாடு, எருமை, கோழி, பன்றி முதலியன காவு கொடுத்துதானே வருகின்றார்கள்."

..."மேல்நாட்டவர் மனஉறுதியுடனும் சுறுசுறுப்புடனும் இருப்பதற்கு அவர்களின் உணவு முறைதான் காரணமாகும். நாம் சுத்தச் சோம்பேறிகளாகவும் மனஉறுதி அற்றவர்களாகவும் இருக்கக் காரணம் நமது சத்தில்லா உணவு முறை தான் ஆகும்."

...."நாம் சக்தி குறைந்தவர்களாகவும், மன உறுதியற்றவர்களாகவும் ,சோம்பேறிகளாகவும் இருக்கக் காரணம் நமது அரிசி உணவு தான். அரிசி மனிதனைச் சாகாமல் வைத்திருக்குமே ஒழிய வலிவு உடையவனாக இருக்க உதவாது. அதில் சத்து இருக்காது. மற்ற காய்கறிகளிலும் அவ்வளவாகச் சத்து அதிகம் இராது. அரிசியும் காய்கறியும் சோம்பேறியாக ஊரார் உழைப்பை உண்டு வாழக் கூடியவர்களுக்கு வேண்டுமானால் பொருந்துமே ஒழிய உழைப்பாளிகளுக்கு ஏற்றதல்ல."

- விடுதலை 03.02.1964

நம் மக்களுக்கு அரிசிச்சோறு தேவையற்றது: பயனற்றது. மாமிசம் சாப்பிடுவதை விட்டுக் காய்கறிகளை மட்டும் உண்பது நமக்குக் கேடாக வந்த பழக்க மாகும். மாட்டு இறைச்சியை ஒதுக்கியதும், மூடத்தனமாகும். வடநாட்டாருக்கு நம்மைவிட உடல் வளர்ச்சி, வலிவு, துணிவு அதிகமாகக் காணப்படுவது அவர்களின் உணவு முறையால் தான்

- விடுதலை 03.07.1964

மாமிசம் உண்பது உலகெங்கும் மக்களுக்கு இயல்பாகி விட்டது. ஒரு சிறு கூட்டத்தினரே மாமிசம் உண்பதில்லை. ஆனால் அவர்களே வஞ்சம், கொடுமை மிக்கவராயுள்ளனர். வாயினால் மட்டும் ஜீவகாருண்யம் பேசுவது மோசடியே.

- விடுதலை 30.05.1968

காய்கறிகள் சாப்பிடுவதை விட மாமிசம் சாப்பிடுவது தான் அதிகமான ஜீவகாருண்யம் என்பதாக உணர்ந்தேன். எப்படி என்றால், உயிர் இருப்பதால் தான் அது ஜீவனாகின்றது. ஜீவனை வதைத்துச் சாப்பிடுவது மாமிசமாகின்றது. ஆகவே ஒரு செடியின் தழைகளைக் கிள்ளிப் பிடுங்கும் போதும் அவைகள் படும்பாடு சித்திரவதைக்கு ஒப்பாகிறது .என்று 'போசு' சொல்கிறார். எனவே ஒரு ஜீவனைத் தினம் பல தடவை வதை செய்து அதைத் துன்புறுத்துகிறோம் என்பதை உணர நேரிட்டது. இப்போதும் அதை நினைத்தால் சகிக்க முடியாத துக்கம் வருகிறது. ஆனால் மாமிசம் அப்படியல்ல. ஒரு ஜீவனைச் சாப்பிடுவதனால் ஒரு தடவைக்கு மேல் யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள். அதுவும் நொடியில் முடிந்து போகும். ஆதலால்தான் கிழங்கு, கீரை, காய்கறிகளை விட மாமிசம் சாப்பிடுவது ஜீவகாருண்யம் ஆகும்.

- விடுதலை 23.02.1969

பன்றி, மாடு சாப்பிடக்கூடாது என்று எந்த ஆதாரத்தில் உள்ளது? பழக்க வழக்கத்தின் காரணமாக, சுற்றுச் சார்பு காரணமாகவே சாப்பிடுவது கூடாது என்று உள்ளதே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

- விடுதலை 14.11.1972



அரசூர் அ.ப.சிவா

# நாலு பேரு நாலு விதமா பேசியது



**செல்லாது செல்லாது**

நவம்பர் எட்டாம் தேதி இரவு வந்த அந்த அறிவிப்புதான் இந்த ஆண்டின் பரபரப்பான அறிவிப்பு. அறிவுத் தளத்திலிருந்து அடித்தட்டு மக்கள் வரையும், தொலைக் காட்சி முதல் சமூக வலை தளங்கள் வரை பிரித்து மேய்ந்து அலசி ஆராய்ந்து விட்டாகிவிட்டது.

ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறுவது பற்றியும் கருப்புப்பணம் பற்றியும் பேசிக் களைத்தாகி விட்டது. இனி நாம் சொல்ல ஒன்றுமில்லை என்ற நிலையில் பேசித் தீர்த்த செய்தி அது. ஆனால் அறிவிப்பு வெளியான அடுத்தடுத்த நாளில் காலை வீட்டில் இருந்து கிளம்பும் போது பாப்பாவின் வேண்டுகோள் மட்டுமே நான் சொல்லவேண்டியது.

“அப்பா, இந்த நோட்டு சொல்லதாம் பேங்க் போய் மாத்திட்டு வா” என்றபடி தன்னிடம் இருந்த இரண்டு நாப்பது பக்க நோட்டை கொடுத்தாள்.

**மலிவு விலை மாடல்**

உள்ளாட்சி தேர்தல் வரும் எப்படியோ எல்லா வேட்பாளர்களும் விளம்பரம் பன்னுவாங்க. சமூக வலைத்தளங்ளில் பகிரும் வரையில் விளம்பரம் செய்யாலம் என்ற நினைப்பில், நண்பர் ஒருவர் தன் ஸ்டுடியோவின் தொடர்ச்சியாக விளம்பர நிறுவனம் ஒன்று தொடங்கினார்.

இப்பவோ, எப்பவோன்னு தேர்தல் இழுக்க, சரி உள்ளூரில் உள்ள கடைகளில் விளம்பரம் பிடித்து வியாபாரத்தைத் தொடராலாம் அப்படின்னு, ஒரு வாராமாக கடை கடையா ஏறி இறங்கி எப்படியோ நாலு விளம்பரங்களை பிடித்து விட்டார். அதில் இரண்டு விளம்பரங்கள் பொருளாதார மேதை மோடியின் தயவால் திரும்ப பெறப்பட்டபின் புலம்பித் திரிந்தார் நண்பர்.

திடீரென அவரிடமிருந்து அழைப்பு. அவசரமாகப் போனால் அவருக்கு விளம்பரம் கொடுத்த துணி கடைக்கார் ஒருவர் போன வாரம் லோக்கல் சேனலில் ஆல் இன் ஆல் அழகு ராஜா படம் பார்த்து விட்டு கரீனா சோப்ரா மாதிரி ஒரு மாடல் வேணும் என சொல்லிட்டார் என்றார் வருத்தமாக.

அந்தாளு என்ன கிண்டல் செய்யுறாரா? என்றால், அதெல்லாம் ஒன்னுமில்லை நோட்டுப் பிரச்சனையில் விளம்பரம் எடுப்பதைத் தள்ளிப் போடுவதற்குப் பதிலாக, ஏதோ சாக்கு சொல்கிறார் என்றார். சரி ஒரு விஜபி மாடல் பிடித்து விட வேண்டியாதுதானே என்றேன்.

அட, கடுப்பேத்தாம போங்க அந்தாளு கொடுக்கிற பட்ஜெட் க்கு எங்கே போய் விஜபி மாடல் பிடிக்கிறது என்றார் சலிப்பாக. எவ்வளவு பட்ஜெட் என்றதுக்கு, அது வந்து மொத்த செலவே ஐம்பதாயிரம் என்றார். இதில போய் எங்க விஜபி மாடல் பிடிக்கறது?

அட, என்னங்க உலகம் புரியாத ஆளா இருக்கறீங்க, நம்ம நாட்டுல தான் உலகத்திலேயே குறைவான விலையில் வி.வி.ஐ.பி மாடல் கிடைக்கிறாரே? அப்படியா என அவர் ஆச்சரியப்பட, அந்த மாடல் வேற யாருமில்லை. இந்தியப் பிரதமர் மோடியேதான். சம்பளம் வெறும் ரூபாய் ஐநூறு மட்டுமே. முடிக்கும் முன் காளியப்பன் துணிக் கடை தாங்க என போனில் கேட்டுக் கொண்டிருந்தார் நண்பர்.

**ஒரே ஓப்பனிங் சாங்**

வெள்ளிக்கிழமை தவறாமல் தியேட்டர் பக்கம் போகும் நண்பர்கள் டீம் சார்பில் அன்னிக்கு அரட்டை நடந்து கொண்டிருந்தது. “ரஜினியின் ஒப்பனிங் சாங் தான் எப்பவுமோ சூப்பர் அண்ணமலை முதல் கபாலி வரை” அப்படி ஒருத்தன் சொல்ல, “என்ன இருந்தாலும் மக்கள் திலகம் தான் பெஸ்ட். பாடல்களின் மூலமே ஆட்சிய பிடித்தவர்” இது இன்னொருவன். அட என்னப்பா இது தல தளபதி காலம் என சொல்லிக் கொண்டிருக்கும் போதே இது தலைவலி காலம் என்றபடி உள்ளே வந்தார் கலைக்குழு நாராயணன்.

டிக்கெட் புக் பண்ணியாச்சா இல்லையா என்ற எங்கள் கேள்விக்குப் பதில் சொல்லாமல் கொடுமை கொடுமையின்னு கோவிலுக்கு போனா அங்கொரு கொடுமை தலையை விரிச்சு ஆடுச்சாமே என புலம்பியடி வந்தார். தெளிவாகச் சொல்லுங்க கேட்டது தான் பாக்கி.

நீங்க நிம்மதியாத் தூங்க யாருங்க காரணம்? என்றார் நாராயணன். வீட்டுக்குள்ளா? தியேட்டரிலா? என்றதுக்கு, “இந்த நக்கல் தானே வேண்டாங்கறது வீட்டுக்குள்ளதான்”, அதானே பாலச்சந்தர் ஆவியா வந்து படமெடுக்கிறேருன்னு நினச்சேன். என்றபடி வீட்டில் அப்படின்னா கொசுவத்தி சுருள் என்றேன். “அடச்சே உங்களுக்கு நாட்டுப் பற்றே இல்லை. எல்லையில் இராணுவ வீரர்கள் தயவால் தான் நாம் நிம்மதியாத் தூங்குறோம்”

“அந்த நாட்டுப் பற்றை உங்களுக்கு உணர்த்த தியேட்டரில் காட்சி தொடங்கறதுக்கு முன் தேசிய கீதம் ஒலிக்க விடப்போறாங்க. அப்ப திரையில் தேசியக் கொடியும் காண்பிப்பாங்க...” என்றார். கெட்டது போங்க 80 களில் நடைமுறையில் இருந்து பின்நாளில் திரும்பப் பெறப்பட்ட நடவடிக்கை இது.

*சரி இதனால் என்ன நடக்கப் போகிறது? என்றேன். உடனே பொங்கி எழுந்தார் நாராயணன், "நாத்துப் பத்து வளராதுங்களா?"*

*எப்படித் திங்கறதுன்னு சொல்லியாச்சு ( கைகழுவி), எங்கே போறதுன்னும் சொல்லியாச்சு( கழிவறை கட்டி) இந்தியா ஒரு வரலாற்றுச் சிறப்புக்குத் தயாராகி விட்டது. வரலாற்று சிறப்புக்குத் தயாரான இந்தியா வல்லரசாக என்ன செய்யலாம்? அப்படின்னு யோசிச்ச மத்திய பா.ஜ.க அரசு ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கு போல. ஏ.டி.எம் வாசலிலும், வங்கிவாசலிலும் நிற்பவர்களுக்கு இராணுவ வீரர்களை நினைவுபடுத்தியாச்சு. இனி பாக்கி திரையரங்களில் தான்.*

*'புகை பிடித்தல் உடலுக்கு கேடு விளைவிக்கும்' என்ற சிலைடு போட்ட உடன் அவசர அவசரமாகக் கையில் இருக்கிற முக்கால் வாசி முடிந்த தம்மை வீசிட்டு உள்ள வருகிற இடத்தில் வளருமா நாத்து பத்து? பேசிக்கொண்டிருக்கும் போதே அறைக்குள் இருக்கும் கழிவறை கதவைத் திறந்து கொண்டு வேகமாய் வந்தவன் சொன்னான் 23 ம் புலிகேசி ஸ்டைலில் கழிவறையில் இருக்கும் போது கண நேரத்தில் வந்த யோசனை இனி எல்லா நடிகர் படத்துக்கும் ஒரே ஓப்பனிங் சாங் தான்.*

*ஜெயகே..ஜெய,ஜெய,ஜெயகே ..*

**சோ கோ (CHO…GO…)**

*ஏற்கனவே அம்மா போன சோகம் வேற. நோட்டுப் பிரச்சனையில் வேலையும் இல்லை. கடை வேற மூணு நாளைக்கு லீவு. போதாக்குறைக்கு இன்னிக்கு சோவும் போயிட்டாரே? இங்க அஞ்சலி செலுத்தப் போன எந்தப் பெரிய மனுசனுக்காவது பொறுப்பு இருக்கா? எங்க மனசை புரிஞ்சுக் கறாங்களா? பொங்கித் தீர்த்தான் குடிமகன் பார்த்தசாரதி..*

*டேய்.. பார்த்தா.. என்னடா பிரச்சனை.. யார் அப்படிப் பேசுனாங்க இந்தக் கருப்புச்சட்டை பசங்களா? என்றேன் இல்லை என மறுத்தான் குடிமகன்.*

*ஓ…சோ…. எனக்கு பெரியப்பான்னு சொல்றதா இல்லை, அப்பான்னு சொல்றதா அப்படின்னு ஒய்.ஜி. மகேந்திரன் சொல்லிட்டரே அதுவா? இல்லை, இல்லை. அந்தாளுக்கு பிலால் மாலிக் கூட அப்பாவா இருந்துட்டு போறாரு அது அவங்க குடும்ப பிரச்சனை…*

*சோவின் மறைவு தேசியப் பேரிழப்பு அப்படின்னு ஆடிட்டர் குருமூர்த்தி சொன்னாரே அதுவா? அது மயிலாப்பூர் தேசியத்துக்கு. நமக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம் என்றான் குடிமகன் தெளிவாக.*

*'சோ'வை, தமிழக முதல்வராகப் பதவியேற்கச் சொல்லி மொராஜியும், இந்திராவும் வலியுறுத்திய தாக சிவக்குமார் சொன்னாரே அதுவா? அட போங்கய்யா வாஜ்பாய் மந்திரி சபையில் நியமண எம்.பி யாக இருந்த 'சோ' வை, எந்த அரசியல் பதவியும் வகிக்காதவருன்னு கூட சிவக்குமார் சொன்னார். அவரு மகாபாரதம் யுத்த காண்டத்துல மூழ்கிப் படிச்சுட்டு இருந்தப்ப சூர்யா 'சிங்கம் 3' படத்தைப் போட்டுக் காமிச்சுட்டாரு அதுல இருந்து இப்படித்தான்.*

*சோ… பொய்யே சொல்ல மாட்டரு… அப்படின்னு ரஜினி சொன்னது தானே? "க்கும் எதை எதை யாரு சொல்லறதுனே இல்லாம போச்சு அதில்ல" என்றான் குடிமகன் பார்த்தசாரதி.*

*நம்ம ராஜகுருன்னு மோடி சொன்னதாக சென்சார் போர்டு சேகர் சொன்னதுதானே.. அட அதெல்லாம் இல்லை மோடி சரியாத்தான் சொல்லியிருக்காரு. மோடி டீ போடுகிற போது 'சோ' தான் பால் சப்ளை, சேகர் பொய் சொல்ல மாட்டார்.*

*இப்பப் புரிஞ்சு போச்சு. ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் போராடுகிற எங்களை ஊக்குவிப்பார் என திருமா சொன்னதுதானே? அவுரு ஊக்கு வித்தப்ப இவரு வாங்கிருக்காரு இதுக்கு எனக்கென்ன வருத்தம்.*

*அட, போடா பார்த்தா… எது சொன்னலும் இல்லை அப்படீங்கற ஆ … நான் கடைசியாக் கண்டுபிடிச்சுட்டேன். அது வைகோ சொன்னது தானே?*

*ஏற்கனவே கடுப்பில் இருக்கிற என்னை மறுபடியும் கடுப்பேத்தாதே. இவரு பெரிய உலக இலக்கியத்தைக் கரைத்து குடித்தவரு தமிழில் சிறந்த பகடிக்காரர் 'சோ' வாம், அவுரு இடத்த நிரப்பவே முடியாதாம். சொல்றாரு புரட்சி புழுதி. அடச்சே புயல். வைகோவுக்கு குத்தூசி குருசாமி, எம்.ஆர்.ராதா பத்தியெல்லாம் நேத்திக்கு திராவிட இயக்கங்களுக்கு வந்த சின்ன பசங்க யாராவது பாடமெடுத்தாப் பரவாயில்லை.*

*என்னால் முடியலைடா பார்த்தா….நீயே சொல்லிவிடு என சரண்டர் ஆகிவிட்டேன். நீயே சொல்லு. 'சோ' பன்முகத்தன்மை வாய்ந்தவர் தானே என்றான். அட ஆமாம் மாற்றுக் கருத்து இருந்தவர் ஆயினும் அவர் நடிகர், பத்திரிக்கையாளர், வழக்கறிஞர், அரசியல் விமர்சகர் என பன்முகத்தன்மை வாய்ந்தவர்.*

*"பார்த்தியா.. நீயும் எல்லார் மாதிரி 'சோ'வின் பன்முகத்தில் முக்கியமான முகத்தை மறந்து விட்டுப் பேசற" என்றபடி அழுதுவிட்டான் பார்த்தா.*

*முடியலை என்னாலே நீயே சொல்லிவிடு. சரி சொல்றேன் 'மச்சி ஒரு குவாட்டர் சொல்லு நாளானைக்கு வாங்கித்தரனும்" என்ற கண்டிசனுடன் சொன்னான்…*

*எல்லோரும் மறந்த சோவின் அந்த முகம் தமிழக மக்களுக்கு வாரி வாரி வழங்கிய 'மிடாஸ் ஆலை'யின் முன்னால் இயக்குநர் என்ற முகம் தான்.*

*உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கிறவன் நான். என்றபடி ஊறுகாய் பாக்கெட்டை தேடிக்கொண்டிருந்தான் பார்த்தசாரதி.*

# உடன்பாடும் முரண்பாடும்

மௌ.அர.ஜவஹர், பழனி




சமீபத்தில் வெளியான ‘மாவீரன் கிட்டு’ படம் பார்த்தேன். தற்போதும் தினமும் தமிழ்நாட்டில் தனிச்சுடுகாடு, தனிக்குடியிருப்பு, தேனீர்க்கடைகளில் தனிக்குவளை, கோவில் சடங்குகளில் வித்தியாசம், முடிதிருத்தும் நிலைங்களில் அனுமதி இன்மை போன்றவை பெரும்பாலான கிராமங்களில் நடைமுறையில் உள்ளவைதான். இதை வெளிப்படையாகச் செயல்படுத்துபவர்கள் பிற்படுத்தப் பட்டவர்களே. எனவே அன்றாட வாழ்வு சம்மந்தப்பட்ட பிரச்சனைகளில் தாழ்த்தப்பட்டோரைக் கொடுமைப்படுத்துவது பிற்படுத்தப்பட்டவரே. இதுவே நடைமுறை உண்மை. இந்தப் பார்வையிலேயே தொடங்கும் படம் இறுதி வரை இதே பார்வையில் செல்கிறது.

இப்படத்தில் வரும் கிராமியச் சூழல் ‘அமைதியற்ற’ சூழலாகவே உள்ளது. தலித்துகளின் வளர்ச்சியைப் பிடிக்காத பிற்படுத்தப்பட்டவர் அதற்கு எதிராகக் காவல் மற்றும் அரசியலைப் பயன்படுத்துகின்றனர்.அதில் கருப்புச்சட்டையோடும் வார்த்தைகளில் சாட்டையோடும் வரும் சின்ராசு என்ற பார்த்திபன் தலித் இளைஞனின் கல்வி உயர்வு எவ்வளவு முக்கியம் என்பதைத் தெளிவாக்கி, கதையின் நாயகனை சரியாகச் செம்மைப்படுத்துகிறார்.

அதே சமயம் அவனுள் இருக்கும் போர் குணத்தைத் தன் சமூக வளர்ச்சி என்ற நோக்கில் கொண்டு செல்கிறார். கற்பி! சமூக முன்னேற்றத்திற்காக போராடு! என்ற நோக்கில் இப்படம் சரியாகச் செல்கிறது. ஆணவப் படுகொலை, பொதுப் பாதை மறுப்பு போன்றவறை கண் முன் நிறுத்தி வைக்கிறது. கல்வி கற்ற தலித்துகள் சம உரிமைக்காகத் தவிப்பதும், அந்தக் கல்விதான் இவற்றுக்குக் காரணம் என்று பிற்படுத்தப்பட்டவர் கொதிப்பதும் இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. அதையெல்லாம் விட ஒரு சமூக உணர்வுள்ள பிற்படுத்தப்பட்டவர் தன் பெண்ணை தலித் இளைஞனுக்கு மணமுடிக்க முடிவெடுப்பது வரவேற்க வேண்டிய காட்சி அமைப்பு. இவை எல்லாம் உடன்பாடானவை.

கல்வி கற்பதுதான் SC க்குத் திமிர் என்றும், அது காமராசர் செய்த வேலை என சொல்லப்படும் காட்சி ஒன்று வருகிறது. அந்த ஒற்றைவரிக்குள் இட ஒதுக்கீட்டின் வரலாற்றையே காணாமற் போகச் செய்ததாகத்தான்படுகிறது. தமிழகத்தில் ஊர்தோறும் உயர்நிலைப் பள்ளி, தெருதோரும் தொடக்கப் பள்ளி என்ற குறிக்கோளோடு தன்னால் இயன்றவரை கல்விக்கூடங்களை தமிழகத்தில் தொடங்கினார் கர்மவீரர் கல்வி வள்ளல் காமராசர் என்பதில் அய்யமில்லை. அதைக் குறைத்தும் சொல்ல வில்லை.

மாறாக ஆதிக்க உணர்வுள்ள சாதி வெறியுள்ள எந்தப் பிற்படுத்தப்பட்டவரும் காமராசரை வெறுப்பதில்லை. .மாறாக இட ஒதுக்கீட்டைத்தான் வெறுக்கிறான். எது தன் சமூக முன்னேற்றத்திற்கு ஏணியோ அதையே எட்டி உதைக்கப் பார்கிறான் காரணம். இட ஒதுக்கீடு தலித்துகளின் வளர்ச்சி மற்றும் சுயமரியாதைக்குக் காரணம் என நினைப்பதால்தான்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இப்படத்தைப் பார்க்கும் யாருக்கும் இட ஒதுக்கீட்டால் ஏற்படும் சமூக விளைவு என்ன என்பதை அறிய வாய்ப்பே தரவில்லை. மேலும் இக்கதைக் களம் 1987 என்பதை விட 1995 - 96 களில் என்றால்தான் பொருத்தமாக இருந்திருக்கும். ஏனென்றால் 87களில் ஈழச்சிக்கலே சமூக இயக்கங்களைக் கவ்வி இருந்தது. 1995 - 96களில்தான் தலித்துகளின் சுயமரியாதைப் போராட்டங்கள் பெரிதாக நடக்கிறது. எனவேதான் அக்காலகட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரி பிற்படுத்தப்பட்டோரா? பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரி தாழ்த்தப்பட்டவரா? என்ற இரு வெளியீடுகள் வெளியிட வேண்டிய சூழல் ஏற்பட்டது,(பெரியார் மய்ய வெளியீடுகள்)

இடஒதுக்கீடுதான் சாதிய நடைமுறை இறுக்கத்தைத் தளர்த்தும். உதாரணமாக, சாதிக் கலவரங்களில் ஈடுபடும் அரசு மற்றும் தனியார் அதிகாரிகள், ஊழியர்கள் எத்தனை பேர்? என்ற கேள்வியே இச்சமூகச் சூழலுக்கு விடை. மேலும் இப்படத்தில் போராட்டத்தின் கூர்மையை ஒரு தந்திரத்தால் கொண்டு செல்லப்படுவது என்பதுண நெருடுகிறது.

அது திரைப்படம் என்கிற அளவில் சரி ஆனால் சமூகச் சிக்கலைப் படமாக எடுக்கும்போது அது நெருடலாகத்தான் உள்ளது. படம் முழுவதுமே தாழ்த்தப்பட்டவருக்கு எதிரி பிற்படுத்தப்பட்டவர் என்றே கொண்டு செல்லப்படுகிறது. தாழ்த்தப் பட்டோருக்கு பிற்படுத்தப்பட்டோர் எதிரியா? பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரி தாழ்த்தப் பட்டோரா? அல்லது இருவருக்குமே யார் எதிரி? இப்படம் எதைச் சொல்ல வருகிறது என்பதைப் படம் பார்க்கும் சராசரித் தமிழன் எதை உணர்வான்?

அப்படியானால் இந்தக் கொடுமையை சொல்லவே கூடாதா? என்ற கேள்வி பிறக்கும். சொல்ல வேண்டிய விசயம்தான். மாறாக, பிற்படுத்தப்பட்ட சமுதாயமும் அடிமைதான். BC க்கு உள்ள சமூக இழிவு என்பது SC க்களை கீழே வைத்திருக்கும் இன்பத்தில் மிதந்து கொண்டி ருக்கிறான் என்பதையும் அல்லவா கோடிட்டாவது காட்டி இருக்க வேண்டும்?

கோவில்களில் தலித்துகளுக்கு மரியாதை மறுக்கப்படும்போது தலித்துக்கு ஆதரவு நிலை எடுத்துக் கொண்டு அதே சமயம் எஸ்.சி யும் பி.சி யும் கோவிலுக்கு வெளியில்தானே சண்டை செய்து கொள்கிறார்கள்! கருவறை என்பது இருவருமே நுழையக்கூடாத இடம் என்பதையும் சொல்வது தானே சமூகப் பார்வை? கருப்புச் சட்டை யிடமிருந்து இந்தக் கோணம் இப்படத்தில் காண முடியவில்லையே?

1981 ல் குஜராத்தில் தாழ்த்தப்பட்டோருக்குரிய வேலை வாய்ப்பில், பதவி உயர்வில் இட ஒதுக்கீட்டினை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ் துணையுடன் பார்ப்பன உயர் சாதியினர் போராடியபோது தலித்துகளுடன் பிற்படுத்தப்பட்டவர்கள் இணைந்து போராடாமல் ஒதுங்கி இருந்தனர்.

அதேபோல 1985ல் அதே குஜராத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 10 சதத்திலிருந்து 25 சதமாக அரசால் உயர்த்தப்பட்டது. உடனே இதை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ். துணையுடன் பார்ப்பனர்கள் போராடி வெற்றி பெற்றனர். இதில் தலித்துகள் பிற்படுத்தப்பட்டோருக்காகக் குரல் கொடுக்கவில்லை.

இதை உணர்ந்து தற்போது தலித், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் கூட்டணி உருவாகி வருகிறது. என்பதைக் கணக்கில் கொள்ள வேண்டும். இப்படம் இதையும் கணக்கில் எடுத்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

# டிசம்பர் 20

## பார்ப்பனரல்லாத திராவிட மக்கள் சமுதாயத்தின் திருப்பம் நிறைந்த

# பொன்னாள் !

இந்நாளில்தான் (1916) வெள்ளுடை வேந்தர் சர்.பி.தியாகராயர் பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை (The Non- Brahmin Manifesto) என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணத்தை அளித்தார்.

இந்த அறிக்கை எவ்வளவு சிறந்தது பார்ப்பனர் களிடையே எவ்வளவுப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது என்பதற்கு அடையாளம் அந்த அறிக்கை பற்றி 'மவுண்ட் ரோடு மகாவிஷ்ணு' வான இந்து ஏடு எழுதிய தலையங்க வரிகளே போதுமானவை!

*'It is with much pain and surprise that we persued the document'* என்று 'இந்து குறிப்பிட்டது என்றால், பார்த்துக் கொள்ளலாம்! மன பாரத்துடனும், ஆச்சரியத்துடனும் அந்த ஆவணத்தை ஆய்வு செய்தார்களாம்! அப்பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை நாட்டு நலனுக்குக் கேடு விளைவிப்பது மட்டுமல்ல, தேச முன்னேற்றத்தின் எதிரிகளுக்குத் துணை போகக் கூடியது என்கிற அளவுக்கு 'இந்து' நஞ்சைமையாகப் பயன்படுத்தி எழுதியது!

சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடைபெற்ற மாநாட்டில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை அன்றையப் பார்ப்பனர் ஆதிக்க நிலையையும், பார்ப்பனர் அல்லாதாரின் பரிதாப நிலையையும் படம் பிடித்துக் காட்டுவதாகும்.

1892 முதல் 1904 வரை நடைபெற்ற போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்ற 16 பேர்களில் பார்ப்பனர்கள் 15 பேர், சென்னை மாநிலத்தில் உதவி கலெக்டர் 140 இடங்களில் 77 இடங்கள் பார்ப்பனர்களுக்கே! 1913இல் மாவட்ட நீதிபதிகளுக்குரிய 128 நிலையான இடற்களில் பார்ப்பனர்கள் நங்கூரம் பாய்ச்சியது 93 இடங்களில்! இது போன்ற ஏராள புள்ளி விவரங்கள் அளிக்கப்படடிருந்தன.

"சர்.பி. தியாகராயரும், டாக்டர் நாயரும், தாமும் இராட்சதர்களாக ஆக்கப்பட்டோம்!" என்று தோழர் பெரியார் ('விடுதலை' 14.12.1950) கூறியதன் பொருள் மிகவும் ஆழமானது! பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்ப்பவர்களுக்கெல்லாம் வேத இராமயண காலத்திலிருந்து இந்தப் பட்டம்தானே!

- 'விடுதலை', 20.11.1999

பெரியார் நம்பி



# வரட்டுக் கௌரவம்

ஏனப்பா பழனிப்பா உம்பட தோட்டத்துல பண்ணக்கிருக்குர காளிவாடன் மவ டவுன்ல படிக்கப்போனடெத்துல உம்பட ஒன்னுவிட்ட பங்காளிப் பயலோட பழகி மூனு மாசமா முழுவாம இருக்காலாமில்ல நெசமா?

ஆமாங்க ஊர்ப்பண்ணாடி. அது நெசந்தா னுங்க நம்ம பயலுக காலனியூட்டுப் புள்ளங்கள ஒரு வாட்டி ரெண்டுவாட்டி பொழங்கிட்டு உட்டுட வேண்டிதானே இப்பிடியா முழுவாம போரளவுக்கா நடந்துகுறது?

சரி சரி... ஒரு அஞ்சோ பத்தோ கொடுத்து கருவக் கலைக்கச் சொல்ல வேண்டிதானே ... கவர் மெண்டு ஆஸ்பத்திரிக்கி போனாதான் வில்லங்க மாகும். இப்பத்தா நம்மூட்டுப் புள்ளங்க நெறய டாக்டரா படிச்சிருக்காங்களே அதுல ஏதோ ஒரு டாக்டருகிட்ட தனியாரு ஆஸ்பத்திரியில வெச்சுக் கருவக் கலச்சுட வேண்டியதானே?

காளிவாடங்கிட்ட வேண்டியமட்டும் நா சொல்லிப்பாத்துட்டேன். இரும்ப முழுங்கிட்டு செரி மானமாகத மலப்பாம்பாட்டம் நெளியிரானே யோழிய ஒண்ணும் பேசமாங்டேங்கிறான். நீங்கதான் ஊர்ப்பண்ணாடியாச்சே... அவனக் கூட்டியாறேன். செத்த சொல்லிப்பாருங்களே... இத இப்பிடியே உட்டுட்டா டவுன்ல படிக்கிற எம்பட பேரன் நாளைக்கி ஒரு பறச்சியோடப் பழகி அவ வயித்தத் தள்ளிகிட்டு எம்பட ஊட்டு வாசல்ல வந்து நின்னா சாதிகெட்டு சாதிகலப்பாயிடுமுல்ல... அப்பறம் சக்கிலி பறயனெல்லாம் நமக்குச் சம்மந்தியாயி சரிசமமா உக்காருவானுங்க.

சரி கூட்டியா பேசிப்பாப்போம்.

வாடா காளி.... என்ன இந்தப்பக்கமே ஆளக்கானாம்... காப்பித்தண்ணி ஏதாச்சு குடிக்கிறியா அந்தப் படல்ல மாட்டியிருக்குற கௌாச எடு காப்பித்தண்ணி ஊத்தச்சொல்றேன்.

அதெல்லா ஒன்னு வேனாமுங்க சாமி இந்தக் கழுத படிக்கப்போனடெத்துல இப்பிடிப் பண்ணியிட்டு வந்து நிக்கிதுங்க சாமி. அந்தப்பய ஆரு எவுருன்னு விசாரிச்சதுல எங்க பண்ணாடி யோட தூரத்து சொந்தமுங்களாம். அவுரும் டவுன்ல எம்மவ படிக்கிற அதே பள்ளிக்கோடத்துலதா படிக்கிறாராம். தோட்டத்துக்கு ஒரம்பரய வந்து பொழுதுல தோட்டத்துல எம்மவளப் பாத்துட் டாராம். அதிலிருந்து சிநேகிதமாயிடுச்சுன்னு சொல்றாங்க சாமி. எனக்கு என்னபன்ரதுன்னு ஒண்ணுமே புரியலங்க. இனி எப்பிடி எங்க பண்ணாடி மூஞ்ஜில முழிக்கிறதுன்ன தெரிலிங்க.... இந்தக் கழுத பண்ணுனதுல பண்ணாடி என்னைய பண்ணயத்துக்கு வேண்டாமுன்னு சொல்லிடு வாரோன்னு பயமாயிருக்கு.... கொஞ்ச நீங்களு எங்க பண்ணாடிகிட்டச் சொல்லுங்க சாமி... இந்த கழுத படிக்கிறதுக்குன்னு பண்ணாடிகிட்ட கடெங்கப்பு எக்கச்சக்கமா வாங்கி வைச்சிருக்கேனுங்க... கடனா வாங்குனதத் திருப்பிக் கொட்றான்னு கேட்டா ருன்னா திடுதிப்புன்னு அப்புட்டுக் காசுக்கு நானெங்க போறது சாமி... இனி அவுரோட பழகாதளவுக்கு நா அவளக் கண்டுச்சு வெச்சுக்கு ரேனுங்க. வயித்திலிருக்குற புள்ளயத்த என்ன பண்றதுன்னு தெரிலீங்க சாமி....

டே காளி....தோடங்காட்ல சாணி அல்லுற உங்களுக்கெல்லாம் பள்ளிக்கோடப் படிப்பெல்லா எதுக்குடா... அதுவும் பொட்டப்பள்ளயப்போயி பெரிய படிப்பெல்லா படிக்கிறளவுக்கு டவுனு பள்ளிக்கோட அனுப்பியிருக்கியே.... பொட்டப் புள்ளங்கள வயிசுக்கு வந்ததும் கட்டிகுடுத்துருந்தா, இந்த வம்பெல்லா வந்திருக்குமா? சரி உடு நடந்தது நடந்துபோச்சு... ஊருலகத்துக்கு தெரியரதுக்குள்ள காதுங்காது வெச்சமாதிரி சட்டுபுட்டுன்னு உம்பட சாதிசனத்துல ஒரு பயலப்பாத்து கண்ணாலத்துக்கு ஏற்பாடு செய்யி... இந்த பயலோட அப்பனாத்தாட்ட பேசி கண்ணாலச் செலவு முச்சூடும் ஏத்துக் சொல்றேன்... உம்பட பண்ணாடிகிட்ட நா பேசிக் கிறேன். பண்ணயத்துக்கு உன்ன வேண்டான்னு சொல்லாதளவுக்கு நா பாத்துகுறெேன். நீ போயி ஆகவேண்டியத பாரு...

ரெம்ப நல்லாரிப்பீங்க சாமி... நாம்போயி கண்ணாலத்துக்கான ஏற்பாட்டப் பண்றேனுங்க சாமி... எம்பட சாதிசனத்துல பொட்டப்புள்ளங்கள ஆரும் பள்ளிக்கோட அனுப்புனதில்லீங்க எம்மவ பள்ளிக்கோட போனது எனக்குப் பெருமயாதா இருந்துச்சுங்க... ஒரு நாலு எழுத்து கத்துக்குச்சுன்னா ஊரு ஒலகத்தத் தெரிஞ்சு அருஞ்சு பொழச்சுக்கு முன்னு ராப்பகலா எரும கண்ணு பாம்பு பள்ளின்னு பாக்காம ஒழச்சேனுங்க... அது வீணாப்போச்சுன்னு நெனச்ச வெசனமாயிருக்குங்க... ஏந்தங்கச்சி மவெ ஒருத்த ஒரு வேலவெட்டிக்கும் போகம தருதலயாச் சுத்திக்கிட்டிருக்கானுங்க... எந்தங்கச்சியு ரெண்டு மூனுதர பொண்ணு கேட்டு வந்துச்சுங்க... நாந்தா தரமாட்டேன்னு சொல்லிட்டேனுங்க அவங்கள வலியனா போயாச்சு பொண்ணு கேட்டு வரச்சொல்றேனுங்க சாமி.

அடக் காளி... ஆராரு தலயில என்னென்ன எழுதியிருக்கோ அதுபடிதாண்டா நடக்கும். இம்பிட்டு சொத்துபத்திருக்குற நானே எம்பட மவனப் பள்ளிக்கோடத்துக்கு அனுப்பல உங்களுக்கெல்லாம் எதுக்குடா படிப்பு போயி நல்ல காரியத்துக்கு நாளக்குறி.

**பழனியப்பனிடம்:**

பழனிப்பா.... நாம பயந்த மாதிரி ஒன்னு நடந்துடுல நீ காளிவாடன பண்ணயத்துக்கு வேண்டான்னு சொல்லிடுவேன்னு பயப்பட்றான். இவனுங்கள இப்படி பயங்காட்டியே வச்சுருக்குற வரைக்கும் நாம பண்ணாடிகளா வெள்ளயுஞ் சொல்லயுமா வெளியில சுத்திக்க முடியும். இவனுங்க புள்ளகுட்டியெல்லாம் பள்ளிக்கோடம் போயி படிச்சு வேற வேலவெட்டிக்கு போயிடுச்சுன்னா நம்ம பண்ணயத்துல ராப்பகலா நேரங்கால பாக்காம பாடுபட்றதாரு? நம்ம புள்ள குட்டிகெல்லா நம்மல மாதிரியே பண்ணாடிகளா சுத்துரதெப்பிடி?

நானும் எம்புடுத்தூரம் பேசியும் மசியாதவன எப்பிடியோ பேசி மடக்கிடீங்களே ஊர்பண்ணாடி. ஏதோ தலக்கி வந்தது தலபாகயோடபோச்சு. அந்தப் பயலோட அப்பனாத்தாட்ட பணத்தக் கொண்டாரச் சொல்றேன். அத வாங்கி சூட்டோட சூடா காளிவாடங் கைல்ல குடுத்துருங்க.

இப்பிடியெல்லாம் பாவத்த சம்பாரிக்கற தாலவோ என்னவோ எம்பட பயலுக்கொரு பொண்ணு அமய மாட்டேங்குது. நானும் பட்டிதொட்டியெல்லாம் சுத்தி அலசியிட்டே ஒண்ணுந் தோதுவாதா அமயல. நம்மாளுங்க, பொட்டப்புள்ளங்க பொறக்கறப்பவே வெத நெல்லப் போட்டி கொன்னுட்டாங்க போல... கொங்கஞ் ஜாதியில பொறந்த பசங்களுக்கு பொண்ணு கெடக்க மாடேங்குது.

நம்மூட்டு பயலுகயளயும் எட்டாங்கிளாசு பத்தாங்கெளசுளேயே நிறுத்தி கந்து கடக்கி அனுப்பியிடுறோமா... இருக்குற ஒண்ணுரெண்டு பொட்டப்புள்ளங்கள ஊட்டுல வெச்சுகமுடியாம காலேஜ் அப்பிடி இப்பிடின்னு அனுப்பி படிக்க வச்சுடுறோம். படிக்கப்போன நம்மூட்டு பொட்டப் புள்ளங்களும் ஒண்ணுரெண்டு காளிவாட மவளாட்டம் காதல் கத்திரிக்கான்னு, வேத்து ஜாதிப் பயலுகளோட ஓடிப்போயிருதுங்க. அதுபோக மீதமிருக்குற பொட்டப்புள்ளங்களுக்கு அவங்க படிப்புக்குத் தோதான மாப்பளய தேடிக் கண்ணாலங் கட்டி வக்கிறோம். கந்துக் கடக்கிப் போயி நாலு காசு சம்பாதுச்சவங்க மாமியாருக்கு நகை, மாமனாருக்கு மோட்டார் சைக்கிளுன்னு வாங்கிக் கொடுத்துக் கட்டிக்கிறாங்க. என்னயாட்ட வெவசாயமே கெதின்னு கெடக்குறவன் பொளப்புதா இப்பிடி சீப்புடுது.

நீங்க இம்புட்டுத் தூர நீங்க சொல்றதால எம்பட காதுக்கு வந்த ஒரு சேதியச் சொல்லிப் போடுறேனுங்க. ஊர்ப்பண்ணாடி உம்பட பய ஒட்டஞ்சத்தர மார்கெட்ல ராப்பகலா ஒரு மாதிரியான பொம்பளங்களோட சுத்தறதா ஊர் முச்சூடும் பேசிகிறாங்க. சட்டுபுட்டுன்னு ஒரு மொண்டி மூக்கரயப் பாத்துக் கண்ணாலங்கட்டி வச்சுருங்க. இல்லாட்டி உம்பட பேரு கெட்டுப் போயிருங்க.

பழனிப்பா... இந்த சேதி எப்பவோ எங்காதுக்கு வந்திடுச்சு. நீயாவது பட்டும்படாமச் சொல்ற. ஆனா ஊர்க்கவண்டன் மவெ ஊர்மேயறான்னு மூஞ்சிக்கி நேராவே பேசுறானுங்க. என்ன பண்றது அவனுக்கு வேற வயிசு நாப்பதத் தாண்டுதல்ல... நானு எப்பிடியாச்சு ஒரு கண்ணாலத்த மூச்சுடுலான்னுதா பாக்குறே ஒண்ணும் தோதுவாதா அமய மாட்டேங்கிது. அததுக்கு ஒரு நேரங்கால வரவேணாமா?

இப்பிடிக் கண்ணாலமே அமயாத நம்மூட்டுப் பயலுகளுக்குக் கேரளாவுக்குச்சேவ போயி கண்ணாலங்கட்டியிட்டு வாராங்களே?... அப்பிடி யாச்சு ஒண்ணப் பாக்கவேண்டியதானுங்க ஊர் பண்ணாடி?

என்ன சாதி என்ன கொலமுன்னு தெரியாமப் போயி எப்பிடி கண்ணாலங்கட்டுறது... அதில்லாம ஊர்ப்பண்ணாடின்னு பட்டிதொட்டியெல்லாம்

கூப்புட்டு ஒரு கவுருதயக் கொடுத்துடாங்க... நாம்போயி எந்த ஜாதியின்னு தெரியாததக் கட்டியிட்டு வந்துட்டா, நம்ம ஜாதிக் கவுருத என்னாவுறதுன்னுதா ஒரே யோசனயாயிருக்கு...

ஏனங்க இப்பிடி யோசிக்கிறீங்க? நம்ம தவுட்டுப்பாளயத்து ஊர்ப்பண்ணாடியும் அவுரு மவனுக்கு இப்பிடிதா கேரளாவுல போயிக் கட்டியாந்தாரு... அவுருக்கென்னா கவுருத கெட்டாப் போயிடுச்சு? நம்மூட்டுப் பசங்களுக்குத் தானே வேத்து ஜாதியில கட்டியாறோம். அது என்னா யிருந்தாலும் நம்ம சாதி வாரிசுதானே? நீங்க சரின்னு மட்டுஞ்சொல்லுங்க. நாளக்கே உம்பட ஊட்டுக்கு புரோக்கர அனுப்பி வைக்கிறேன்.

அது ஒண்ணிலீப்பா பழனிப்பா...கேரளாவுல கட்டியாறது பூரா, தாந்த சாதிப்புள்ளங்கின்னு சொல்லிக்கிறாங்கப்பா... அதா யோசனயாயிருக்கு... அது வெளியில தெரிஞ்சா வெளியில தலக்காட்ட முடியாதுப்பா...

அது ஒரு சாமாச்சரமே இல்லீங்க ஊர் பண்ணாடி... உள்ளூருல கட்டுனாதான் தாந்த சாதிப் பொண்ணு, காலனியூட்டுப் பொண்ணுன்னு தெரியும்... கேரளாவுல கட்டியாறதால தாந்த சாதியா ஒசந்த சாதியான்னு இங்கிருக்குறவங்களுக்கு எப்பிடித் தெரியப்போவுது? அதால கவலய உட்டுட்டு உம்பட பயலுக்கு ஒரு நல்ல காரியத்தப் பண்ணப்பாருங்க. நாளைக்கே நான் புரொக்கர அனுப்புறேன்.

வாங்க நம்ம பழனியப்பன் அனுப்புச் சாருங்கலா? ஒக்காருங்க காப்பித்தண்ணி வெக்கச் சொல்றேன். குடிச்சுட்டேப் பேசுவோம்.

ஆகட்டுமுங்க ஊர்பண்ணாடி

பழனிப்பன் எல்லாச் சமாச்சரமும் சொல்லி ருப்பாருங்கில்ல... நமக்னு ஒரே பய மட்டுந்தானுங்க. இருவுது குழிக்கி மேல காடு தோட்டமுன்னு இருக்குதுங்க. சொத்துபத்துக்கு ஒரு கொறயு மில்லீங்க. இந்தப் பய கொஞ்ச ஒழுங்கா படிச்சிருந் தாலோ, கவுருத பாக்கம கந்துக் கடக்கிச்சேவ நா அனுப்பியிருந்தாலோ, இந்நேரம் கண்ணால மாயிருக்குமுங்க... நாந்தா இப்புட்டுச் சொத்திருக்கே ஒத்தப்பயதானே வெசவாயத்த மட்டு பாத்தா போதுமுன்னு நெனச்சுட்டேனுங்க.

அதில்லாமக் கொஞ்சம் செல்லமாவேற வளத்துட்டேனுங்க. வயசுக்கோளாறுல தோட்டந் தோரவுல வேலக்கி வர்ற காலனியூட்டுப் பொண்ணுங்ககிட்டக் கொஞ்சம் அப்பிடி இப்பிடி நடந்தப்பவே ஒரு கண்ணாலத்த பண்ணி வைச்சிருக்கோனும். சின்னப் பயதானேன்னு நெனச்சது தப்பாபோச்சுங்க. அவனால சும்மா இருக்கமுடியாம மார்க்கெட்டுக்கு காய்கசும்புன்னு கொண்டு போரானுங்களா... அங்கேயும் கண்டபடி சுத்துறதா ஊரு பூரா ஒரே போச்சுங்க... இவன் நடடிவக்கை வெளியில தெரிஞ்சதாலே எம்பட சாதிசனத்துல ஆரு பொண்ணு குடுக்க மாட்டேங்குராங்க... நீங்கதா எப்படியாச்சு ஒரு ஏற்பாடு செஞ்சாகோனுமுங்க... இந்தாங்க பயலோட ஜாதகம்.

ஊர் பண்ணாடி... நீங்க இம்புட்டுதூரம் வெள்ளந்தியாப் பேசறதால என்னால எவ்ளோ சீக்கிரமா பாக்குனோமோ அவ்ளோ சீக்கிரமா பாக்குறேனுங்க... ஆனா கேரளாவுல தமிழ்நாட்டுக்குப் பொண்ணத் தர்றவங்க யாரும் ஜாதகத்தக் கேக்குறதில்லீங்க... பயலுக்கு சீக்கு கீக்கு ஏதாச்ச இருக்குதான்னு, டாக்டரு சட்டிவிகேட்டு தானுங்க மொதல்ல கேட்குராங்கோ...

உங்க பயல கூட்டிப்போயி ஒரு நல்ல டாக்டரு கிட்டக் காட்டி சீக்கில்லீன்னு சட்டிவிகேட்டு வாங்கியிடுங்க. அப்புறம் பொண்ணு பேருல சொத்த பாதிக்கிமேல எழுதி பத்தரம் போட்டுப் பதிவாபீசுல பதியோனுமுங்க... அதில்லாம, பொண்ணோட அம்மாவுக்கு நகை போடோனுங்க மச்சுனே, மாமேன்னு இருந்தா மோட்டார் பைக்கு வாங்கித் தாரோனுமுங்க... இல்லாட்டி மாமனாருக்கு வாங்கித் தாதோனுமுங்க...

அதுக்கெல்லாம் ஒத்துகிட்டாதாங்க ஜாத கத்தைப் பத்தி பேசுவாங்க ஜாதகப் பொருத்த மில்லீன்னாலும் பொண்ணக் கொடுப்பாங்க. அதவிட முக்கியம், தாந்த ஜாதிப்பொண்ணாத்தான் அமயுமுங்க... நீங்க கண்ணாலத்துக்குப் பின்னாடி நம்மளக் குத்தங்கொற சொல்லக்குடாதுங்க... இதயெல்லாம் பழனிப்பக் கவுண்ருக்குத் தெரியுமுங்க... உங்ககிட்ட சொன்னாரோ என்னமோ தெரியிலீங்க... அப்புறம் நமக்குண்டான கமிசன கரக்கெட்டாக் கொடுத்துடோனுமுங்க... பயலோட நடத்தவேற சரில்லீன்னு சொல்றீங்க... அதுக்குத் தோதா நான் பேசோனுமுங்க... கொஞ்சம் கமிசன சேத்திக்கொடுக்கோனுமுங்க.

சரி...சரி... வேற என்ன பண்றது? எப்படியோ எம்பட சொத்துக்கொரு வாரிசு வேணும். என்ன ஒரே வருத்தம் பரம்பர பரம்பரயா பாட்டெம் பூட்டெங் காலத்திலிருந்து கட்டிக்காப்பாத்துன ஜாதிக் கவுருததா போயிடும் போலிருக்குது... இதெல்ல என்னிக்கொரு நாளக்கி வெளியில தெரிஞ்சா காலனிக்காரங்கள சக்கிலி, பறயேன்னு மெரட்ட முடியாது... ஒரு பயலும் நம்ம ஊருப்பண்ணாடி யின்னு மதிக்க மாட்டான்... எம்பட கவுருதய நெனச்சாதான் வெசனமாயிருக்கு.





டாக்டர் **ஜெயசீலன்**
இலண்டன்

# இந்துமதச் சிந்தனைக் கழிவுகள் அழியாதவரை...

## கழிவுநீர்அகற்றல் – சுத்தீகரித்தல்முறை

(இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வட அயர்லாந்து)

**கழிவுநீர் என்றால் என்ன?**

நகர்ப்புறக் கழிவுநீர் சுத்திகரிப்பு இயக்குனரகம் *Urban Waste Water Treatment Directive (91/271/EEC)* என்பது ஐக்கிய ஐரோப்பிய நாடுகளின் நகர்ப்புறக் கழிவுநீர் சுத்திகரிப்பு இயக்குனரங்களில் ஒன்று. ஐக்கிய ஐரோப்பிய நாடுகளின் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் தேசிய அளவில் சட்டம் இயற்றி இந்த இயக்குனரகத்தின் கொள்கை முடிவுகளை நடைமுறைப்படுத்தவேண்டும். இந்த இயக்குனரகம், வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீர் (சமையலறை, குளியலறை, கழிவறை), வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுநீர் மற்றும் சாலைகளில் ஓடும் மழைநீர் என இவை அனைத்தும் கலந்த நீரினைக் கழிவுநீர் என வரையறுக்கிறது.

**ஏன் கழிவுநீரைச் சுத்திகரிக்க வேண்டும்?**

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வட-அயர் லாந்து ஆகிய மூன்று நாடுகளை உள்ளடக்கியது ஐக்கிய ராஜ்ஜியம். இங்கு கழிவுநீரில் உள்ள திடக்கழிவுகளின் சதவிகிதம் 0.1 % ஆக இருப்பினும், கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. ஏனெனில் இக்கழிவு நீர், ஆறு, குளம், கடல் போன்ற நீர்நிலைகளிலோ, விளைநிலங்களிலோ, குடியிருப்புப்பகுதிகளிலோ அல்லது சுற்றுப்புறங்களிலோ சுத்திகரிக்காமல் கலந்தால் அங்கு வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படும். சுற்றுச்சூழல் மாசு அடையும். நோய்நொடிகள் பெருகும். எனவே, கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. இங்கு கழிவுநீரிலுள்ள மாசினை (திடக்கழிவுகள், நுண்ணுயிர்க்கிருமிகள், தாதுப்பொருட்கள், நச்சுத் தன்மைகொண்டஇரசாயனங்கள்) அகற்ற பல்வேறு யுக்திகள் கடைபிடிக்கப் படுகின்றன.

பிறகு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மீண்டும் நீர்நிலைகளில் கலக்கப்பட்டு, நீர்நிலைகளின் தன்மை காக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்டபின் எஞ்சும் திடக்கழிவுகள் மீண்டும் விவசாய நிலங்களுக்கு உரமாகவோ, மண்ணில் ஆழ்குழி தோண்டிப் புதைக்கப்பட்டோ அல்லது எரியூட்டியோ அகற்றப்படுகிறது.

**கழிவுநீர்சேகரித்தல்:**

ஒவ்வொரு வீட்டின் கழிவறைகளும் அந்தந்த வீடுகளின் கழிவுநீக்கக் குழாய்கள் வழியாக, நேரடியாக, கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளோடு இணைக்கப் பட்டிருக்கும். வீடுகளையும், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளையும் இணைப்பதற்காக, 6,24,200 கீ.மீ. நீளம்கொண்ட பாதாளக்குழாய்கள் உள்ளன. இவை வழியாக நாள்தோறும் ஏறத்தாழ 100 கோடி (100,00,00,000) லிட்டர் தண்ணீர் சேகரிக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது. இதற்கென 9000 சுத்திகரிப்பு ஆலைகள் இயங்குகின்றன. ஒட்டுமொத்த இங்கிலாந்தின் 96 சதவீத மக்கள் தொகையினர் இவைபோன்ற கழிவுநீக்கும் தனியார் நிறுவனங்களின் சேவையால் பயன்பெறுகின்றனர்.

மீதமுள்ள 4 சதவீத மக்கள் தொகையினர், கழிவுநீர் கொண்டு செல்லும் பாதாளக் குழாய்களின் தடத்தில் இருந்து வெகுதூரத்தில் இருப்பதால் அவர்கள் தங்கள் வீட்டருகில் ஒருதொட்டி அமைத்துக்கொள்கின்றனர். அது நிரம்பும்போது, இதெற்கென உள்ள நிறுவனங்கள், இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீரை உறிஞ்சி எடுத்துச்சென்று சுத்திகரிக்கின்றனர். யாரும் குழிகளில் இறங்கி, கழிவுகளை அள்ளும் பழக்கம் இங்கு இல்லை.

**சுத்திகரிக்கப்படும்முறைகள்:**

**ஆயத்தநிலை:** பெரும்கற்கள், குப்பைகள் (நெகிழிப் பைகள், இலைகள், காகிதங்கள்) பிரித்தெடுக்கப் படுகிறது.

**முதல்நிலை:** கழிவுநீரில் உள்ள கரிம / உயிர்மக் கழிவுகள் படியவைக்கப் படுகின்றன.

**இரண்டாம்நிலை:** நுண்ணுயிரிகளைக் கொண்டு படியவைக்கப்பட்ட கரிம / உயிர்மக் கழிவுகள் மக்க வைக்கப்படுகின்றன.

**மூன்றாம்நிலை:** சுத்திகரிப்பு நிலையங்கள் மீதமுள்ள கழிவுநீரில் உள்ள காட்மியம், மெர்குரி, போன்ற கொடிய தாதுப்பொருட்களைப் பிரித்தெடுக் கின்றன.

இறுதியாக, சுத்திகரிக்கப்பட்ட நீரின் தூய் மையை அறிந்தபின் அவை ஆறுகளிலோ, கடலிலோ கலக்கப்படுகின்றன. மக்க வைத்த குப்பைகளில் உள்ள நுண்ணுயிர்கள் புறஊதாக் கதிர்கொண்டு அழிக்கப்படுகின்றன. பின்னர், அவை உரமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**குப்பைகள் சேகரித்தல்:**

ஒவ்வொரு வீட்டிற்கும் மக்கும் குப்பைகளுக்கு என ஒரு குப்பைத்தொட்டி, மறுசுழற்சி செய்யத் தகுந்த குப்பைகளுக்கென ஒரு தொட்டி, தோட்டக் கழிவுகளுக்கு என ஒருதொட்டி, கண்ணாடிப் பொருட்களுக்கென ஒருதொட்டி என நான்கு விதமான குப்பைத்தொட்டிகள் தரப்படுகின்றன. இருவாரத்திற்கு ஒருமுறை மக்கும் குப்பைகளும், மறுசுழற்சி செய்யத் தகுந்த குப்பைகளும் சேகரிக்கப்படும். தோட்டக்கழிவுகள் மாதம் ஒருமுறை சேகரிக்கப்படும்.

மக்கள் தங்களது குப்பைத்தொட்டிகளை அதற்குரிய அறிவிக்கப்பட்ட நாட்களில் வீட்டின்முன் வந்து வைத்துவிடுவர். சேகரிக்கவரும் குப்பை லாரியில் பொதுவாக மூவர் இருப்பர். ஒருவர் வாகன ஓட்டுனர். இருவர் குப்பைத்தொட்டிகளை வண்டியின் அருகில் தள்ளிவந்து வைக்கவும், கோப்பைகள் கொட்டியபின் அவற்றை மீண்டும் கொண்டுசெல்லவும் உதவுவர். அந்த உதவியாளர் களுக்குத் தகுந்த பாதுகாப்பு உடைகள் (high visibility Jacket, safety shoes etc.) காலணிகள், கைஉறைகள் வழங்கப்படும்.

**சாலைகளைத் துப்புரவு செய்தல்:**

சாலைகளைத் துப்புரவு செய்ய, துப்புரவுப் பணியாளர்கள் இருப்பார்கள். அவர்களுக்குக் குப்பைகளைக் கையில் தொடாமல் எடுக்கும் வகையில் நீண்டகோளில் இருவிரல் போன்ற அமைப்பு கொண்ட கருவி கொடுக்கப்படுகிறது. சாலைகளைச் சுத்தம்செய்ய, லாரியில் பிளாஸ்டிக் பிரஷ் பொருத்தப்பட்டு, அது சுழன்று சுத்தம் செய்கிறது. தேவைப்படும்போது தண்ணீரை அடித்தும் சுத்தம்செய்கிறது. சாலைப்பணியாளர் களுக்கும் மேற்சொன்னதுபோல் பாதுகாப்புக் கருவிகள் வழங்கப்படுகிறது. சாலைப் பணியாளர் களுக்கு அவர்கள் வேலைபார்க்கும் நிறுவனம் மிக அதிக அளவில் காப்பீடு வழங்குகிறது.

**பொதுவாகனங்களில் குப்பைகள் அகற்றும்முறை:**

பொது வாகனங்களில் குறிப்பாக இரயில் மற்றும் பேருந்துகளில், கழிவுகள் சேகரிக்கப்பட்டு இறுதியாகப் பேருந்து / ரயில்நிலையங்களில் இதெற்கென உள்ள துப்பரவுத் தொழிலாளர்கள் மின்இயந்திரங்களைக் கொண்டு உறிஞ்சி எடுப்பார். திடக்கழிவுகள் காகிதம், உணவுப்பொருட்கள் போன்றவை சேகரிக்கப்பட்டு அவை அனைத்தும் அதற்கென ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங் களால் எடுத்துச் செல்லப்படுகின்றன.

**வணிக வளாகங்களில் குப்பைகள் அகற்றும்முறை:**

வணிக வளாகங்களில் ஆங்காங்கு குப்பைத் தொட்டிகளும், துப்புரவுத் தொழிலாளர்களும் இருப்பார்கள். திடக்குப்பைகள் சேகரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்களால் எடுத்துச் செல்லப்படும். கழிவறைக் கழிவுகள் மேற்கூறியது போல் பாதாளச் சாக்கடைக்கு அனுப்பப்படும்.

குறிப்பாக இங்கிலாந்தில், ஜாதி கிடையாது என்பதால், இந்த ஜாதியினர் தான் இந்த வேலை பார்க்கவேண்டும் என்ற சிந்தனை இங்கு இல்லை. அனைவருக்கும், அவர்கள் செய்யும் தொழிலுக்குரிய மரியாதையை மக்கள் வழங்குவர். தொழில் அடிப்படையில் இழிவாகப் பார்க்கும் பண்பு இங்கு கிடையாது.

இங்கிலாந்தில் உள்ளது போன்ற சுத்திகரிப்பு நிலையங்கள், நவீன சுத்திகரிப்புக் கருவிகள், பணியாளர்களுக்குப் பாதுகாப்பு, உயர்ந்த சம்பளம், மருத்துவ உதவி என எல்லாமே இந்தியாவில் வந்துவிடலாம். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் தான் கழிவுகளை அகற்றவேண்டும்; அனைத்து ஜாதியினருக்கும் தொண்டு செய்வதற்காகவே தாழ்த்தப்பட்டோர் உள்ளனர் என்பன போன்ற பிறவிச் சிந்தனைகள்தான் இந்தியாவில் இந்து மக்களை ஆட்கொண்டுள்ளன. அந்த ஆதிக்க இந்துப் பண்பாட்டுக் கழிவுகளும், இந்துமதச் சிந்தனைக் கழிவுகளும் அழியாதவரை கருவி களாலும், நவீனங்களாலும் சமூக ஏற்றத்தாழ்வு களையும், இழிவுகளையும் அகற்ற இயலாது. கழிவு அகற்றும் துறையில் மாற்றமும் வராது.

Reference:
https://www.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/69592/pb13811-waste-water-2012.pdf





—தோழர் பெரியார்



# புத்த மதமும் சுயமரியாதையும்

சகோதரர்களே!

சுயமரியாதையும், புத்தமதமும் என்ற விஷயத்தைப்பற்றி பேசும் இந்தக் கூட்டத்தில் நான் பேசவேண்டியிருக்கும் என்று இதற்கு முன் நினைக்கவேயில்லை. இன்று நான் ரயிலுக்குப் போக சற்று நேரமிருப்பதாலும், தங்கள் சங்க செக்கரட்டரி என்னை இங்கு அழைத்ததாலும், இவ்விடம் நடக்கும் உபன்யாசத்தைக் கேட்டுப் போக வந்தேன். இப்போது திடீரென்று என்னையே பேசும்படி கட்டளையிட்டு விட்டீர்கள். ஆனபோதிலும் தங்கள் கட்டளையை மறுக்காமல் சிறிது நேரம் சில வார்த்தைகள் சொல்லுகின்றேன். அவை தங்கள் அபிப்பிராயத்திற்கு ஒத்ததாக இல்லையே என்று யாரும் மனவருத்த மடையக்கூடாது என்று முதலில் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏனெனில் இன்று பேசும் விஷயத்திற்கு, ‘சுயமரியாதையும், புத்தமதமும்’ என்று பெயரிட்டு இருப்பதால் அதைப்பற்றி பேசுகையில் என் மனதில் உள்ளதைப் பேசவேண்டியிருக்கும். பச்சை உண்மை யானது எப்போதும் மக்களுக்கு கலப்பு உண்மையை விட அதிகமான அதிருப்தியைக் கொடுக்கக் கூடியதாகவே இருக்கும். உண்மையை மறைத்துப் பேசுவது என்பது எப்போதும் பேசுகின்றவனுக்கும், பேச்சுக் கேட்பவர்களுக்கும் திருப்தியைக் கொடுக்க கூடியதாகவே இருக்கும்; திருப்தி உண்டாகும்படியும் செய்து கொள்ளலாம். ஆனால் உண்மை பேசுவதன் மூலம் அப்படிச் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் நான் என் கடமையைச் செய்கின்றேன் என்கின்ற முறையில் பேசுகின்றேன். பிறகு அது எப்படியோ ஆகட்டும்.

சகோதரர்களே ! சுயமரியாதையும், புத்தமதமும் என்பது பற்றிப் பேசுவதில் நான் முக்கியமாய்ச் சொல்லுவதென்னவென்றால் இன்ன மதந்தான் சுயமரியாதை இயக்கம் என்பதாக நான் ஒருக்காலமும் சொல்லமாட்டேன். அந்தப்படி என்னால் ஒப்புக்கொள்ளவும் முடியாது. இன்று காணப்படும் படியான எந்த மதமுமே கூடாது. அவை மனிதனுக்கு அவசியமும் இல்லை என்கின்ற கொள்கையையுடைய சுயமரியாதை இயக்கமானது எப்படித் தன்னை ஏதாவது ஒரு மதத்துடன் பிணைத்துக் கொள்ள சம்மதிக்க முடியும் என்பதை நீங்களே யோசித்து பாருங்கள்.

ஏனெனில் சுயமரியாதை இயக்கமானது ஒரு நாளும் யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக எதையும் ஒப்புக்கொள்ளக்கூடியதன்று. யார் சொன்னதாக இருந்தாலும் அது தன் பகுத்தறிவுக்கு பொறுத்தமாக இருக்கின்றதா? தனது அனுபவத் திற்கு ஒத்ததாக இருக்கின்றதா? என்பதைப் பார்த்துத் திருப்தியடைந்த பிறகே எதையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்கின்ற கொள்கையை யுடையது. அது எந்த மனிதனையும் அந்தப்படி பரீக்ஷித்த பிறகே எதையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்கின்றது.

அன்றியும் அது அந்தக்கொள்கையோடு அதன் நிபந்தனைக்குட்பட்டு யார் எதை சொன் னாலும் அதை யோசிக்கத் தயாராக இருக்கின்றது. அப்படிக்கில்லாமல் எந்த மதமாவது, எந்த நபராவது தான் அனுசரிக்கும் கொள்கையும், தான் சொல்லுவதும் இன்ன காலத்தில் இன்னார் மூலமாக இன்னார் சொன்னது என்பதாகவும், அதற்கு விரோதமாக யாரும் எதையும் சொல்லக் கூடாது என்பதாகவும், அதை யாரும் பரீக்ஷிக்கவும் கூடாது, அதைப்பற்றி சந்தேகமும் படக்கூடாது என்பதா கவும் யாராவது சொல்ல வந்தால் அது எந்த மதமானாலும், அது எப்படிப்பட்ட உண்மையா

னாலும் அதைச் சுயமரியாதை இயக்கம் ஒரு நாளும் ஒப்புக்கொள்ள முடியாது.

அன்றியும் கடவுள் சொன்னார், அவதாரக் காரர் சொன்னார், தூதர் சொன்னார் என்று சொல்லி ஒன்றைத் தங்கள் பகுத்தறிவுக்கு பொருத்திப் பார்க்காமல் ஒப்புக் கொண்டிருக் கின்றவர்கள் யெவரும் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் என்று சொல்லிக் கொள்ள சாத்தியப்படாது. அன்றியும் அவர்கள் தங்களைச் சுயமரியாதை உடையவர்களாக எண்ணிக் கொள்ளவுமாட்டார்கள்.

பழைய அபிப்பிராயங்கள் எல்லாம் அது ஏதுவானாலும் அடியோடு பரிசோதிக்கப்பட வேண்டும், பரிசோதிக்கச் சற்றும் பயப்படக்கூடாது. அப்படிப் பரிசோதிப்பதிலும் நடு நிலையிலிருந்தே பரிசோதிக்க வேண்டும். அந்தப்படி பரிசோதிக்கப் பின்வாங்குகின்றவன் யாராயிருந்தாலும் கோழையே யாவான்.

நமக்கு முன்னால் இருந்த மனிதர்களைவிட நாம் விஷேச அனுபவமும், ஞானமும் உடையவர் களென்று சொல்லிக் கொள்ளப் பாத்திய முடைவர்கள் என்பதை ஞாபகத்தி லிருத்தாதவன் மனிதத்தன்மை யுடையவனாக மாட்டான். ஏனெனில் முன் காலம் என்பதைவிட முன் இருந்த வர்கள் என்பதைவிட இந்தக்காலம் என்பதும், இப்போது இருக்கிறவர்கள் என்பவர்களும் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் அதிகமான சுதந்தரமும், சௌகரியமு முடையது, உடையவர்கள் என்பது ஒரு சிறு குழந்தையும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும். அன்றியும் இந்தக் காலம் அனுபவத்தின்மேல் அனுபவம் என்கின்ற முறையில் புதிய புதிய தத்துவங்கள் வளர்ந்து வந்த காலமுமாகும். மேலும் இப்போதுள்ளவர்கள் பல வழிகளில் இயற்கை யாகவே முற்போக்கும் அறிவு விளக்கமும், அனுபோகப் பயிற்சியும் பெற்று வருகிற சந்ததியில் பிறந்தவர்களுமாயிருக்கிறார்கள்.

ஆகவே இயற்கையாகவும் செயற்கையாகவும் முன்னோர்களைவிட நாம் எவ்விதத்திலும் அறிவிலோ, ஆராய்ச்சியிலோ, இளைத்தவர்கள் அல்ல என்பதையும் காலவேறுபாட்டிற்கும், கக்ஷி வேறுபாட்டிற்கும் தகுந்தபடி கருத்து வேறுபாடு அடையவேண்டிய உரிமையும் அவசியமுடைய வர்கள் என்பதையும் நாம் நன்றாக உணரவேண்டும்.

இந்த நிலையில் இருந்துகொண்டு நாம் பார்த்தோமானால் முன்னோர் சொன்னவைகள் என்பவற்றிற்கு எவ்வளவு மரியாதை கொடுக்கலாம் என்பது தானாகவே விளங்கிவிடும். நிற்க,

மற்றொரு விஷயம் என்னவென்றால், முன்னோர்கள் சொன்னவைகள் என்பவற்றிற்கு நம் கருத்துக்கள் ஒத்து இருக்கின்றனவா என்று பார்த்துப் பிறகு தான் நம் கருத்துக்களை உறுதிப்படுத்த வேண்டுமென்கின்றதான மனப்பான் மையையும் அடியோடு எடுத்தெறிய வேண்டும். ஏனெனில் முன்னோர் கருத்து என்பதற்காக நாம் எதற்கும் அடிமையாய் விடக்கூடாது என்பதற்காகத் தான் அப்படிச் சொல்லுகின்றேன். முன்னோர் கருத்துக்கு அடிமையாய்க் கொண்டுவந்தோமே யானால் உண்மையையும், அறிவு வளர்ச்சியையும் நாம் அடியோடு கொன்று விட்டவர்களாவோம். ஆதலால் புத்த மதம் தான் சுயமரியாதை இயக்கமென்று யாரும் சொல்லக் கூடாது என்று சொல்லுகிறேன்.

ஏனென்றால் உதாரணமாக, புத்த மதத்திற்குக் கடவுள் இல்லை, ஆத்மா இல்லை, நித்யமொன்று மில்லை என்கின்ற கொள்கை இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். இது புத்தரால் சொல்லப் பட்டது என்றும் சொல்லுகின்றார்கள். இதை உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம். இந்தக் கொள்கைகள் புத்தர் சொன்னார் என்பதற்காகத் தங்கள் புத்திக்குப் பட்டாலும் படாவிட்டாலும் பௌத்தர்கள் என்கின்றவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகின்றார்கள்.

இப்படியேதான் மற்ற மதக்காரர்களும் இந்துக்களோ, மகமதியர்களோ, கிறிஸ்தவர்களோ கடவுள் உண்டு ஆத்மா உண்டு நித்தியப் பொருள் உண்டு மனிதன் இறந்தபிறகு கடவுளால் விசாரிக்கப்பட்டு அதன் செய்கைக்குத் தகுந்தபடி மோக்ஷம், நரகம், சன்மானம், தண்டனை ஆகியவைகள் கடவுளால் கொடுக்கப்படுவது உண்டு என்பனபோன்ற பல விஷயங்களை நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கைகளுக்குக் காரணம் தங்களுக்கு முன்னேயே யாரோ ஒருவர் சொன்னதாக ஏதோ ஒன்றில் இருப்பதைப் பார்த்து நம்பிக்கொண்டு இருக்கின்றார்கள். இவை உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம். இந்த இரண்டு கூட்டத்தார்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தங்கள் தங்கள் பகுத்தறிவு, ஆராய்ச்சி, யுக்தி, அனுபவம் ஆகியவைகள் காரணமாகக் கொண்டிருக் கின்றார்கள் என்று ஏற்படுவதானால் இருதிரத் தாரும் சுயமரியாதை இயக்கக்காரர்களே யாவார்கள்.

ஏனெனில் கண்மூடித்தனமாய் முன்னோர் வாக்கு என்பதாக அல்லாமல் தங்கள் தங்கள் அறிவு, ஆராய்ச்சியின் பயனாய் ஏற்பட்ட அபிப்பிராயம் என்று சொல்லுகின்றவர்களாய் இருக்கின்றார்கள். ஆதலால் அவர்கள் சுயமரியாதைக்காரர்கள் ஆகின்றார்கள்.

உதாரணமாக புத்த மதஸ்தன் என்று சொல்லிக்கொள்ளுகின்ற ஒருவன் தனக்குக் கடவுள் இல்லை என்றும், ஆத்மா இல்லை என்றும், வாயால் சொல்லிக்கொண்டு காரணா காரியங்களுக்கு ஆதாரம் என்ன என்பதை அறியாமல் சந்தேகப் பட்டுக் கொண்டு இருப்பானானால் அவன் தன்னை புத்தமதஸ்தன் என்று சொல்லிக் கொள்ளமுடியவே முடியாது.

அதுபோலவே ஒரு இந்துவோ, இஸ்லா மானவரோ, கிறிஸ்தவரோ கடவுள் உண்டு என்கின்ற

மதக்காரராக இருந்து கொண்டு நடப்பில் தங்கள் காரியங்களுக்கும், அதன் பயனுக்கும் தங்களைப் பொறுப்பாக்கிக்கொண்டு தங்கள் காரியங்களுக்குப் பின்னால் பயன் உண்டு என்கின்ற கொள்கையையும் நம்பிக்கொண்டு அதற்குச் சிறிதும் கட்டுப்படாமல் நடந்து கொண்டும் இருக்கின்ற ஒருவன் தன்னை கடவுள் நம்பிக்கைக்காரன் என்றும் தனது ஆத்மா தண்டனையையும் சன்மானத்தையும் அடையக் கூடியது என்றும் நம்பிக்கொண்டிருக்கின்றவர்களாக மாட்டார்கள். ஆதலால் இந்த இரண்டு கூட்டத்தார்களும் சுயமரியாதைக்காரர்கள் அல்ல என்றும்தான் சொல்லுவேன்.

ஏனெனில் அவர்களுடைய அறிவுக்கும், அனுபவத்திற்கும் விரோதமான நம்பிக்கையை உடையவர்களாக இருக்கின்றார்கள். ஆதலால், இவ்விரு கூட்டத்தாரிலும் சுயமரியாதைக்காரர்கள் என்பவர்கள் தங்களுக்குத் தோன்றியவைகளும், தாங்கள் கண்ட உண்மைகளும் முன்னோர் கூற்றுக்கு ஒத்திருந்தால் மாத்திரம் முன்னோர் கூற்றம் ஆதரவாக எடுத்துக் கொள்ள பாத்தியமுடையவர்களாவார்கள். அப்படிக்கில்லாமல் முன்னோர் கூற்றுக்குத் தான்கூட உண்மையை பொருத்துகின்றவர்களும் அல்லது அதற்கு ஆதரவாகத் தங்களது உண்மை இருக்கின்றது என்று கருதுகின்றவர்களும் சுயமரியாதைக்காரராக மாட்டார்கள்.

ஆகையால் நீங்கள் எப்படிப்பட்ட கொள்கையை உடையவர்களாக இருந்தாலும் அதில் எவ்வளவு உண்மை இருப்பதாகயிருந்தாலும் அதை நீங்கள் பிரத்தியக்ஷத்தில் தெளிவுபடுத்திக் கொண்டீர்களா? அனுபவத்தில் சரிப்பட்டு வருகின்றதா? என்பதைப் பூரணமாய் அறிந்து கொண்டவர்கள் என்பதைப் பொருத்தும், அவை உங்களுடைய சொந்த அபிப்பிராயத்தின் மீது நம்புகின்றீர்களா? அல்லது அந்தந்த கொள்கையையுடைய மதத் தலைவர்கள் சொன்னதற்காக நம்பிக் கொண்டிருக்கிறீர்களா? என்பதைப் பொருத்துமே தான் உங்கள் மதத்திற்கோ, கொள்-கைக்கோ மதிப்பு கிடைக்கும் அப்படியில்லாமல் ஒருவன் தன்னை இந்து என்றோ, கிறிஸ்துவர் என்றோ, மகமதியர் என்றோ, பௌத்தர் என்றோ சொல்லிக் கொள்ளுகின்றவர் ஒரு நாளும் சுயமரியாதைக் காரராகமாட்டார்.

ஏனெனில் ஒரு குறிப்பிட்ட மதத்துக்காக ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதோடு அது தன்னுடைய நடைமுறைக்கு பிரத்தியக்ஷ அனுபவத்திற்கு ஒத்துவராதிருந்தும் அக்கொள்கைக்காரன் காரணாகாரியங்கள் அறிய முடியாமல் இருந்தும் அவற்றையுடைய ஒரு மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டிருப்பது என்பது சிறிதும் ஒப்புக் கொள்ள முடியாததாகும்.

**குறிப்பு :** சென்னை மவுண்ட்ரோட்டிலுள்ள தென்னிந்திய புத்தமத சங்கத்தில் 22.03.1931 அன்று ஆற்றிய உரை.

குடி அரசு – சொற்பொழிவு – 29.03.1931

7ஆம் பக்க தொடர்ச்சி

ஜல்லிக்கட்டு, சேவல் சண்டைகளையும் இப்படித்தான் பார்க்க முடியும். தரைப்பகுதியில் வாழ்ந்த மனிதர்களை வெல்வது நாகர்களின் பண்பாடு. மாடுகளை வெல்வது நமது பண்பாடு. மனிதனுக்கு ஒரு அளவுகோல். விலங்குக்கு ஒரு அளவுகோல் என இருக்க முடியாது. இரண்டுமே காட்டுமிராண்டித்தனங்களே.

நாட்டுமாடுகளை அழிக்கச் சதி என்று ஒரு இந்துத்துவக் கருத்தும் பரப்பப்படுகிறது. நாட்டு மாடுகளே இல்லாத நாடுகளில் கலப்பின மாடுகளைக் காக்க காளை - எருதுச்சமர்களைத் தடைசெய்யப் போராடுகின்றனர். நாட்டுமாடுகள், கலப்பின மாடுகள், நாட்டுச் சேவல், கலப்பினச் சேவல், நாய், பன்றி, பூனை, நரி, வாத்து என அனைத்து உயிரினங்களையும் காப்பாற்ற, உலகில் அவைகளுக்குள்ள உரிமைகளை நிலைநாட்ட உலகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்த பண்பாட்டு விளையாட்டுக்களில் புரளும் பலகோடி டாலர் வணிகத்தை இழக்க விரும்பாதவர்களும் - ஆதிக்க எண்ணங்களில் மிதப்பவர்களும் தேசிய அடையாளம், தேசியப் பண்பாடு என்ற பெயரில் மேற்கண்ட போராட்டங்களை எதிர்த்து வருகின்றனர். ஆதரவும், எதிர்ப்பும் உலகம் முழுவதும், அனைத்து தேசிய இனங்களிலும் நிகழ்ந்துகொண்டுதான் உள்ளன. ஏதோ இந்தியாவில் மட்டும், தமிழ்த்தேசியத்திற்கு மட்டும் வந்துள்ள சிக்கல் என்பது போல, தமிழர்களை உணர்ச்சி அடிப்படையில் தூண்டிவிடுவது சரியான போக்கு அல்ல.

**சான்றுகள்:**


1. 27. 11. 16 தீக்கதிர் நாளேடு
2. 25.09.2011 BBC.Com
3. The guardian 11.09.2016
4. Telegraph 28.06.2016
5. The guardian 11.09.2016
6. www.library.law.yale.edu/news/papal-bull-against-bullfighting
7. www.animanaturalis.org/p/883
8. ஜூன் *2008* Newstatesman
9. ஜூன் *2008* Newstatesman
10. Telegraph 02.01.2015
11. The Animal Welfare Board of India *ஏப்ரல் 2016*
12. The Animal Welfare Board of India *மே 2016*
13. 22.11.2016 தி தமிழ் இந்து)






# சாதிகளாலான இந்து மதத்தை அழித்தொழிக்க வேண்டும்

தோழர் அம்பேத்கர்



சாதியையும் தீண்டாமையையும் ஒழித்துக்கட்டும் பெரும்பணியில் எத்தனையோ பேர் இறங்கி இருக்கிறார்கள். ராமானுஜர், கபீர் போன்றவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய செயல்பாடுகளை எல்லாம் ஏற்கவும், அவற்றைப் பின்பற்றி நடக்குமாறு இந்துக்களைத் தூண்டவும் உங்களால் முடியுமா? ஸ்ருதியும் ஸ்மிருதியும் மட்டுமல்ல, சதாச்சாரமும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகளாகும் என்று மநு வலியுறுத்தி உள்ளார். இங்கு சாஸ்திரங்களை விட, சதாச்சாரத்துக்கே உயர்ந்த மதிப்பு தரப்பட்டு உள்ளது.

யத்யதாச்சர்யதே யேந் தர்மய வாடதர்மமேவ் வா : I
தேஸ்ஸ்யாசரண் நித்யம் சரித்ரம் தத்திகீர்திதம் : II

இதன்படி சதாச்சாரம் என்பது, தர்மமாயினும் அதர்மமாயினும், சாஸ்திரங்களோடு ஒத்துப் போனாலும் மாறுபட்டாலும் அதையே பின்பற்றி நடக்க வேண்டும். அப்படியானால், சதாச்சாரம் என்றால்தான் என்ன? சதாச்சாரம் என்பது சரியான செயல்கள் அல்லது நல்ல செயல்கள் - அதாவது நல்ல, நியாய உள்ளம் படைத்த மனிதர்களின் செயல்கள் என்று எவரேனும் நினைத்தால், அது முற்றிலும் தவறு.

சதாச்சாரத்தின் பொருள் அதுவல்ல; பழமையான பழக்க வழக்கங்கள் - அவை நல்ல தாயினும் கெட்ட தாயினும் - அதையே சதாச்சாரம் என்பர் :

யஸ்மின் தேசே ய ஆச்சார் : பாரம்பாயக்ரமாகத : I
வர்ணாநாம் கில் ஸர்வேஷஷம் ஸ ஸதாச்சார் உச்யதே : II

## கடவுள் சொல்லாததை செய்ய தடைவிதிக்கும் சாஸ்திரங்கள்

சதாச்சாரம் என்றால் நல்ல செயல்கள் அதாவது, நல்ல மனிதர்களின் செயல்கள் என்று புரிந்து கொண்டு அந்த நல்ல வழியிலே மக்கள் நடந்து விட்டால் என்ன செய்வது என்று பயந்து, வேறுவிதமாகப் புரிந்து கொள்வதற்கு இடமே வைக்காமல் சில கட்டளைகளை ஸ்மிருதிகள் பிறப்பித்து உள்ளன. அதாவது, ஸ்மிருதிகள், சுருதிகள், சதாச்சாரங்கள் ஆகியவற்றுக்கு எதிராக இருக்கும் பட்சத்தில், கடவுள்களின் நல்ல செயல்களே ஆனாலும், அவற்றை கூடப் பின்பற்றி நடக்கக் கூடாது என்று அந்தக் கட்டளைகள் இந்துக்களுக்கு விதித்துள்ளன. இது மிகவும் அசாதாரண மானதாக, மிகவும் வக்கிர மானதாகத் தோன்றலாம். ஆனால், தேவர்கள் சொல்வதை மனிதர்கள் செய்யக் கூடாது என்று இந்துக்களுக்கு சாஸ்திரங்கள் தடைவிதித்து உள்ளன என்பதே உண்மை.

சீர்திருத்தவாதியிடம் உள்ள இரண்டு ஆற்றல் வாய்ந்த ஆயுதங்களான பகுத்தறிவையும் ஒழுக்கத்தையும் அவன் பெறமுடியாமல் செய்வது என்பது, அவனை செயலற்றவனாக்குவதே ஆகும். பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் சாதிக்கும் உள்ள தொடர்பை எண்ணிப் பார்ப்பதற்கான சுதந்திரமற்ற நிலையில் மக்கள் இருக்கும்போது, நீங்கள் சாதியை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள்? சாதியமைப்பு என்கிற கோட்டையில் பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் இடமே இல்லை. அந்தக் கோட்டைக்குள்ளே இருப்பது பார்ப்பனப் படை. அது, அறிவாளி வர்க்கமாகவும் இந்துக்களின் பிறவித் தலைவனாகவும் உள்ள படை. அது வெறும் கூலிப்பட்டாளம் அல்ல. தன் தாயகத்துக்காக ஜீவமரணப்போராட்டம் நடத்தும் வீரப் பட்டாளம்.

இந்துக்களிடையே உள்ள சாதி அமைப்பைத் தகர்த்தெறிவது - ஏறக்குறைய அசாத்தியம் என்று நான் நினைப்பது ஏன் என்பது இப்போது உங்களுக்குப் புரியும். எப்படியானாலும், சாதி

அமைப்பு என்னும் கோட்டையில் பிளவு ஒன்றை ஏற்படுத்துவதற்கே யுகங்களாகும். சாதிய அமைப்பைப் பிளவு படுத்த நீண்டகாலம் ஆகும் என்றாலும் சரி அல்லது அந்தப் பெரும்பணியை வெகுவிரைவில் முடித்துவிடலாம் என்றாலும் சரி, நீங்கள் ஓர் உண்மையை மறக்கக்கூடாது.

சாதிக்கோட்டையில் பிளவு ஏற்படுத்த வேண்டுமென்றால், பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் ஒரு சிறிதும் இடம் கொடுக்காத வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் வெடி வைத்தே தீர வேண்டும். ஸ்ருதிகள் மற்றும் ஸ்மிருதிகளாலான மதத்தை அழித்தொழிக்க வேண்டும். வேறு எந்த செயலும் பயன் தராது. இதுவே என் முடிவான கருத்தாகும்.

"மதம் ஒழிக்கப்பட வேண்டும்" என்று நான் கூறினேன். நான் இப்படிக் கூறுவதன் தூபாருள் சிலருக்குப் புரியாமல் இருக்கலாம். சிலருக்கு கலகம் விளைப்பதாகத் தோன்றலாம். சிலருக்குப் புரட்சிகரமாகத் தோன்றலாம். ஆகவே, என் நிலைப் பாடு என்ன என்பதை விளக்கி விடுகிறேன். கொள்கை களுக்கும் விதிகளுக்கும் இடையே வேற்றுமை உண்டென்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா என்பதை நான் அறியேன். வேற்றுமை உண்டென்றே நான் எண்ணுகிறேன். அது மட்டுமல்ல; இந்த வேற்றுமை உண்மையானது, முக்கியமானதென்றும் நான் கூறுகிறேன். விதிகள் நடைமுறையை ஒட்டி யவை. ஏற்கனவே நிர்ணயித்தபடி நம் வேலைகளைச் செய்து முடிப்பதற்கான பழகிப்போன வழிமுறை களே அவை. கொள்கைகளோ அறிவு ரீதியானவை. ஒரு விசயத்தைப் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கும் சரியான முறைகள்; ஒருவன் ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கான வழிமுறை என்ன என்பதை விதிகள் விளக்கிக் கூறுகின்றன. கொள்கைகள் அப்படி எந்த ஒரு குறிப்பிட்ட வழிமுறையையும் விளக்கிக்கூறு வதில்லை.

**இந்து மதமா, சட்ட விதியா?**

விதிகள் சமையல் குறிப்புகளைப் போல. என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதை மட்டும் கூறுகின்றன. கொள்கைகள் (எடுத்துக்காட்டாக 'நீதி') ஒருவர் தன் விருப்பங் களையும் நோக்கங்களையும் எதை ஒட்டி அமைத்துக் கொள்வது என்ற பார்வைக் குறிப்பைத் தருகின்றன. ஒருவர் தன் பணியைச் செய்து முடிக்க முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியவை எவை? மனதிலே ஆழமாகப் பதியவைத்துக் கொள்ள வேண்டியவை எவை? என்பதில் ஒருவருடைய சிந்தனைக்கு வழிகாட்டுவது கொள்கை.

ஆக, விதிகளுக்கும் கொள்கைகளுக்கும் இடையே வேறுபாடு இருக்கிறது. அதாவது விதிப்படி செய்யும் செயலுக்கும் கொள்கைப்படி செய்யும் செயலுக்கும் இடையில் - அளவிலும் பண்பிலும் வேறுபாடுள்ளது என்பதே உண்மை. ஒரு கொள்கை தவறானதாக இருப்பினும் அந்தக் கொள்கை வழிநின்று செய்யும் செயல் மனமறிந்து செய்யப்படுவதும் பொறுப்புணர்ச்சியோடு கூடியதும் ஆகும். விதி என்பது சரியான தாக இருக்கலாம். ஆனால், விதிப்படியான செயல் எந்திரகதியில் ஆனது.

மதச் செயல்பாடு சரியான செயல்பாடாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், குறைந்த பட்சம் பொறுப்புணர்ச்சி உள்ள செயல்பாடாக அது இருந்தாக வேண்டும். இந்தப் பொறுப்புணர்ச்சி ஏற்பட வேண்டும் என்றால், மதம் கொள்கைகளால் மட்டுமே ஆனதாக இருந்தாக வேண்டும். விதிகளால் ஆனதாக இருக்க முடியாது. மதம் வெறும் விதிகளாகச் சீரழிந்து போகிற அந்தக் கணமே - அது மதம் என்று அழைக்கப்படுவதற்கான அருகதையை இழந்து விடுகிறது. ஏனென்றால், உண்மையான மதச் செயல்பாட்டின் சாரம்சமாகிய பொறுப்புணர்ச்சி யையே அது அழித்து விடுகிறது. இந்த இந்து மதம் என்பதுதான் என்ன? கொள்கைகளின் தொகுப்பா அல்லது விதிமுறைகளா?

வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லி யிருக்கிறபடி பார்த்தால் இந்து மதம் என்பது சடங்கு, சமூகம், அரசியல், சுகாதாரம் பற்றிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கலவையாகவே இருக்கிறது. இந்துக்களால் மதம் என்று சொல்லப்படுவது, எண்ணிலடங்காத கடமைகளும் கட்டுப்பாடுகளுமே தவிர வேறில்லை. எல்லா காலங்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் எல்லா மனித இனங்களுக்கும் ஏற்ற, உலக மக்கள் அனைவருக்கும் ஒத்துவரக்கூடிய ஆன்மீகக் கொள்கைகளாக இந்து மதம் இல்லை. ஒருவேளை அப்படியிருந்தாலும் கூட, அதுபோன்ற ஒரு கொள்கை இந்து மதத்தவன் ஒருவனின் வாழ்க்கையை வழிநடத்தக் கூடியதாக இல்லை. இந்து மதத்தவன் ஒருவனுக்கு 'தர்மம்' என்பது கடமை களும் கட்டுப்பாடுகளும்தான். தர்மத்தைப் பற்றி வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் கூறி இருப்பதையும் அவற்றிற்கு விளக்க உரைகள் எழுதியிருப்பவர்கள் அதைப் புரிந்து கொண்டிருக்கும் விதத்தையும் பார்த்தால் இது தெளிவாகும்.

வேதங்களிலும் பெரும்பாலும் தர்மம் என்னும் சொல், மதச் சட்டங்கள் - மதச் சடங்குகள் என்னும் பொருளிலேயே கையாளப்படுகின்றன. ஜெய் மினியும் கூட தன் 'பூர்வ மீமாம்சை' யில், "வேத விதி களின் மூலமாக வரையறுக்கப்பட்டுள்ள விரும்பத் தக்க லட்சியம் அல்லது பலனே தர்மமாகும்" என்று கூறுகிறார். அப்பட்டமாகச் சொன்னால், இந்துக்கள் 'மதம்' என்று அழைப்பது உண்க்ஷிமயில் சட்டங் களைத்தான் அல்லது சட்டமாக ஆக்கப்பட்டுள்ள வகுப்புவாரி நீதிநெறிகளைத்தான். வெளிப் படையாகச் சொல்ல வேண்டுமானால், இந்தச் சட்டங்களின் தொகுப்பை மதமென்று சொல்ல நான் மறுக்கிறேன்.

- சாதியை ஒழிக்கும் வழி என்ன? நூல்

Dr. A.B. ஃபரூக் அப்துல்லா
MBBS, FCPE(Endo), PG.Dip.Diab., IPPC (pediatrics) (Australia)
நலம் மருத்துவ மையம், சிவகங்கை

# சிறுதானியங்களே என்னை மன்னித்துவிடுங்கள்!



நம்மில் நீரிழிவு உள்ள சிலர் அரிசி, கோதுமைக்குப் பதிலாக ஒருவேளை உணவாக சிறு தானியங்களை எடுத்து வருகின்றனர்.

சிறு தானியங்கள் முதன் முதலில் கிழக்காசியாவில் (இதுவும் பண்டைய சீனா தான்) சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன் பயிரிடப்பட்டது. சிறுதானியங்கள் குறித்து பொதுவான மக்கள் நம்பிக்கை என்னவென்றால், ‘சிறுதானியங்கள் மாவுச்சத்துக் குறைவானவை’ மற்றும் ‘அவற்றில் நமக்குத் தேவையான சத்துகள் நிரம்பியுள்ளன’ என்பதே ஆகும். இந்தக் கட்டுரை நமது நம்பிக்கை சரியானதா என்று மறுமுறை ஆய்வு செய்ய வைக்கும்.




**நீரிழிவு கட்டுக்குள் வராது**

முதலில் மாவுச்சத்து கண்டெண்ட் கேப்பை எனும் ராகியை (Finger Millet) பொடியாக மில்லில் அரைத்து நம் மக்கள் ரொட்டி சுட்டுச் சாப்பிடுகிறார்கள். அதில் நூறு கிராமிற்கு 71 கிராம் கார்போ -ஹைட்ரேட் இருக்கிறது. தினை எனும் Foxtail millet ல் 100 கிராமிற்கு 57 கிராம் கார்போஹைட்ரேட் எனும் மாவுச்சத்து இருக்கிறது.

கம்பு எனும் Pearl millet ல் 100 கிராமில் 67 கிராம் மாவுச்சத்து இருக்கிறது. வரகு எனும் Kodo millet ல் 100 கிராமில் 86 கிராம் மாவுச்சத்து உள்ளது. குதிரை வாலி எனும் Barnyard millet ல் 100 கிராமிற்கு 67 கிராம் இருக்கிறது. சாமை எனும் Little millet ல் 100 கிராமில் 65 கிராம் இருக்கிறது.

ஆகவே சிறுதானியங்களை மூன்று வேளை உணவாக கேப்பை ரொட்டி, குதிரைவாலிச்சோறு என்று சாப்பிட்டாலும் நீரிழிவு கட்டுக்குள் வருமா என்றால் வராது என்பதே பதில்.

**சிறுதானியங்களில் வேறு என்ன பிரச்சனைகள் இருக்கின்றன?**

சிறுதானியங்களில் நமது உடலின் தைராய்டு சுரப்பியை நிலைகுலையச் செய்யும் பொருட்கள் அதிகமாக இருக்கின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன. தைராய்டு சுரப்பியை வீங்கச் செய்து முன்கழுத்துக் கழலைகளை உருவாக்கவல்ல பொருட்களுக்கு Goitrogens என்று பெயர். இந்த Goitrogens சிறுதானியங்களில் அதிகம் இருக்கின்றன. இவை என்ன செய்கின்றன?

நமது உடலில் உள்ள செல்களை ஐயோடின் எனும் உப்புச்சத்தை உட்கொள்ள விடாமல் செய்கின்றன. நமக்குத்தான் தெரியுமே... ஐயோடின் குறைபாட்டால், தைராய்டு சுரப்பி வீக்கம் ஏற்பட்டு முன்கழுத்துக் கழலை நோய் (Goitre) வருகிறது.

அதனால்தான் நாங்க ஐயோடின் கலந்த உப்புகளை பயன்படுத்துறோம். எங்களுக்கு அந்த தைராய்டு பிரச்சனை வராது என்று மார்தட்டி கொள்ள வேண்டாம். ஐயோடின் சரியான அளவு எடுத்துக்கொண்டு, அதிகமாக சிறுதானியங்கள் சாப்பிட்டாலும், தைராய்டு பிரச்சனை வரலாம். எப்படி?

நாம் சரியான அளவுகளில் ஐயோடினை உணவில் சேர்த்து வந்தாலும், நம் உடல் அந்த ஐயோடினை கிரகித்துக்கொள்ளவில்லையெனில் அதே முன்கழுத்து கழலை நோய் வர வாய்ப்பு உள்ளது.

சிறுதானியங்களில் ஃப்லேவனாய்ட்ஸ் (Flavanoids) எனும் உடலுக்கு ஒவ்வாத பொருட்கள் இருக்கின்றன. அவை பின்வருமாறு

1. Apigenin, 2. Luteolin, 3. Kaempferol, 4. Vitexin இவை நமது தைராய்டு சுரப்பியில் ஐயோடின் சேர்வதைத் தடுக்கின்றன. (Inhibit uptake of iodine by thyroid gland) அதனால் நமக்கு தைராய்டு குறைபாடு வர வாய்ப்பு அதிகம். கழலை வரவும் வாய்ப்புண்டு.


ஆப்பிரிக்கக் கண்டத்தின் சூடான் நாட்டில் டார்ஃபூர் என்ற மாவட்டத்தில் நடந்த ஒரு ஆய்வில் மூன்று இனமக்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் சிறுதானியங்களை அதிக அளவில் உண்டு வருகின்றனர் என்று அறியப்பட்டது. அவர்களது தினசரி கலோரிகளில் பின்வரும் சதவிகிதங்களில் சிறுதானியங்கள் வழியாகச் சேர்த்து வருகின்றனர்.

1. காஸ் (kas) இனம் தங்களது உணவில் 73.6% சிறுதானியம் உண்கின்றனர். 2. டவய்லா(tawaila) இனம் 66.7 % வழி சிறுதானியங்கள் உண்கின்றனர். 3. ந்யாலா (Nyala) இனம் 37.1% சிறுதானியங்கள் உண்டனர். அவர்களிடம் தைராய்டு சுரப்பி வீக்க நோய் (Goitre) இருப்பது அளவிடப்பட்டது. அதில் அதிர்ச்சியூட்டும் விசயங்கள் தெரிந்தன.

உலகில் பிறருக்கு தைராய்டு நோய் வருவதை விட இந்த இனங்களுக்கு அதிகமாக வருகிறது என்றும் இந்த மூன்று இனங்களுக்கு பெண்குழந்தைகளில், காஸ் இனத்தில் 75% பேருக்கும், டவய்லா இனத்தில் 55% பேருக்கும், ந்யாலா இனத்தில் 13% பேருக்கும் முன்கழுத்துக் கழலை நோய் வந்தது கண்டறியப்பட்டது.

ஐயோடின் உடலில் சேராமல் போவதால், கர்ப்பிணி பெண்களுக்குக் கருக்கலைய வாய்ப்பு அதிகம் (Abortion). புத்திக் குறைபாடு (Poor Intellect), அதனால் படிப்பில் ஆர்வமின்மை முதலியன வரும். மேலும் இந்தச் சிறுதானியங்களில், ப்ரோடியேஸை தடுக்கும் (Protease Inhibitors) பொருட்களும் இருக்கின்றன. அவை பின்வருமாறு:

1. Trypsin 2.chymotrypsin 3.cysteine 4. Alpha amylase 5. Steroidal saponins இந்த protease inhibitors நமது




கணையத்தை பாதிக்கக்கூடியது. சபோனின்ஸ் நமது குடலின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும். இதெல்லாம் சரிதான். ஆனால் சிறுதானியங்களில் கால்சியம் மற்றும் இரும்புச்சத்து இருக்கே? என்று கூறுபவர்களுக்காக...

சிறுதானியங்களில் இரும்பு, கால்சியம் நிறைய இருப்பது உண்மை தான். ஆனால் அந்தச் சத்துகளை நமது உடல் உள்வாங்கும் தன்மை மிகக் குறைவு. (Poor bio-availability) மேலும் சிறுதானியங்களில் Phytates @Phytic acid, Tannins (டீத்தூளில் இருக்கும் அதே பொருள் தான்) மிக அதிகம். இவை அந்தப் பொருட்களில் உள்ள சத்துக்கள் நமக்குக் கிடைக்காத வண்ணம் பார்த்துக்கொள்கின்றன.

பிறகு ஏன் இந்த தானியங்களில் இத்தனை சத்துகள் இருக்கின்றன? என்ற கேள்வி உங்களுக்கு எழுவது புரிகிறது. சிறுதானியங்களில் உள்ள இந்தச் சத்துகள் அனைத்தும் நமக்காகப் படைக்கப்பட்டவை அல்ல. கொரித்து உண்ணும் விலங்குகளான (Ruminants) அணில், எலி போன்றவற்றிற்காகப் படைக்கப்பட்டது. அவைகளின் வயிற்றில் Phytates ஐ செரிமானம் செய்யும் Phytase இருக்கின்றன. மனிதர்களுக்கு Phytase இல்லை.

இதையும் எலிகள் அளவுக்கு அதிகமாக உண்டால் அவற்றுக்கும் கழலை நோய் வருவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. சிறுதானியங்களை அளவுக்கு அதிகமாக உண்ட ஆடுகளுக்கும் கழலை நோய் வருகிறது.

**நமது முன்னோர்கள் சிறுதானியங்களைத் தானே உண்டனர்?**

சிறுதானியங்கள் பஞ்சத்திலும் இரு போகம் விளையும். பசுமைப் புரட்சிக்கு முன்னால் அரிசி, கோதுமையெல்லாம் அனுதினம் உண்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஆகவே ஒரு வேளை உணவாக இந்தத் தானியங்களை சேர்த்திருக்கலாம்.

இந்தியாவில் பத்தில் ஒருவருக்கு தைராய்டு குறைபாடு உள்ளது என்கிறது ஒரு செய்தி. இப்போது இந்தியா குறித்த தைராய்டு நோய் ஆராய்ச்சியில் , போதுமான அளவு ஐயோடினை மக்கள் உணவுகளில் (Even after taking sufficient iodine in their food, Number of people with goitre is in increasing trend) உட்கொண்டு வந்தாலும் கழலை நோய் வரும் சதவிகிதம் குறையவில்லை. ஆகவே , Goitrogens ன் (தைராய்டில் கட்டியை வரவைக்க கூடிய உணவுகள்) பங்கு குறித்து ஆய்வு நடத்த வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர். ஆகவே, சிறுதானியங்களே என்னை மன்னித்துவிடுங்கள்.

பிரபாகரன் அழகர்சாமி

# மாவீரன் சுசீந்திரன்



திராவிடர் கழகம் ஆண்டுதோறும் தை மாதத்தில் நடத்திவரும் திராவிடர் திருவிழாவில் கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு துறையை சேர்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து ‘பெரியார் விருது’ வழங்கிப் பாராட்டி வருகிறார்கள். திரைப்பட இயக்குனர் சுசீந்திரனும், திரைப்பட இசையமைப்பாளர் டி.இமானும் 2015ஆம் ஆண்டு பெரியார் விருது பெற்றனர். திரைப்படப் பாடலாசிரியர் யுகபாரதி 2016ஆம் ஆண்டு பெரியார் விருது பெற்றார். இந்த மூவருடைய கூட்டணியில் உருவாகி வெளியாகியிருக்கும் திரைப்படம்தான் ‘மாவீரன் கிட்டு’.

மாவீரன் கிட்டு திரைப்படத்தில், கிராமங் களில் நடக்கும் ஜாதியத் தீண்டாமை வன்கொடுமை களையும், ஆணவக்கொலைச் சம்பவங்களையும், அதிகாரத்தில் இருப்பவர்களிடம் மேலோங்கி யிருக்கும் ஜாதிய ஆணவப்போக்கையும் மிக அப்பட்டமாக, துணிச்சலாகப் பதிவு செய்திருக் கிறார் இயக்குனர். இந்தப் படத்தின் உரையாடல் களில், ஜாதியெதிர்ப்புக் கருத்துகளை மிகக்கூர்மை யாகத் தீட்டியிருக்கிறார் உரையாடல்களை எழுதியிருக்கும் கவிஞர் யுகபாரதி. படத்தின் தொடக்கக் காட்சியில் இருந்து இறுதிக்காட்சி வரை, ஜாதி எதிர்ப்பு என்கிற ஒற்றைக் குறிக்கோளின் மீதே முழு படத்தையும் கட்டியெழுப்பியிருக்கிறார் இயக்குனர்.

திரைப்படம் என்கிற வலிமைமிகுந்த ஊடகத்தில், ஜாதியக் கட்டமைப்புக்கு எதிரான கருத்துகளைக் கொண்ட திரைப்படங்கள் மிக அபூர்வமாகவே வருகின்றன. மிகச் சில படைப் பாளிகளே சமூக அக்கறைக் கொண்டவர்களாகவும், ஜாதியெதிர்ப்புக் கருத்துகளில் தீவிரப் பற்றுடையவர்களாகவும், தங்களது படைப்புகளில் தொடர்ந்து இதுகுறித்த பதிவுகளைத்துணிச்சலுடன் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். அப்படி அபூர்வமானவர்களில் ஒருவராக நமக்கு கிடைத்திருப்பவர் இயக்குனர் சுசீந்திரன்.

ஒரு திரைபடத்தை எடுத்து அதைப் பொதுமக்களிடம் பரவலாகக் கொண்டுச்சேர்ப்பது என்பது இன்று பல கோடிரூபாய்கள் புரள்கிற வணிகமாக இருக்கிறது. வணிகரீதியாக வெற்றிப் பெற்று லாபம் ஈட்டக்கூடிய ஒரு படத்தில் முதலீடு செய்யத்தான் தயாரிப்பாளரில் இருந்து திரையரங்க உரிமையாளர்வரை ஆர்வம் காட்டுகிறார்கள். பார்வையாளர்களைத் திரையரங்குக்கு வரவைப் பதற்கும் வெற்றிப்பட இயக்குனர் என்கிற அடையாளம் தேவைப்படுகிறது. ஒரு திரைப்பட இயக்குனர், தன்னை வணிகரீதியான வெற்றி யாளராக நிலைநிறுத்திக்கொள்வது இங்கு மிகவும் அவசியமானதாக இருக்கிறது.

இதை நன்கு உணர்ந்தவராக இருக்கிறார் சுசீந்திரன். இதுவரை, வெண்ணிலா கபடிக் குழுவில் தொடங்கி மாவீரன் கிட்டு வரை மொத்தம் 9 படங்களை இயக்கியிருக்கிறார். அதில், நான் மகான் அல்ல, ராஜபாட்டை, பாண்டிய நாடு, பாயும் புலி ஆகிய படங்கள் முழுக்க வணிகரீதியான வெற்றியை நோக்கமாக கொண்ட படங்கள்.

அந்தப் படங்களில் ஏற்றுக்கொள்ளமுடியாத சில கருத்துகள் நமக்கு இருக்கக்கூடும். எனவே அந்தப் படங்களை நாம் தற்போதைய அலசலுக்கு எடுத்துக்கொள்ளாமல் தவிர்த்துவிடலாம். இயக்குனர் சுசீந்திரன் சமீபத்தில் ஒரு நேர்காணலில், தன்னுடைய படங்களில், வெண்ணிலா கபடிக் குழு, அழகர்சாமியின் குதிரை, ஆதலால் காதல் செய்வீர், ஜீவா, மாவீரன் கிட்டு ஆகிய படங்கள் தனி வகை என்றும், இவை வணிகரீதியான வெற்றியை மட்டுமே நோக்கமாகக் கொண்ட படங்கள் அல்ல என்றும் குறிப்பிட்டிருந்தார்.

தன்னுடைய முதல் படமான வெண்ணிலா கபடிக் குழு என்கிற திரைப்படத்திலேயே, கிராமங்களில் நிலவும் ஜாதியச்சமூக அமைப்பைப் பின்னணியாகக் கொண்ட கதைக்களத்தை அமைத்திருப்பார். படத்தில் நாயகன் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். ஜாதிரீதியான ஒதுக்குதலுக்கு அவர் ஆளாவதைச் சில காட்சிகளிலும், வசனங்களிலும் காட்டியிருப்பார். திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் நடக்கும் கபடிப் போட்டியில், தன் அணியின் வெற்றிக்கு காரணமானவராக நாயகன் இருப்பார். ஜாதிரீதியான ஒதுக்குதலுக்கு உள்ளானவர்தான், தன் அணியின் வெற்றிக்கு காரணமானவராகவும், அதற்காக தன் உயிரையும் கொடுத்தவராகவும் கதையை அமைத்திருப்பார்.

தமிழில் தலித் வாழ்வியலை ஓரளவுக்குத் தொட்டுக்காட்டிய படமாக இது பலரால் பாராட்டப்பட்டது. குறைந்த முதலீட்டில் எடுக்கப்பட்டு, வணிக ரீதியான பெரும் வெற்றிப்படமாக இந்தப் படம் விளங்கியது. தன்னுடைய முதல் படத்திலேயே, ஜாதிய சமூகச் சிக்கலை ஓரளவேனும் காட்சிப் படுத்தியதும், கதையின் நாயகனாக தலித் சமூகத்தை சேர்ந்த கதாபாத்திரத்தை அமைத்ததும் இயக்குனர் சுசீந்திரன் கொண்டிருக்கும் துணிச் சலுக்கும் சமூக அக்கறைக்கும் முதல் சான்றாகும்.

சுசீந்திரனின் மூன்றாவது திரைப்படம் அழகர்சாமியின் குதிரை. அவருடைய முந்தைய இரண்டு திரைப்படங்களும், பொழுதுபோக்கு, விறுவிறுப்பு போன்ற அம்சங்களைப் கொண்டிருந்தன. பெரிய அளவிலான வணிக வெற்றியையும் பெற்றிருந்தன. அவற்றில் இருந்து முழுவதும் வேறுபட்டு, கதாநாயகனுக்கு உரிய இலட்சணமாக தமிழ் சினிமா நிறுவியிருக்கும் அத்தனையையும் புறக்கணித்து, கதையையும் கதைக்களத்தையும் மட்டுமே நம்பி எடுக்கப்பட்ட படம் அழகர்சாமியின் குதிரை. எழுத்தாளர் பாஸ்கர் சக்தியின் சிறுகதை ஒன்றை கதைக்கருவாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம். 1980 களின் காலக்கட்டத்தில், ஒரு பின்தங்கிய கிராமத்தில் நடப்பதாக அமைக்கப்பட்ட கதை.

கோயில் திருவிழாவின் போது சாமி வலம் வருவதற்காகச் செய்துவைக்கப்பட்டிருந்த மரக் குதிரை காணாமல் போய்விடுகிறது. அந்த சமயத்தில், ஊருக்குப் பக்கத்தில் இருக்கும் மலையில் இருந்து ஒரு நிஜக் குதிரை வழிதவறி ஊருக்குள் வந்து விடுகிறது. சாமியின் குதிரைதான் நிஜக்குதிரையாக அவதாரம் எடுத்து வந்துவிட்டதாக ஊர்மக்கள் நம்பி வழிபடுகிறார்கள்.அந்த நிஜக்குதிரைக்கு சொந்தக் காரர் வந்து கேட்கும்போது குதிரையைக் கொடுக்க மறுக்கிறார்கள். கிராமங்களில் நிலவும் பல்வேறு மூடநம்பிக்கைகளை நகைச்சுவைக் கலந்து கேள்விக் குட்படுத்தியிருப்பார் இயக்குனர்.

படத்தின் கிளைக்கதைகளின் ஒன்றாக, அந்த ஊரிலேயே பகுத்தறிவுக் கருத்துகளைக் கொண்டிருக்கும் இளைஞர்கள் குழு ஒன்று இருக்கும். அந்தக் குழுவில் இருக்கும் ஒருவருக்கும், அதே கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்குமான காதல் கதையும் அந்தக் காதலுக்கு எதிராக ஜாதி குறுக்கே நிற்பதையும் காட்டியிருப்பார் இயக்குனர்.

தமிழகமெங்கும் பல ஆயிரம் கிராமங்களில், பெரியாரிய இயக்கங்களின் தோழர்கள் இளைஞர்கள் சின்னஞ்சிறு குழுவாகவாவது இருக்கிறார்கள். ஆனால் சமகால தமிழ் இலக்கியத்திலும், தமிழ் சினிமாவிலும் பெரியாரிய இயக்கத்தை சேர்ந்தவர்கள் குறித்த கதாப் பாத்திரங்கள் மிக மிக அரிதாகவே இடம் பெற்றிருக்கின்றன. அந்த வகையில் பார்க்கும்போது, அழகர்சாமியின் குதிரை படத்தின் இரண்டாவது கதாநாயகனாக வருகின்ற இளைஞரும் அவருடைய நண்பர்களும் மூடநம்பிக்கைகள் மண்டிய அந்த கிராமத்திலேயே பகுத்தறிவுக் கருத்துகளும், ஜாதி மறுப்புக் கருத்துகளும் கொண்டிருப்பவர்களாகக் காட்டியிருப்பது, பெரியாரிய இயக்கங்கள் குறித்த ஒரு சிறு அங்கீகாரமாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சுசீந்திரன் இயக்கத்தில் வெளிவந்த ஐந்தாவது திரைப்படம் ஆதலால் காதல் செய்வீர் என்கிற திரைப்படம். தமிழில் வெளிவரும் திரைப் படங்களில், கிட்டத்தட்ட நூறு விழுக்காடு திரைப் படங்கள் ஆண்-பெண் காதல் கதைகளை மய்யமாகக் கொண்ட திரைப்படங்கள்தான். அதிலும், பள்ளி மாணவர்களுக்கு இடையே நடக்கும் விடலைத் தனமான காதல் கதைகளைக் கொண்ட திரைப் படங்களும் கடந்த இருபது ஆண்டுகளில் நிறைய வந்துவிட்டன. அவற்றில் சில வணிகரீதியான வெற்றியையும் பெற்றுவிட்டன.

சமூக அக்கறை கொண்ட இயக்குனரான சுசீந்திரன், பதின்பருவத்து பள்ளி மாணவர்களுக்கு இடையே நடக்கும் காதலை புனிதப்படுத்தாமல், அந்த வயதுக்கே உரிய விடலைத்தனமும் உடற் கவர்ச்சியின் மீதான ஈர்ப்பும் அதனால் ஏற்படுகிற

விபரீதமான முடிவும் என்னவென்று சொல்லும் விதமாக இந்த படத்தின் கதையை அமைத்திருக்கிறார்.

என்னுடைய நண்பர்கள் சிலர், சுசீந்திரனின் இந்தப் படம் காதலுக்கு எதிரான ஒரு படம் என்ற ஒரு எதிர்மறையான விமர்சனத்தை கொண்டிருக்கின்றனர். ஜாதிய உறவுமுறைக்கு எதிரான ஒரு செயல்பாடாகக் காதல் திருமணங்களை நாம் ஆதரிக்கிறோம் என்றாலும், அதற்காக பதின்பருவத்துப் பள்ளி மாணவர்களுக்கு இடையே நடக்கும் பாலியல் ரீதியான ஈர்ப்பை, புனிதப்படுத்த வேண்டிய தில்லை. அந்த வகையில், தமிழ் சினிமா காலங்காலமாக காதல் என்பதன் மீது கட்டியெழுப்பியிருக்கும் தெய்வீகம், புனிதம் போன்ற பிம்பங்களுக்கு எதிரான ஒரு படமாக சுசீந்திரனின் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் ஆதலால் காதல் செய்வீர் என்கிற படத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இயக்குனர் சுசீந்திரனின் ஏழாவது திரைப்படம் ஜீவா. விளையாட்டுப் போட்டிகளைக் கதைக் களமாகக் கொண்டு மிகச்சில திரைப்படங்கள்தான் தமிழில் வந்திருக்கின்றன. பொதுவாக நாயகன் ஒரு விளையாட்டு வீரனாக இருப்பார், அவருக்குக் கதைப்படி சில எதிரிகள் இருப்பார்கள். அவர்கள் அவனை விளையாட்டுப் போட்டியில் தோற்கடிப்பதற்கான சதிவேலைகளில் ஈடுபடுவார்கள். அவன் அந்தச் சதிச்செயல்களை முறியடித்து கடைசியில் வெற்றிபெறுவார். இப்படித்தான் பெரும்பாலான படங்கள் எடுக்கப்பட்டிருகின்றன.

இவற்றில் இருந்து வேறுபட்டு, இந்தியாவில் எல்லா துறைகளையும் போல, விளையாட்டு துறையிலும் ஜாதி எப்படி ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை அப்பட்டமாக துணிச்சலுடன் பேசிய படம் தான் ஜீவா.

இந்தியாவில் மிகப் பிரபலமான விளையாட்டாக இருக்கிற கிரிக்கெட் விளையாட்டில், எப்படி பார்ப்பனர்கள் கோலோச்சுகிறார்கள் என்பதை எந்தவிதச் சமரசமும் இல்லாம் பதிவு செய்ய துணிந்ததற்காகவே இயக்குனர் சுசீந்திரனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

படத்தில் மிக முக்கியமான காட்சி என்னவென்றால், மாநில அளவிலான ஒரு போட்டியில் வெற்றி பெற்ற அணியை சேர்ந்த நாயகன் ஜீவாவிற்கு பரிசு வழங்கும் போது, கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக இருக்கும் பார்ப்பனர், நாயகனின் முதுகைத் தடவி பூணூல் அணிந்திருக்கிறாரா என்று பார்ப்பார். இப்படி ஒரு காட்சியை ஒரு வணிக சினிமாவில் வைக்க எத்தனை பெரிய துணிச்சலும் நேர்மையும் இருக்க வேண்டும் என்பதை எண்ணி வியக்கிறோம்.

இயக்குனர் சுசீந்திரனின் ஒன்பதாவது படமாக சமீபத்தில் வெளிவந்திருக்கும் 'மாவீரன் கிட்டு', அவருடைய அழுத்தமான சமூக அக்கறைக்கும் சமரமற்ற நேர்மைக்கும் இன்னும் ஒரு




நற்சான்றாக விளங்குகிறது. ஜாதிய சமூகக் கட்டமைப்பிற்கு எதிரான கருத்துகளைத் தாங்கிய படைப்புகள் அவ்வப்போது சின்ன அளவிலேனும் வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றன.

வழக்கமான கதையமைப்புக்குப் பின்னணியில் ஜாதியப் பிரச்சனைகளைத் தொட்டுச் செல்கின்ற படங்களாக அவற்றுள் பலவும் அமைந்து விடுகின்றன. அந்தப் படங்களின் இயக்குனர்களும் நம்முடைய பாராட்டுகளுக்கு உரியவர்கள்தாம். இயக்குனர் சுசிந்திரனின் சமீபத்திய திரைப்படங்களான, ஜீவாவும் மாவீரன் கிட்டுவும், ஜாதியச் சிக்கலையே மய்யப்பொருளாகக் கொண்டு எடுக்கப்பட்ட படங்களாகும்.

இந்த இரண்டு படங்களின் கதைகளிலும், பார்வையாளர்களுக்கு எந்த குழப்பமும் ஏற்படாமல், 'ஜாதி' என்பதைத்தான் கதையின் வில்லனாக சித்தரிக்கப் பட்டிருக்கிறது. கதாநாயகனுக்கு படத்தில் தொல்லைக்கொடுப்பவர்களாக தனிநபர்கள் இருந்தாலும், அதற்கு காரணமாக 'ஜாதி'தான் இருக்கிறது என்பதை அய்யங்களுக்கு இடமில்லாமல் சொல்வதில் இயக்குனர் உறுதியாக இருந்திருக்கிறார்.

தமிழ்சினிமாவில் பெரும்பாலும், கதாநாயகர்கள் பல்வேறு வீரதீரச் செயல்களை செய்பவர்களாக, பல வில்லன்களை அடித்து துவம்சம் செய்யக்கூடியவர்களாக, எதிரி எவ்வளவு வலிமை மிகுந்தவனாக இருந்தாலும் தன்னுடைய அறிவின் நுட்பத்தாலும், உடல் வலிமையாலும் அவர்களை தோற்கடிக்கும் வீரனாக சித்தரிக்கப்படுவார்கள்.

அத்தகைய போலித்தனத்தை ஒதுக்கிவிட்டு, யார் உண்மையான மாவீரனென்றால், இந்திய சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் ஜாதி என்கிற மிகப்பெரிய எதிரிக்கு எதிரான போராட்டத்தில் தன் உயிரையும் கொடுக்க துணிந்தவனே மாவீரன் என்கிறார் இயக்குனர் சுசீந்திரன்.

அந்த வகையில் பார்க்கும்போது, திரைப்படம் என்கிற வலிமை மிகுந்த ஊடகத்தில், சமூகமாற்றத்திற்கான முற்போக்கான கருத்துகளையும், இன்னும் குறிப்பாக ஜாதி என்னும் சமூக அநீதிக்கு எதிரான படைப்புகளைத் துணிச்சலுடனும் நேர்மையுடனும் கொடுக்கிற இயக்குனர் சுசீந்திரனும் நம்முடைய பாராட்டுகளுக்கும் நன்றிகளுக்கும் உரிய மாவீரனே! ஜாதி என்கிற எதிரியை வீழ்த்துவதற்கு இன்னும் பல மாவீரர்கள் உருவாகட்டும்!



# ‘காட்டாறு’ நடத்திய
# “நான் இந்துவாகச் சாகமாட்டேன்”
# நூல் அறிமுகவிழா

**11.12.16 – திண்டுக்கல்**









காட்டாறு

# ‘திராவிடர் பேலியோ’

## வாழ்வியல் அறிமுகவிழா

## DRAVIDIAN PALEO LIFE STYLE

**பேலியோ டயட்**

நிபுணர்களின் கருத்துக்கள்
மருத்துவர்களின் ஆலோசனைகள்
அனுபவப் பகிர்வுகள்
கேள்வி – பதில்கள்
பேலியோ உணவுக்கான
பொருட்கள் விற்பனை

**08.01.17**
ஞாயிறு மாலை
5 மணி,
வி.ஜி.எஸ். அரங்கு,
திண்டுக்கல்.

**சிறுதானிய–
நவதான்யங்களால்
நலிந்தது போதும் !
புலால் புரட்சியால்
புதிதாவோம் !!**



தொடர்புக்கு:
இராவணன்
97868 89325
kaattaaru2014@gmail.com

அனுமதி இலவசம். வருகையை முன்கூட்டியே உறுதிப்படுத்துங்கள்.

Owner and Publisher by : S.Vijayaragavan 99762 56821
Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com